V. N. A.

94

674

# சீகாளத்திபுராணம்

வசனம்

MADRAS 28 JAN 1934



L. ராமைய்ய நாயுடு,

புக்செல்லர், காளாஸ்திரி.

சென்னை

மனோரஞ்சனி அச்சுக்கூடத்திற்

அச்சிடப்பட்டது.

1933.

[ரிஜிஸ்டர் காபி ரைட்.] [விலை அணா 8.

# சீகாளத்தி புராணம்.


சிவப்பிரகாச சுவாமிகள்

பூவை - கலியாணசுந்தர முதலியார்

இயற்றியது.



6241

OFFICE OF THE REGISTRAR OF ...

29 JAN 1934

MADRAS



L. ராமைய்ய நாயுடு,

புக்செல்லர், காளாஸ்திரி.

சென்னை

சௌகார்பேட்டை

மனோரஞ்சினி அச்சுக்கூடத்திற்

அச்சிடப்பட்டது.

1933.



ரிஜிஸ்டர் காபி ரைட்.

# சருக்க அட்டவணை.

—— : o : ——


| | | பக்கம் |
|---|---|---|
| திருக்காளத்தித் தேவாரம் | ... | 5 |
| திருக்காளத்தித் திருப்புகழ் | ... | 12 |
| நைமிசாரணியச் சருக்கம் | ... | 17 |
| விடசங்கமச் சருக்கம் | ... | 19 |
| தென்கைலாயச் சருக்கம் | ... | 25 |
| பொன்முகரிச் சருக்கம் | ... | 29 |
| நான்முகச் சருக்கம் | ... | 35 |
| சீகாளத்திச் சருக்கம் | ... | 42 |
| வாயுபூசித்த சருக்கம் | ... | 47 |
| நக்கீரச் சருக்கம் | ... | 48 |
| கண்ணப்பச் சருக்கம் | ... | 58 |
| கன்னியர்ச் சருக்கம் | ... | 71 |
| கைலாசசிகரச் சருக்கம் | ... | 80 |
| வித்தியாபீடப் பருவதச் சருக்கம் | ... | 82 |
| ஞானப்பூங்கோதை மகிமைச் சருக்கம் | ... | 84 |
| கனகதுர்க்கைச் சருக்கம் | .... | 86 |
| முனிவர் சம்வாதச் சருக்கம் | ... | 87 |
| பேதாபேதச் சருக்கம் | ... | 89 |
| தாளவிருட்ச சருக்கம் | ... | 91 |


## தீர்த்தச் சருக்கங்கள்.


| | | |
|---|---|---|
| சகஸ்த்ர தேவதா தீர்த்தம் | ... | 93 |
| மார்க்கண்டேயர் தீர்த்தம் | ... | 95 |
| வேத தீர்த்தம் | ... | 96 |
| இராம தீர்த்தம் | ... | 97 |
| சக்கர தீர்த்தம் | ... | 98 |
| சக்தி தீர்த்தம் | ... | 99 |
| மிருத்தியுஞ்சய தீர்த்தம் | ... | 100 |
| பாசவிச்சேதக தீர்த்தம் | ... | 102 |
| நீலகண்ட தீர்த்தம் | ... | 104 |
| தத்துவப்பிரகாச தீர்த்தம் | ... | 104 |
| சந்திர தீர்த்தம் | ... | 107 |
| சூரிய புஷ்கரணி தீர்த்தம் | ... | 108 |
| தலவிசேட சருக்கம் | ... | 111 |



சருக்க அட்டவணை முற்றிற்று.

573

85746



சிவமயம்.



ஸ்நான காலத்தில் செய்யும்

## ம ந் தி ர ம்.

சுலோகம்.

சுத்திக்ஷேம சிவாபேக்ஷி சுவர்ண முகரீம் சுபாம்
அகஸ்தியாசல சம்பூதாம் தத்பூர்வோ ததிகாமினீம்
சமஸ்தபாப ஹந்த்ரீமத்வா மஹம்ஸ்நாதும் சமாஸ்ரயே
மஹாபாதக சம்ப்லுஷ்டம் காத்ரம் மமசுபோதகை:
க்ஷாளயாமி ஜகத்தாத்ரீ ஸ்ரேயசா பூர்வயஸ்யமாம்.

## స్నానకాల మంత్రము.

శ్లో॥ శుద్ధిక్షేమ శివాపేక్షీ సువర్ణ ముఖరీం శుభాం
అగస్త్యాచల సంభూతాం తత్పూర్వోదధిగామినీం
సమస్తపాప హంత్రీంత్వా మహంస్నాతుం సమాశ్రయే
మహాపాతక సంప్లుష్టం గాత్రం మమ శుభోదకైః
క్షాళయామి జగద్ధాత్రీ శ్రేయసా పూర్వయస్యమాం.

உ

சிவமயம்.


# சிவாஷ்டோத்தர ஸதநாம பூஜை.

ஓம் சிவாயநம: ஓம் மகேஸ்வராயநம: ஓம் சம்புவேநம: ஓம் பிநாகிநேநம: ஓம்ஸஸிசேகராயநம: ஓம்வாமதேவாயநம: ஓம் விருபாக்ஷாயநம: ஓம் கபர்தினேநம: ஓம் நீலலோஹிதாயநம: ஓம் சங்கராயநம: ஓம் சூலபாணியேநம: ஓம் கட்வாங்கினேநம: ஓம் விஷ்ணுவல்லபாயநம: ஓம் சிபிவிஷ்டாயநம: ஓம் அம்பிகாநாதாயநம: ஓம் ஸ்ரீகண்டாயநம: ஓம் பக்தவத்ஸலாயநம: ஓம் பவாயநம: ஓம் சர்வாயநம: ஓம் த்ரிலோகேஸாயநம: ஓம் ஸிதிகண்டாயநம: ஓம் ஸிவாப்ரியாயநம: ஓம் உக்ராயநம: ஓம் கௌமாரயேநம: ஓம் அந்தகாசுரசூதநாய நம: ஓம் கங்காதராய நம: ஓம்லலாடாக்ஷாய நம: ஓம் கால காலாயநம: ஓம் க்ருபாநிதயேநம: ஓம் பீமாயநம: ஓம் பரசுஹஸ்தாயநம: ஓம் ம்ருகபாணயேநம: ஓம் ஜடாதராயநம: ஓம் கைலாஸவாஸிநேநம: ஓம் கவசிநேநம: ஓம் கடோராயநம: ஓம் த்ரிபுராந்தகாயநம: ஓம் வ்ருஷாங்காயநம: ஓம் வ்ருஷ்பரூடாயநம: ஓம் பஸ்மோத்தூளிதவிக்ரஹாயநம: ஓம் ஸாமப்ரியாயநம: ஓம் ஸ்வரமயாயநம: ஓம் த்ரிமூர்த்தயேநம: ஓம் அநீஸ்வராயநம: ஓம் ஸர்வக்ஞாயநம: ஓம் பரமாத்மநேநம: ஓம்சோமசூர்யாக்நிலோசநம: ஓம் ஹவிஷேநம: ஓம் யக்ஞமயாயநம: ஓம் சோமாயநம: ஓம் பஞ்சவக்த்ராயநம: ஓம் ஸதாசிவாயநம: ஓம் விஸ்வேஸ்வராயநம: ஓம் வீரபத்ராயநம: ஓம் கணநாதாயநம: ஓம் ப்ரஜாபதியேநம: ஓம் ஹிரண்யரேதஸேநம: ஓம் துர்தர்ஷாயநம: ஓம் கிரீஷாயநம: ஓம் அநகாயநம: ஓம் புஜங்கபூஷணாயநம: ஓம் ப்ரகாயநம: ஓம் கிரிதந்வநேநம: ஓம் கிரிப்ரியாயநம: ஓம் க்ருத்திவாசசேநம: ஓம் உராரரதயேநம: ஓம் பகவதேநம: ஓம் ப்ரமதாதிபாயநம: ஓம் ம்ருத்யுஞ்சயாயநம: ஓம் சூக்ஷ்மதநவேநம: ஓம் ஜகத்வியாபிநேநம: ஓம் ஜகத்குருவேநம: ஓம் வ்யோமகேசாயநம: ஓம் மஹாசேனஜநகாயநம: ஓம் சாருவிக்ரமாயநம: ஓம் ருத்ராயநம: ஓம் பூதபதயேநம: ஓம் ஸ்தாணவேநம: ஓம் அஹிர்புத்நயாயநம: ஓம் திகம்பராயநம: ஓம் அஷ்டமூர்த்தயேநம: ஓம் அநேகாத்மநேநம: ஓம் சாஸ்விகாயநம: ஓம் சுத்த விக்ரஹாயநம: ஓம் சாச்வதாயநம: ஓம் கண்டபரசவேநம: ஓம் அஜாயநம: ஓம் பாஸவிமோசகாயநம: ஓம ம்ருடாயநம: ஓம் பசுபதயேநம: ஓம் தேவாயநம: ஓம் மஹாதேவாயநம: ஓம் அத்யாயநம: ஓம் பூஷதந்த பிதேநம: ஓம் அவ்யக்தாயநம: ஓம் தக்ஷாத்தரஹராயநம: ஓம் ஹராயநம: ஓம் பசுநேத்ரபிதேநம: ஓம் சஹஸ்ராக்ஷாயநம: ஓம் சஹஸ்ரபதேநம: ஓம் அபவர்கப்ரதாயநம: ஓம் அநந்தாயநம: ஓம் தாரகாயநம: ஓம் பரமேஸ்வராயநம: ஓம் நீலகண்டாயநம: ஓம் கெங்காதராயநம: ஓம் ஸ்ரீகேதாரேசுவரஸ்வாமிநேநம: நாநாவித மந்த்ர பரிமள புஷ்பாணிம் பூஜையாமி.

சிவாஷ்டோத்ர ஸதநாமபூஜை முற்றிற்று

உ

சிவமயம்.



# திருக்காளத்தி தேவாரம்.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரதிலொடுசாதிதேக்கும்மர
முந்துமாமுகலின்கரையினிலுமையொடு
மந்தமார்பொழில்வளர்மல்குவண்காளத்தி
யெந்தையாரிணையடியென்மனத்துள்ளவே. 1
ஆலமாமரவமோடமைந்தசீர்ச்சந்தனஞ்
சாலமாபீலியுஞ்சண்முகவந்தியே
காலமார்முகலிவந்தணை தருகாளத்தி
நீலமார்க்கண்டனைநினையுமாநினைவதே. 2

கோங்கமேகுரவமேகொன்றையம்பாதிரி
மூங்கில்வந்தணைதருமுகலியின்கரையினி
லாங்கமர்காளத்தியடிகளையடிதொழ
வீங்குவெந்துயர்கெடும்வீடெளிதாகும். 3
கரும்புதேன்கட்டியுங்கதலியின்கனிகளு
மரும்புநீர்முகலியின்கரையினிலணிமதி
யொருங்குவார்சடையினன்காளத்தியொருவனை
விரும்புவாரவர்கடாம்விண்ணுலகாள்வரே. 4
வரைதருமகிலொடுமாமுத்தமுந்தியே
திரைதருமுகலியின்கரையினிற்றேமலர்
விரைதருசடைமுடிக்காளத்திவிண்ணவ
னிரைதருகழலிணைநித்தலுநினைமினே. 5, 6, 7
முத்துமாமணிகளுமுழுமலர்த்திரள்களு
மெத்துமாமுகலியின்கரையினிலெழில்பெறக்
கத்திடவரக்கனைக்கால்விரலூன்றிய
வத்தன்றனகாளத்தியணுவதுகருமமே. 8
மண்ணுமாவேங்கையும்மருதுகள்பீழ்ந்துந்தி
கண்ணுமாமுகலியின்கரையினினன்மைசேர்
வண்ணமாமலரவன்மாலவன்காண்கிலா
வண்ணலார்காளத்தியாங்கணைந்துய்ம்மினே. 9
வீங்கியவுடலினர்விரிதருதுவருடைப்
பாங்கிலார்சொலைவிடும்பரனடிபணியுமி
னோங்குவன்காளத்தியுள்ளமோடுணர்தர
வாங்கிடும் வினைகளைவானவர்க்கொருவனே. 10
அட்டமாசித்திகளணைதருகாளத்தி
வட்டவார்சடையனைவயலணிகாழியான்
சிட்டநான்மறைவஞானசம்பந்தன்சொ
லிட்டமாப்பாடுவார்க்கில்லையாம்பாவமே. 11

திருச்சிற்றம்பலம்.

## திருவிராகம்.

### பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வானவர்கடானவர்கள்வாதைபடவந்ததொருமாகடல்விடந்
தானமுதுசெய்தருள்புரிந்தசிவன்மேவுமலைதன்னைவினவி
லேனமின்மானினொடுகிள்ளைதினைகொள்ளவெழிலார்கவணினாற்
கானவர்தமாமகளிர்கனகமணிவிலகுகாளத்திமலையே. 1



மூதுசினவிலவுணர்புரமூன்றுமொருநொடிவரையின்மூளவெரிசெய்
சதுர்மதிபொதிசடையர்சங்கரர்விரும்புமலைதன்னைவினவி
லெதிரெதிரவெதிர்பிணையவெழுபொறிகள்சிதறவெழிலேனமுழுதக்
கதிர்மணியின்வளரொளிகொளிருளகலநிலவுகாளத்திமலையே. 2
வல்லைவருகாளியைவகுத்தவலியாகிமிகுதாரகனைநீ
கொல்லெனவிடுத்தருள்புரிந்தசிவன்மேவுமலைகூறிவினவிற்
பல்பலவிருங்கனிபருங்கிமிமவுண்டவைநெருங்கியினமாய்க்
கல்லதிரநின்றுகருமந்திவிளையாடுகாளத்திமலையே. 3
வேயனையதோளுமையோர்பாகமதுவாகவிடையேறிசடைமேற்
றூயமதிசூடிசுடுகாடினடமாடிமலைதன்னைவினவில்
வாய்கலசமாகவழிபாடுசெய்யும்வேடன்மலராகுநயனங்
காய்கணையினாலிடந்தீசனடிகூடுகாளத்திமலையே. 4
மலையின்மிசைதனின்முகில்போல்வருவதொருமதகரியைமழைபொல்லறக்
கொலைசெய்துமையஞ்சவுரிபோர்த்தசிவன்மேவுமலைகூறிவினவி
வலைகொள்புனலருவிபலசுனைகள்வழியிழியவயனிலவமுதுவேய்
கலகலெனவொளிகொள்கதிர்முத்தமவைசிந்துகாளத்திமலையே. 5
பாரதம்விளக்கியபகீரதனருந்தவமுயன்றபணிகண்
டாரருள்புரிந்தலைகொள்கங்கைசடையேற்றவரன்மலையைவினவில்
வாரதரிருங்குறவர்சேவலின்மடுத்தவரெரித்தவிறகிற்
காரகிலிரும்புகைவிசும்புகமழ்கின்றகாளத்திமலையே. 6
ஆருமெதிராதவலியாகியசலந்தரனையாழியதனா
லீரும்வகைசெய்தருள்புரிந்தவனிருந்தமலைதன்னைவினவி
லூருமரவம்மொளிகொண்மாமணியுமிழ்ந்தவையுலாவிவரலாற்
காரிருள்கடிந்துகனகம்மெனவிளங்குகாளத்திமலையே. 7
எரியனையசுரிமயிரிராவணனையீடழியவிழில்கொள்விரலாற்
பெரியவரையூன்றியருள்செய்தசிவன்மேவுமலைபெற்றிவினவில்
வரியசிலைவேடுவர்களாடவர்கணீடுவரையூடுவரலாற்
கரியினொடுவரியுழுவையரியினமும்வெருவுகாளத்திமலையே. 8
இனதளவிலவனதடியிணையுமுடியறிதுமெனவிகலுமிருவர்
தனதுருவமறிவரியசகலசிவன்மேவுமலைதன்னைவினவிற்
புனவர்புனமயிலனையமாதரொடுமைந்தருமணம்புணருநாட்
கனகமெனமலர்களணிவேங்கைநிலாவுகாளத்திமலையே. 9
நின்றுகவளம்பலகொள்கையரொடுமெய்விடுபோர்வையவரு
மன்றியறியாதவகைநின்றசிவன்மேவுமலைநாடிவினவிற்
குன்றின்மலிதுன்றுபொழினின்றுகுளிர்சந்தின்முறிதின்றுகுலவிக்
கன்றினொடுசென்றுபிடிநின்றுவிளையாடுகாளத்திமலையே. 10
காடதிடமாகநடமாடுசிவன்மேவுகாளத்திமலையை
மாடமொடுமாளிகைகணீடுவளர்கொச்சைவயமன்னுதலைவ
னாடுமலிநீடுபுகழ்ஞானசம்பந்தனுரைநல்லதமிழின்
பாடலொடுமிசைவல்லவர்கணல்லர்பரலோகமெளிதே. 11

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு நாயனார்.

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விற்றூணொன் றில்லாதநல்கூர்ந்தான்காண்
வியன்கச்சிக்கம்பன்காண்பிச்சையல்லான்
மற்றூணொன் றில்லாதமாசதுரன்காண்
மயானத்துமைந்தன்காண்மாசொன் றில்லாப்
பொற்றூண்காண்மாமணிநற்குன்றொப்பான்காண்
பொய்யாதுபொழிலேழுந்தாங்கிநின்ற
கற்றூண்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண்ணுளானே. 1

இடிப்பான்காணென்வினையையேகம்பன்கா
ணெலும்பாபரணன்காணெல்லாமுன்னே
முடிப்பான்காண்மூவுலகுமாயினான்காண்
முறைமையாலெம்புரியும்வழுவாவண்ணப்
படித்தான்றலையறுத்தபாசுபதன்காண்
பராய்த்துறையான்பழனம்பைஞ்ஞீலியான்காண்
கடித்தார்கமழ்கொன்றைக்கண்ணியான்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 2

நாரணன்காணான்முகன்காணாதவேதன்காண்
ஞானப்பெருங்கடற்கோர்நாவாயன்ன
பூரணன்காண்புண்ணியன்காண்புராணன்றான்காண்
புரிசடைமேற்புனலேற்றபுனிதன்றான்காண்
சாரணன்காண்சந்திரன்காண்கதிரோனானான்காண்
டன்மைக்காட்டானேகாண்டார்க்கோர்க்கெல்லாங்
காரணன்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண்ணுளானே 3

செற்றான்காணென்வினையைத்தீயாடிகாண்
டிருவொற்றியூரான்காண்சிந்தைசெய்வாய்க்
குற்றாள்காணேகம்பமேவினான்கா
ணுமையாணற்கொழுனன்காணிமையோரேத்துஞ்
சொற்றான்காண் சோற்றுத்துறையுளான்காண்
சுறாவேந்தனேவலத்தைநீறாநோக்கக்
கற்றான்காண்காளத்திகாணப்பட்ட
கணநாதன்காணவனென்கண்ணுளானே 4



மனத்தகத்தான்றலைமேலான்வாக்கினுள்ளான்
வாயாரத்தன்னடியேபாடுந்தொண்ட
ரினத்தகத்தயனிமையவர் தஞ்சிரத்தின்மேலா
னேழண்டத்தப்பாலானிப்பாற்செம்பொன்
புனத்தகத்தானறுங்கொன்றைப்போதினுள்ளான்
பொருப்பிடையானெருப்பிடையான்காற்றினுள்ளான்
கனத்தகத்தான்கயிலாயத்துச்சியுள்ளான்
காளத்தியானவனென்கண்ணுளானே. 5

எல்லாமுன்றோன்றாமேதோன்றினான்கா
ணேகம்பமேயான்காணிமையோரேத்தப்
பொல்லாப்புலனைந்துப்போக்கினான்காண்
புரிசடைமேற்பாய்கங்கைபூரித்தான்கா
ணல்லவிடைமேற்கொண்டுநாகம்பூண்டு
நளிசிரமென்றேந்தியோர்நாணையற்ற
கல்லாடைமேற்கொண்டகபாலிகாண்
காளத்தியானவனென் கண்ணுளானே. 6

கரியுருவுகண்டத்தன் கண்ணுளான்காண்
கண்டன்காண்வண்டுண்டகொன்றையான்கா
ணெரிபவளவண்ணன்காணேகம்பன்கா
ணெண்டிசையுந்தானாயகுணத்தினான்காண்
டிரிபுரங்கட்டீயிட்டதீயாடிகாண்
டீவினைகடீர்த்திடுமென்சிந்தையான்காண்
கரியுரிமெய்போர்த்துகந்தகாபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 7

இல்லாடிச்சில்பலிசென்றேற்கின்றான்காண்
ணிமையவர்கடொழுதிறைஞ்சவிருக்கின்றான்காண்
வில்லாடிவேடனாயோடினான்காண்
வெண்ணூலுஞ்சேர்ந்தவகலத்தான்காண்
மல்லாடுதிரடோண்மேன்மழுவாளன்காண்
மலைகடன்மணாளன்காண்மகிழ்ந்துமுன்னாட்
கல்லாலின்கீழிருந்தகாபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 8

தேனப்பூவண்டுண்டகொன்றையான்காண்
டிருவேகம்பத்தான்காண்டேனார்ந்துக்க
ஞானப்பூங்கோதையாள்பாகத்தான்கா
ணம்பன்காண்ஞானத்தொளியானான்காண்
வானப்பேரூருமறியவோடி
மட்டித்துநின்றான்காண்வண்டார்சோலைக்

கானப்பேரூரான்காண்கறைக்கண்டன்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 9

இறையவன்காணேழுலகுமாயினான்காண்
ணேழ்கடலுஞ்சூழ்மலையுமாயினான்காண்
குறையுடையார்குற்றமேல்கொள்வான்றான்காண்
குடமூக்கிற்கீழ்க்கோட்டமேவினான்காண்
மறையுடையவானோர்பெருமான்றான்காண்
மறைக்காட்டுறையுமணிகண்டன்காண்
கறையுடையகண்டத்தெங்காபாலிகாண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 10

உண்ணவருநஞ்சமுண்டான்றான்கா
ணூழித்தீயன்றான்காணுகப்பார்காணப்
பண்ணாரப்பல்லியம்பாடினான்காண்
பயின்றநால்வேதத்தின்பண்பினான்கா
ணண்ணாமலையான்காண்காணடியாரீட்ட
மடியினைகடொழுதேத்தவருளுவான்காண்
கண்ணாரக்காண்பார்க்கோர்காட்சியான்காண்
காளத்தியானவனென்கண்ணுளானே. 11

திருச்சிற்றம்பலம்.

---

# சுந்தரமூர்த்தி நாயனார்.

---

பண்-நட்டைராகம்

திருச்சிற்றம்பலம்.

செண்டாடும்விடையாய்சிவனேயென்செழுஞ்சுடரே
வண்டாருங்குழலாளுமைபாகமகிழ்ந்தவனே
கண்டார்காதலிக்குங்கணநாதனெங்காளத்தியா
யண்டாவுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. 1

இமையோர்நாயகனேயிறைவாவென்னிடர்த்துணையே
கமையார்கருணையினல்கருமாமுகில்போன்மிடற்று
யுமையோர்கூறுடையாயுருவேதிருக்காளத்தியு
ளமைவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. 2

படையார்வெண்மழுவாய்பகலோன்பல்லுகுத்தவனே
விடையார்வேதியனேவிளங்குழைக்காதுடையாய்
கடையார்மாளிகைசூழ்கணநாதனெங்காளமதியா
யுடையாயுன்னையல்லாலுகந்தேத்தமாட்டேனே. 3



மறிசேர்கையின்னேமதமாவுரிபோர்த்தவனே
குறியேயென்னுடையகுருவேயுன்குற்றேவல்செய்வே
னெறியேநின்றடியார்நினைக்குந்திருக்காளத்தியு
ளறிவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. 4

செஞ்சேலன்னகண்ணார்திறத்தேகிடந்துற்றலறி
நஞ்சேனடியேனலமொன்றறியாமையினாற்
றுஞ்சேனொருகாற்றொழுதேன்றிருக்காளத்தியா
யஞ்சாதுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. 5

பொய்யவனாயடியேன்புகவேநெறியொன்றறியேன்
செய்யலனாகிவந்திங்கிடரானவைதீர்த்தவனே
மெய்யவனேதிருவேவிளங்குத்திருக்காளத்தியென்
னையநுன்றன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. 6

கடியேன்காதன்மையாற்கழற்போதறியாதவென்னுட்
குடியாக்கோயில்கொண்டருளிவார்சடையெங்குழகா
முடியால்வானவர்கண்முயங்குந்திருக்காளத்தியா
யடியேனுன்னையல்லாலறியேன்மற்றொருவரையே. 7

நீறார்மேனியனேநிமலாநினையன்றிமற்றுக்
கூறேனாவதனாற்கொழுந்தேயென்குணக்கடலே
பாறார்வெண்டலையிற்பலிகொண்டுழல்காளத்தியா
யேறேயுன்னையல்லாலினியேத்தமாட்டேனே. 8

தவிர்போன்மெல்லடியாடனையாகத்தபர்ந்தருளி
வெளிவாய்வந்தென்னுள்ளம்புகுதவல்லவெம்பெருமான்
களியார்வண்டறையுந்திருக்காளத்தியுள்ளிருந்த
வொளியேயுன்னையல்லாலினியென்றுமுணரேனே. 9

காரூரம்பொழில்சூழ்கணநாதனெங்காளத்தியு
ளாராயின்னமுதையணிநாவலராரூரன்சொன்ன
சீரூர்செந்தமிழ்கள்செய்வார்வினையாயினபோய்ப்
பேராவிண்ணுலகம்பெறுவார்பிழைப்பொன்றிலரே. 10

திருச்சிற்றம்பலம்.

---

திருக்காளத்தித் திருப்பதிகம் 4.

சுவாமி-காளத்திநாதர், தேவி-ஞானப்பூங்கோதையம்மை.

ஆக திருப்பதிகம்-4

---

# திருக்காளத்தி திருப்புகழ்.

*தாதத்த தாதத்த தாதத்த தாதத்த*
*தாதத்த தாதத்த—தனதான.*

தோடுற்ற காதொக்க நீடுற்ற போதுற்ற
    தோர்மைக்க ணுண்மிக்க நுதலாலே
தோள்வெற்பி னன்விற்கை வேளுக்கு மேன்மக்கள்
    சோகிக்கு மால்மிக்கு மடவார்தம்
மேடைக்கு ளேபுக்கு வாடிக்க லாமிக்க
    வேசிக்கு நேசித்திங் குழலாதே
பூன்பெற்ற காளத்தி வாழ்முத்த னேபத்தி
    யோதற்கு நீசற்று மருளாயோ
வேடர்க்கு நீளசொர்க்கம் வாழ்விக்கவே வெற்பின்
    மீதுற்ற பேதைக்கு மணவாளா
வேழத்தி னுபத்தை மீள்வித்த மாலொக்க
    வேதத்திலே நிற்கு மயனுருக்
தேடற்கொணுநிற்கும் வேடத்தர் தாம்வைத்த
    சேமத்து நாமத்தை மொழிவோனே
தீதற்ற நீதிக்கு ளேபத்தி கூர்பத்தர்
    சேவிக்க வாழ்வித்த பெருமாளே

    *தையதானத்தனன தையதானத்தனன*
    *தையதானத்தனன—தனதான.*

உய்யுஞானத்துநெறி கைவிடாதெப்பொழுது
    முள்ளவேதத்துரைகொ டுனேயோதி
யுள்ளமோகத்திருளை விள்ளமோகப்பொருளை
    யுள்ளமோகத்தருளி யுறவாகி
வையமேழுக்குநிலை செய்யுநீதிப்பழைய
    மஞ்ஞைமேலுற்றொருச யிலமேவும்
வள்ளிகானிற்புதிய வள்ளியோடுற்றெனது
    வல்லநோயகற்றிய வருவாயே
பையராவைப்புனையு மையர்பாகத்துவளர்
    தையலாள்பெற்றமகிழ் புதல்வோனே
பல்வமீதுற்றயில்வர் செல்விதோளைப்புணரு
    மையமாலுக்குரிய மருகோனே
செய்யாமல் வெற்புருவ வெய்யவேல் சுற்றிவிடு
    செல்வகாளத்திமலை யுறைவோனே
தெய்வநாடற்குரிய வெள்ளை யானைத்தலைவர்
    தெய்வயானைக்கினிய பெருமாளே.

—:0:—

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீகாளத்தி புராண வசனம்.

## பாயிரம்.

---

### காப்பு கலிவிருத்தம்.

தருமஞ் சந்திகழ் தகமரை யோன்பதங்
கருமஞ் சந்தி கடுப்பவர் வாழ்பதந்
துருமஞ் சந்திரற் றோய்திருக் காளத்தி
வருமஞ் சந்தி பழைமத யானையே.

---

### காளத்திநாதர்.

அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நீர்கொண்ட பொலம்பூங் கொன்றை நெடுஞ்சடை வனத்துடுத்த
சீர்கொண்ட புலித்தோர் கஞ்சிச் சென்றுபுக் கொளிப்பத் தாவு
மேர்கொண்ட வுழையி னங்கன் றிலங்கிய திருக்கரத்துக்
கார்கொண்ட பொழிற்கா ளத்திக் கடவுளை மனத்துள் வைப்பாம்.

### ஞானப்பூங்கோதை யம்மை.

பூமக ளிறைஞ்ச நெற்றிப் புதுமணித் திலகந் தோய்ந்து
தாமரை * நகுமு கத்தோர் தான்பெறப் பணிக ளங்க
மாமதி புரையு மங்கேழ் வயக் † குளிர் மலர்த்தாட் குன்றக்
கோமக ளருண்ஞா னப்பூங் கோதையை வணக்கஞ் செய்வாம்.

---

* நகுமுகம் — எ-து — சிரித்த முகம்

† குளிர் — எ-து — ஈரம் இங்கு உளிர் என்பது குளிர் என வந்தன

## விநாயகக் கடவுள்.

தாய்குறங் கேறித் தந்தை சடையிடை மதிகேதுப்போக்
காய்சின வரவென் றஞ்சிக் கடுக்கையுட் புகக்கை நீட்டிப்
பாய்புனன் முகந்து நின்று பழிச்சுநர் வாயிலீன்றோர்
வாய்நகைதழைப்ப வீசு மழைமதக் களிற்றைத் தாழ்வாம்.

## சுப்பிரமணியக் கடவுள்.

பன்னிரு கமலக் கையும் பற்பல தொழில்வி ளைப்பத்
தன்னமர் தாய்மு லைப்பா ருன்கவா ளிருந்துண் ணுங்கான்
முன்னைவ னகலந் தாழ்ந்த மொய்தலைத் தொடைபு ரட்டும்
பொன்னடி விளையசேயம் புந்தியி லுலவு மன்றே.

வளர்செழுங் குருதிச் சூட்டு வாரணம் வலனு யர்த்த
வொளிகெழு பரிதிவைவே லொருபெருங் கருணை மூர்த்தி
களிமகிழ் சிறந்து தான்வாழ் கற்களி னெருகல் லென்றோ
வளியவென் மனத்திலுள்ளு மகன்றில னிருக்கு மன்னோ.

## வீரபத்திரக் கடவுள்.

அருவரைக் குளங்கள் பந்தி னடிபெயர்ந்துருள வார்க்கும்
விரிதிரைக் கடல்பு ரண்டு வியனில முழுதும் போர்ப்பக்
குருமல ரண்ண லண்டங் குலுங்கிட்ச் சிறையடிக்கொள்
சரபமாய் நரம டங்க றனையடர்த் தவனைத் தாழ்வாம்.

## திருநந்திதேவர் கலிவிருத்தம்.

செம்பொரு ளாகமத் திறந்தெ ரித்தரு
நம்பவமருத்தனன் னந்தி வானவ
னும்பர்த மணிமுடி யுரிஞ்சக் கன்றிய
வம்பவிழ் மலரடி மனத்தி ருத்துவாம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

மேவ ரும்பர மானந்த வீட்டினுட்
டாவி னன்மணங் காணிய சார்ந்தவர்
யாவ ரும்புகு வித்தருள் செந்தமிழ்ப்
பாவ லன்மலர்த் தாண்முதல் பற்றுவாம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

வேற்று ருக்கொள் விதியறி யாவரன்
கீற்று வெண்பிறைக் கேழ்கிளர் செஞ்சடை
யாற்று ணைச்சுமை யேற்று மருந்தமிழ்
மாற்ற ருந்தவத் தோனை வழுத்துவாம்.



## சுந்தரமூர்த்தி நாயனார்.

மாத ரிற்கண் மழுவலத்தேந்திய
வாதியைத்திருமா லு மறிகலாப்
பாத முற்றுஞ் சிவந்திடப் பண்டொர்நா
டூது விட்ட புலவற் றொழுவமால்.

## மாணிக்கவாசக சுவாமிகள்.

வஞ்சி நுண்ணிடை மால்வரை மங்கைபூண்
டுஞ்சு வெம்முலைத் தொய்யிலெழுதுகைக்
கஞ்சநோவக் கடவு லெழுதுமச்
நெஞ்சி வைத்தமி ழோனடி சேர்குவாம்.

## காரைக்காலம்மையார்.

தோற்ற மில்பரஞ் சோதிதன் வாய்திறந்
தாற்றனன்புட னம்மையே யென்னுபோர்
பேற்றை முன்பெறப் பேயுருவெய்திய
சாற்றரும் புகழ்த்தாயை வணங்குவாம்.

## சேரமான் பெருமாணாயனார், காடவர்கோனாயனார்.

*அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்*

வெள்ளியங் குன்றத் துச்சி வீற்றிருந் தருள்வோன் கேட்பத்
தெள்ளமு தனைய தீஞ்சொற் றிருவுலாச் செய்யுள் செய்தோன்
றள்ளுடம் பிழித்து முன்னோன் றலந்தோறும் புனை வெண்பாட்டு
வள்ளலென் றிவர்கள் செம்பொன் மலரடி வணக்கஞ் செய்வாம்

## தமிழ்த் தெய்வம்.

மறைமுதர் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்தவேணி
யிறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப்பெற்றே
யிரைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும் வென்றாரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந்தேத்தல் செய்வாம்.

## பொய்யடிமை யில்லாப்புலவர்.

தடவரை முனிவனீன்ற தமிழ்க்கொழுங் குழவிதன்னைப்
படர்வெயி லுமிழுஞ் சங்கப் பலகையந் தொட்டி லேறி
நடவர வளர்த்து ஞால நனந்தலை மறுகில் விட்ட
மடனறு புலமை யோரை மனத்தியா நினைந்து மன்றே.

### குருதேவர்.

புனற்றிளங் திங்கள் வேய்ந்த புரிவளர் சடையு நெற்றிக்
கனற்றிரு விழியுமானுங் கரந்து வந்தென்னைப் பாச
மனைத்தையுமருத்தாட்கொண்ட வருட்குரு தேவனென்னுந்
தனிப்பெருங்கருணை வள்ள றன்னடி மனத்துள் வைப்பாம்

### சிவப்பிரகாச சுவாமிகள்.

புனையெடில் வடிவி னுளோர் பொதுமகட் கண்டமைந்தர்
மனமெனப் புலவர் நெஞ்ச மருளுமின் றமிழ்ப்பா மாலை
சினவிடை யவர்கே சாத்துஞ் சிவப்பிர காசனென்னு
முனைவனெம் மடிகள் பாத முளரிகள் சென்னி சேர்ப்பாம்.

எவனொரு நெடியிலெண்ணு திசைத்ததோர் செய்யுண்மற்றைக்
கவிகள்பன் னுனினைந்த காப்பியங் கட்கு மேலா
மெவனிறை முதனு மத்தோ டியைதரும் விளக்கப்பேரோ
னவனொடு பிறப்பே மக்கிண் டளித்தபால் வாழ்க மன்னோ

### அவையடக்கம்.

நூற்றுறை பயின்று பெற்ற நுண்ணுணர் வுடைய வல்லோன்
சாற்றுமிப் போலிச் செய்யுள் சான்றவ ரிகழ்தல் செய்யார்
மேற்படு முணர்வின் மூத்தோர் மென்னடைச் சிறுவர் செய்வாய்ப்
பார்கடி கமழு மென்சொற் பழிப்பவ ருலகிலுண்டோ

முரிதிரைக் கங்கை நீந்த முனையினஞ் சுமிழெ யிற்று
வெருவரு சினத்த பாம்பை வெண்டலை முழையிற் சேர்க்கும்
புரிசடைக் கடவுள் வாழும் பொருவிரென் கயிலாயத்தின்
பெருமையிற் சிறிதறிந்த தொபற்றி செந் தமிழாற் சொல்வேன்.

பாயிர முற்றிற்று.

---

### சிறப்புப் பாயிரம்.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்றிகழ் சடிலப் புனிதனெம் பெருமான்
புலமலர்க் கோதையோ டமர்ந்த
தென்றிருக் கயிலைப் புகழுமு ததனைத்
தீங்கவித் தாரை பெய் ததுவாற்
குன்றலி விசையார் சிவப்பிர காசக்
கோதிலாத் தமிழ்க் கடன் முகந்தே
யென்று நின்றறவே பொழிதரு கருணை
விளக்கமென் றியம்புமா முகிலே.

---

உ
சிவமயம்



நூல்,

## நைமிசாரணியச் சருக்கம்.

அகண்ட சச்சிதானந்த வியாபகமாகிய சிவபெருமான் திருவருளினால், பிரபஞ்சத்தினைச் சிருஷ்டிக்கும் வல்லமையினையுடைய நான்முகக்கடவுளாகிய பிரமாவானவர் பூர்வகாலத்தில் ஒருநாள் தேவர்களெல்லாந் தன்னைச்சூழ ஒரு அன்னவாகனத்தின்மீது சரஸ்வதி சமேதராய் எழுந்தருளி யிருக்கையில், அவ்விடத்தில் சில முனீந்திரர்கள் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து எழுந்து நின்று பலவிதமாகத் தோத்தரித்து, தாமரைமலரில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! தேவரீர் திருவடியே அடைக்கலமாக வடைந்தனம். நாங்கள் சிவபெருமானை நோக்கி ஒரு அரிய பெரிய தவஞ் செய்ய விரும்பினோம். அத்தவம் யாதொரு இடையூறும் உண்டாகாதபடி நிரைவேறும் பொருட்டு ஒரு புண்ணியமான இடத்தினைக் காட்டியருளவேண்டு மென்றனர். பிரமாவானவர் கேட்டுத் தனது இருதயத்திலே சிவபெருமானைத் தியானம் செய்து, முனிவர்களே! அங்ஙனமே காட்டுவோமென்று, ஒரு தருப்பைப் புல்லினை யெடுத்துச் சக்கரமாய் வளைத்துப் பூமியிலுருட்டி இதன் பின்னே நீங்கள் தொடருவீர்களானால், இந்தச் சக்கரம்போய் நின்றவிடம் நீங்கள் தவஞ்செய்தற்குறிய வனமென்றனர். இங்ஙனம் பிரமா விட்ட சக்கரத்திற்குப் பின் முனிவர்கள் செல்ல, அச்சக்கரம் அதிவேகமாக சென்று நின்றது. அந்தவிடமே தக்க தவத்திற்குறிய இடமென ஆலோசித்து, அந் நேமியாகிய சக்கரம் நின்ற இடத்திற்கு நைமிசாரணியம் எனப் பெயர் வைத்து அவ்விடத்திலேயே அம் முனிவர்கள் தவஞ்செய்துக் கொண்டிருந்தனர்.



அக்காலத்தில் அவ்விடத்தில் பல முனிவர்கள் புடைசூழப் பதினெண் புராணங்களையும் திருவாய் மலர்ந்தருளிய வியாசபகவான் மாணாக்கர் சூதமாமுனிவர் எழுந்தருளினர். அவரைக் கண்டவுடன் முனிவர்கள் எழுந்து எதிர்கொண்டு அழைத்துவந்து ஒரு ஆசனத்தின்மேல் வீற்றிருக்கச் செய்து அனேக உபசாரங்களைப் புரிந்து சூழவிருந்து தொழுது ஐயனே! ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் அனேகமான திவ்ய தலங்களின் மகிமைகளை முன்னமே எங்கட்குக் கூறியுள்ளீர். இப்போது சிகாளத்தியின் வைபவங்களைக் கேட்க மிக்க ஆவலுடையவர்களாக விருக்கின்றோம், தயைசெய்ய வேண்டுமென வருந்திக் கேட்டுக் கொண்டனர். சூதமாமுனிவர் கேட்டு ஆனந்தங்கொண்டு. முனிவர்களே! நீவிர் அருமையான க்ஷேத்திரத்தின் மகிமையினைக் கேட்கத் துணிந்தீர்· அத்தலத்தினைப்பற்றி எனது ஆசிரியர் வியாச முனிவர் எனக்குச் சொல்லியபடி சொல்லுகிறேன். இச்சரித்திரத்தை நீங்கள் கேட்பதினால் உங்களுக்கே யல்லாமல் சொல்லப் போகிற எனக்கும் விசேஷ புண்ணியமுண்டாகும், தயைசெய்து கேட்பீர்களாகவெனச் சொல்லத்தொடங்கினர்.

நைமிசாரணியச் சருக்கம் முற்றிற்று.

---





உ

சிவமயம்.

# விடசங்கமச் சருக்கம்.

—:o:—

கலித்துறை.

கடலு டைப்பெரு மாநில மடந்தைக்குக்கவின்ற
சுடர் விழிக்கரு மணியினுட் பாவையாய்த் தோலா
விடையு யர்த்தவற் குட்புற மாகிய வியன்சி
றொடிவில் காளத்தி நகரணி யறிந்தவா றுரைப்பாம்.

இதுவுமது.

மகர மைக்கட லிலவல யத்திடை வளங்கூர்
துகளில் சீர்த்திரு நாட்டினுட் டொண்டைநா டென்னத்
திகழ்ம ணிக்கணங் குயின்றொளிர் செம்பொனீண் மாட
நகரெ வற்றினும் சிறந்தது காளத்தி நகரம்

கடலாடை யுடுத்த பூமிதேவிக்குக் கண்ணின் கருமணியுட் பாவையாகவும், இடபாரூடராகிய பெருமானுக்கு அதிக பிரீதியுடைய தாகவும் விளங்கும் திருக்காளத்தி நகரின் சிறப்பைச் சொல்லுவாம்.

“மேற்குப் பவளமலை வேங்கட நேர்வடக்கு
ஆர்க்கு முவரி யணிகிழக்கு—பாக்குளுயர்
தெற்குப் பினாகிமலை சேரிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு. ”

என்றபடி இருபதுகாதவிஸ்தீரணம் பெற்றதாகிய, பவளமலைக்குக் கிழக்கு, திருவேங்கடத்திற்குத் தெற்கு, கடலுக்கு மேற்கு, பிநாகிமலைக்கு வடக்கு என்னும் நாற்பாங் கெல்லையுடையதும், சான்றோருடையதெனக் கலைமகளின் அவதாரமாய் விளங்கிய ஔவைப்பிராட்டியாரால் வியந்தோதப் பெற்றதும், செந்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய் இலகுவதும், மானுட சரீரத்திற் குரிய முப்பத்திரண்டு அவயங்களைப்போல முப்பத்திரண்டு சிவஸ்தலங்களைத் தன் பாலுடையதுமாய், சோழனொருவன் பிதத் துவாரத்தின் வழியேபோய் நாக கன்னிகையை மணந்த காலத்து, அவள் யான் பெற்ற புதல்வனை யாதுசெய்வதென வினவ, நீ தொண்டைக்கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட, அவன் வந்து கரையேறின் அவனுக்கு நான் அரசுரிமைசெய்துவித்து நாடாட்சிகொடுப்பமெனக்கூறியபடி, அவளும் அங்ஙனம் வரவிட, அவனைத் திரை (அலை) தருதலின், இளந்திரயனென்றும், தொண்டைக் கொடி யணிந்து வந்தமையின் தொண்டைமான் என்னும் பெயரிட்டு அவனுக்குக் கொடுத்தமையின் தொண்டை நாடெனுங் காரணப் பெயர் தாங்கிய நாட்டிலே, சிறந்த நகரங்கள் பலவற்றினுஞ் சிறந்துள்ளது சீகாளத்தி நகரம். அஃதெப்படியென்றால், ஏனைய சிவதலங்கள் மோட்ச நீங்கிய போக பாக்கியங்களையே தருவதாலும் இந்நகரம் அற்றோடு மோட்சத்தையுந் தருவதாலுமென்றுணர்க. இந்நகரமோ அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரெனும் உத்தம குலத்து நாற்பெருங் குடியும், உயர்ந்த வுமிழ்த்த வுமயங்கத் தோன்றிய அநுலோமர் பிரதிலோமர் அந்தராளர் விராத்தியர், ஏனைய சங்கர ஜாதியர் யாவரும் நிறைந்து தங்கள் குலாசாரதர்மங்களும், பிரமசாரியாதிய ஆசிரம தர்மங்களும் குறைபாடின்றி, தர்மார்த்த காமமோட்சங்களுக்கு உரைவிடமாக விளக்கத்தக்கது. இந்நகரத்திலே ஸ்ரீ காளத்தியப்பரென்னும் பெயரேற்றுச் சிவபிரான், ஞானப்பூங் கோதையென்னுந் தேவியாரோடு ஒரு காலமும் நீங்காது வீற்றிருந்து பஞ்ச கிருத்தியங்களை நடத்தி அடியவர்க்கு இஷ்ட சித்திகளை யனுக்கிரகித்து அருள் புரிகின்றனர். இந்நகரம் கயாரணியம், வில்வாரணியம், தென் கைலாய முதலிய பல காரணத் திருநாமங்களுடையது.

முன்னொரு காலத்தில், கடல்போன்ற சேனையுடையவனும், பூர்ண சந்திரன்போன்ற வெண்கொற்றக்குடை நீழலிலிருந்து மநுமுறை புறழாது செங்கோல் செலுத்திய யாதவ மகாராஜன் என்பார் நாராயணபுரத்தில் அரசு செய்திருந்தினர். அவர் க்ஷத்திரிய குலத்திலுதித்தவரும், சகலகலா நிபுணரும்,

''படைகுடி கூழமைச்சு நட்பாரணாறு
முடையா னரசருளேறு''

என்றபடி, அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பென்று சொல்லப்பட்ட ஆறங்கங்களையும் உடையதாகிப் புண்ணிய பாவங்



கட்கஞ்சி, குருலிங்க ஜங்கம பக்தி மிகுந்து, தன்னுயிர்போல மன்னுயிர்களிடத்தே பெருங்கருணைநிரம்பிய கிருபாசாகரமாக இன்சொல், ஈகை முதலிய சகல சற்குணங்களோடு அரசுபுரிந்து வருகையில், அவரது சிவபுண்ணிய முதிர்ச்சியால் சிவபெருமான் அவரை யடிமைகொள்ளத் திருவுள்ளக் கருத்துடையராய், திருவெண்ணீற்றுத் தூளன திரிபுண்டரங்கள் பிரகாசிக்கவும், உருத்திராக்க மாலிகாபரணங்கள் ஒலிசெய்யவும், இஷ்டலிங்கதாரண மிலகவும், சொல்லற்கு அளவுபடாத பேரழகுவாய்ந்த விடசங்கம வடிவமெடுத்து அந்த நாராயணபுரமெனு நகரத்தை நண்ணி, ஆகாயமளாவிய மாளிகைகள் நெருங்கிய தோரணங் கட்டிய தெருவழியே மெல்ல நடந்து செல்லுகையில் அவ்விடசங்கமரைக் கண்ட நங்கையர் நாண முதலிய காவல் கடந்து, தமது மேகலாபரணமும், வளையலுமிழந்து உடல் பசந்து, தமது கண்களாகிய நீலோற்பலங்களைப் பரப்பி, காற் சிலம்புகள் புலம்ப இடந்தோறுஞ் சேர்ந்து, ஒருவரோடொருவர் ஏடி இவன் செவ்வேளோ, அன்பர்க்கருளும் மான்மழுவேற்ற கண்ணுதலாகிய பரமேசுவரனோ என்பர் சிலர். அணிவோர் வினையை நீறுசெய்யும் திருநீறு பூத்த நெற்றியையும், உருத்திராக்க மணியையும் முத்து மணியையும் கலந்து கோத்தணிந்த மார்பையும், மலர்மாலை சூடப்பெற்றுச்செவியின்மேல் தொங்குந்தலை மயிரையும் நாம் இன்னொரு முறை கனவிலாவது காணப்பெறுவோமோ வென்பர் சிலர். மெல்லிய மான் கன்றின் செவியழகினை வென்ற வெற்றிலை யடுக்கியுள்ள இடதுகையும், பொற் பிரம்பு பிடித்த தாமரை மலர்போன்ற வலக்கையும், உத்தரீயமானது ஒளிவிட்டு அசைகின்ற மலைபோலப் பூரித்த தோளும், நம்முடைய கண்ணையும் கருத்தையுங் கவர்ந்தன. இது யாது எனக்கூறுவர்சிலர். ஊரார் பழிக்கும்படி நமது உடையையும் வளையலையுங் கவர்ந்து, ஸ்தனங்களை நிறம் வேறுபடுத்தி, மனதையுங்கிரகித்துக்கொண்டு வீதியைக் கடந்து விரைந்து செல்லும் அன்பில்லாத இச்சங்கமனைக் கண்டால், உலகத்தை யெல்லாம் மயங்கச்செய்யும் மன்மதனும் மயங்கி விடுவானென்பர் சிலர்.

இவ்வாறு பலபடக்கூறிக் காமக்கினியினாற் சுடப்பெற்ற மங்கையர் வருந்தியிருக்க, விடசங்கமர் மேலே செல்லுகையில், யாதவ மகாராசனுக்குக் கலந்திருத்திலைவைக்கும் சிற்றேவலையுடைய மங்கையொருத்தி, இயற்கையாகச் சிவபக்தி முதிர்ந்தவள் எதிர்ப்படவும், விடசங்கமருடைய தாமரை மலர்போன்ற பாதங்களில் சாஷ்டாங்கமாகப் பணிந்து நேர்நின்று, அனலிற்பட்ட நெய்போ லுருகிய மனத்துடன் முகமலர்ச்சி கொண்டு கைகூப்பி, சுவாமிகளே! தேவரீரைத் திருவடி பணிந்து இம்மானுட வடிவேற்ற பயனைப்பெற்றேன். ஆயினும் அடிமையின் விடயமாக மனமிரங்கி அடியாள் *குடிலுக்

* குடில் — எ-து — ஓலை வீடு.

கெழுந்தருளித் திருவமுது செய்து †பரிகலச்சேட மளித்தருள
வேண்டுமென மீண்டும் நமஸ்கரிக்க, விடசங்கமர் ஆசையோடு
நோக்கி பெண்ணே! சிவ பக்தியுடைய மாதர்களில் உன்னை யொப்
பவர் ஒருவருமிலர். உனக்குச் சொல்லவேண்டுவ தொன்
றுண்டு. யான் உன்பால் மன்மத விகாரங்கொண்டுள்ளேன்.
அதற்கு நீ தடையின்றி விருப்போடிடங் கொடுப்பதாகில்
வருவேனென, கலந்திருத்துங் காரிகை சந்தோஷித்துப்
புன்னகை செய்து, இழி ‡தகைமையுடைய என்னுடலைக்
கலக்கத் தேவரீர் திருவுளங்கொண்டது அடியாள் பலகாலஞ்
செய்த தவப்பயனேயாமாதலின், திருக்கருத்தின்படி யாகுகவென
வணங்கி விடசங்கமரைக் கொண்டு வீடடைந்து அவர் பாதங்களை
யலம்பி, பீடத்திருத்தி, நல்லுண வூட்டி, பின்னர்க் கலவைச் சாந்து
பூசி, பரிமளமிகுந்த தாம்பூலமளித்து நிற்ப, சங்கமர் (அம்மங்கையி
னது அன்பையும், சிகாளத்தியின் சிறப்பையும் விளக்கி, யாதவ மன்
னனையாட்கொண்டருள நடித்துக் காட்டிய திருவிளையாட்டாக)
காமம் வெளிப்படு குறிகள் காட்டி அவளைத் தழுவினர்போலக்
காமக்கடலிலமிழ்த்தினர். இதனால் அமமாதுமாயசங்கமர்வலையிலகப்
பட்டு மன்னவன் குற்றேவலை மறந்தனள். அரசனோ உரிய காலத்தில்
நீராடித் திருநீரணிந் துபூசை முடித்துஉண்ணுதற்குக் கீழ்த்திசை
நோக்கியிருந்து, பணிப்பெண் *ணிம்மை யறிந்து கண்கள் நெருப்
பெழக்கோபித்து. கைகட்டி வாய்பொத்தி அருகே நிற்கும் சேவ
கரைநோக்கி அவளை விரைவிற் கொண்டு வருகவென, அவர்கள் மன
வேகத்தி †கடிது சென்று கோபத்துடன் விளிப்ப, அம்மாது துண்
ணெனஉடல் நடுங்கவெழுந்து ஐயரே! செல்லாதிரென வேண்டிப்
புறத்தே வருமுன், அரசனே வலர் வாவென வெக்கோபித்து அப்
பொழுதே அரசன்முன் செலுத்த, காவலன் கண்டு கடுங்கோபத்
துடன், இவள் மலரணிந்த கூந்தலைக் களைந்து மழிக்கவிடக் கடவீ
ரெனக் கட்டளைதர, அவர்கள் மஞ்சிகனைக்கொண்டு அங்ஙனமே
செய்வித்தார்கள். நெய்பூசப்பெற்று முனையிற் குழைவுற்று மேகத்
தையும் நீலரத்தினத்தையும், வண்டினையும், கருமணற்படிவையும்
நிறத்தால்வென்று கொடிப்பாசி போலப் படர்ந்து, மலர் மணம்
பெற்று நீண்டுள்ள கூந்தலை யிழந்த அப்பெண்கலாபமிழந்த மயில்
போலாகிய அதனால்மனந்தாளாது முத்துக்கள்போல நீர்த்துளி
களைச் சிந்தி மிகவுந் துக்கித்து அரச வீதியில் கண்டோரனைவரும்
மனவருத்தமெய்தும் வகையாகப் போயினள்

† பரிகலச்சேடம் — எ-து — உண்ட எச்சில்.
‡ தகைமை — எ-து — தன்மை.
* இன்மை — எ-து — இல்லாமை.
† கடிது — எ-து — துரிதம்.



அதனைக்கண்ட அந்நகர வாசிகள், ஐயோ! கலந்திருத்தத் தவ
றிய குற்றத்திற்கே இப்பெண்ணின் கூந்தலை மழிப்பித்த மன்னவன்
வேறு குற்றமொருவர் செய்யின் எவ்வண்ணந் தண்டிப்பானோவென்
பாரும் வஸ்திரம் பொன்னாபரண ரத்தினாபரணங்களை சந்தனம் புஷ்
பம் முதலியவற்றால் அதிக அலங்கரிப்பினும், பெண்களுக்குக் கூந்த
லொன்றில்லையாயின், அவையெலாங் குறைவுபடுமென்பாரும், அந்
நாவிதனுக்குத்தான் இப்பெண்ணின் கூந்தலைக் களையக் கையெ
ழுந்ததோ வென்பாரும், அரசன்கட்டளை யிட்டது அழகன்றாயினும்
அதனைத் தடுக்கும் ‡ஆற்றல் யாருக்குண்டோ மென்பாரும், எவ்வ
ளவு வறுமைவந்தடையினும் ஒருவர் கட்டளைக்குட்பட்டு வாழா
திருத்தலே நல்லதென்பாரும், பெருஞ் செல்வம் உண்டாவதாயி
னும்ஐயோ! குற்றேவல் புரிவது மிக்க கொடியதுஎன்பாருமானார்கள்.
இவ்விதமாக இருபக்கத்தி லுள்ளாரும் மனந்தாளாது கூறிய வார்த்
தைகளெல்லாம் தனது துன்பத்தை அதிகப்படுத்த தன் வீட்டை
யடைந்து, சந்திர சூரியன் முதலியவற்றை மறைந்து சங்கம வடி
வோடு வந்துள்ள சிவபெருமான் திருவடியில் நமஸ்கரித்துக் குறை
கூறியழுது கொத்தாகிய மலர்களை யிழந்த பூங்கொடி போலப்புரண்
டாள். அதுகண்ட விடசங்கமர் பெண்ணே! வருந்தற்கவென்று
அவள் சிரமிசைக் கரம் வைக்க, உடனே அவள் கூந்தல் பண்
டையை வளர்ச்சியும் நீண்டு செழித்து வளர்ந்தது. அதுகண்ட
மாத்திரமே பாலை நிலத்தில் மேகத்தின் வருகை நோக்கிய மயில்
போலவும், நாடோறும் பசியால் வருந்தி ஒருநாள் விசேடமுண்ண
நேர்ந்த ஒரு வறியவன்போலவும், செய்யுளின் அரிய நுண்பொருள்
கண்டறிந்த புலவன் போலவும், அவள் சந்தோஷ சாகரத்தி
லழுந்தி, சங்கமர்பால் விடைபெற்று அரசன் அவைக்கள் *நண்ண,
அதிபன் வெகுண்டு இதுகாறும் இவள் கூந்தலை மழுக்கவில்லையா?
எனக்கூற, பகைஞர் மகுடத்தில் பொருநதும் பாதமுடைய பார்த்
திபனே! உன் கட்டளை ஒருகணமேனுங் கடக்கப்படுமோ? யான்
பூர்வம் புரிந்த புண்யத் தவப்பயனால் இப்போது என்வீட்டில்
வசிக்குஞ் சிவபக்தர் அருளுடன் தமது நகரத்தைச் சிரத்திலிருத்த
கரிய கூந்தல் பெறுகலுற்றது எனக்கூறினள். அரசன் அதிசயமும்
அன்பும் அதிகரித்து அநேகர் அருகேசூழ அவள் வீடடைந்து
அங்கிருந்த அடியவர் அடிகளில் அஷ்டாங்க பஞ்சாங்கமாகப்
பணிந்து எதிர் நின்று, யான் செய்த பெருந்தவத்தால் தேவரீரை
இங்கெய்தப் பெற்றேன். தேவரீரிருக்கும்படி தவம்புரிந்த நாடு
யாது? தேவரீர் எவ்விடதிற்குப் போவது ? என வினவினர்.

‡ ஆற்றல் — எ-து — வல்லமை.
* நண்ண — எ-து — அடைய.

## யாதவ மன்னனுக்கு விடசங்கமர் சீகாளத்தியின் சிறப்புரைத்தல்.

இவ்வாறு வினவிய மன்னனை விடசங்கமர் அருள் விழியால் நோக்கி நாம் உலக முழுதுஞ் சஞ்சரித்து சிவ ஸ்தலங்களில் வசிப்போம். தென் கைலாயமெனுந் தலஞ் சிறந்ததெனப் பலருஞ் சொல்லக்கேட்டு இங்குவந்தோம். இவ்விடத்தில் பரமேசுவரனுக்கு ஓராலயமுமில்லாமை நோக்கி, மனம் வருந்தி, நெருப்பிற் பற்ற புழுவானோம். சர்வலோக நாயகனை உனக்குக் கோயிலெடுப்பவர் ஒருவருமிலரோ சங்காரவென்று அவன் றிருவடிகளை ஸ்மரித்து இந்நிலைமையுன்பாற் சொல்ல வந்தோம். நீயே யதனைச் செய்து முடிக்கவெனக்கூற யாதவ மகாராஜன் பொருள்களி* துளும்பினவனாய் தேவரீர் அடியேனைத் திருந்தும்படி திருவாய் மலர்ந்தருளியதால், அச்சொல்வடி நிற்றலே நன்று. ஆயினும் அத்தென் கைலாயத்தின் சிறப்புகளையெல்லாம் சிறியேன் தெரியும்படி நன்குபதேசிக்க வேண்டுமென வேண்ட, அரசனே! அத்தென் கைலாயச் சிறப்பினைக் கேட்க அவாவினையாயின் நாம் சொல்லுவோம் கேட்பாயாக. வசிட்டன், அகத்தியன், பிரமன், சிலந்தி, பாம்பு, யானை, வேடன், சிவகோசன், நக்கீரன், கன்னியர் முதலிய கணக்கில்லாதவர் அங்கு நற்கதி பெற்றுளர். அவர் சரிதை யெல்லாம் ஆதியந்தமாகச் சொல்லப் புகுந்தால் அநேக யுகங்கள் செல்லும். அவற்றுட் சிலவற்றைச் சொல்லுகின்றோமென்று, விடசங்கம வடிவமாக எழுந்தருளிய சிவபெருமான் நாராயணபுரத்திலே யாதவ மகாராஜனுக்குச் சொல்லினர். அவ்விதமாகவே யானும் தீவினை விலகிய புண்ணியர் ஏற்றுக் கொள்வார்களென்று கருதிச் சொல்லத் தொடங்கினேன்.

விடசங்கமச் சருக்க முற்றிற்று.

---

* துளும்பி—எ-து—எழும்பி (அல்லது) மேற்கொண்டு.

உ

சிவமயம்.

# தென் கைலாயச் சருக்கம்.

## வசிட்டர் ஐந்தலை நாகலிங்கத்தை பூசித்து பேறு பெருதல்.

### கலி விருத்தம்

ஆதி யாக வலவிளை ருண்டவண்
மீது தீர்ந்தவ ரவ்வத் திருக்கதை
யோத வேண்டி லுகம்பல செல்லுமக்
கதை யுட்சில காவல கூறுவோம்.

### அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

திங்களங் கண்ணி வேய்ந்த செஞ்சடைக் கருமி டற்றுச்
சங்கரன் றேவர் தம்முட் டலைவனா மாறுபோல
வங்கண்மா ஞாலத் தண்ண லரும்பெறல் வீட ளிப்பத்
தங்கிய தலங்க டம்முண் காளத்தி தலைமைத் தாமால்.

சிவபெருமான் எல்லாத்தேவர்களுக்குந் தலைவராக இலகுவது போல, தென் கைலாயமாகிய காளத்தி நகரம் முத்தி நகரங்களெல்லாவற்றுக்குந் தலைமையானது. அது மோட்சமெனப்படும் திருமகள் வசித்ததற்குறிய கமலர் போன்றது. அங்குள்ள ஊர்வன, நடப்பன, தத்துவன, பறப்பன, நீர்வாழ்வனவாகிய யாவும் சிவகணங்கள். ஜலாசய முழுவதும் ஆகாயகங்கை. அதுவே பூலோக சிவலோகம் அந்தக் காளத்தியெனும் பெயர்கொண்ட வொருவனை கூப்பிடும்போது அப்பெயரைச் சொல்வோனும், அவ்வோசையைக் கேட்போனும் சூரியனெதிர்ப்பட்ட பனியைப் போலப் பாவத்தே யொழிவதென்றால் அதன் பெறுமை சொல்லமுடியுமா? ஆயினும் வசிட்ட முனிவர் நற்கதியடைந்த சரித்திரத்தைச் சொல்லுவேன் கேட்பாயாக.

பூர்வம் சில யுகங்களின் முன்னர் சூரிய மரபிலுதித்த மித்திரசகனெனு மன்னவன் வேட்டைமேற்கொண்டு வனமடைந்தபோது

தன்னை எதிர்த்த அரக்கனொருவனைக் கொன்று, வேட்டை முடித்து நகர் சார, அவன்றம்பி தன்றமையனைக் கொன்ற பழிவாங்கக்கருதிப் பரிசாரக வேட மேற்று மன்னனை யடைந்து தொழில் புரிந்திருப்ப, அக்காலத்தில் வசிட்டர் விருந்தினராகச்செல்ல அப்பரிசாரகன் நரமாமிசத்தைப் பாகஞ்செய்து முனிவர்க்குப் படைக்க, முனிவர் வெகுண்டு சபிக்க, உதிரனெனும் பெயர் கொண்ட அரக்கனாகி வனத்தில் அலைந்துக்கொண்டிருந்தான். விசுவாமித்திரருக்கும், வசிட்டருக்கும் உள்ள பகைமைபால், விசுவாமித்திரர் அந்த உதிரனை யணுகி வசிட்ட புத்திரராகிய, சத்தி முதலிய நூற்றுவரையும் மடிக்கும்படி கட்டளையிட உதிரனெனு மரக்கன் அப்படியே அவர்களை முற்றுங் கொன்றனன். அதனால் வசிட்டமுனிவர் புத்திர சோக மேலிட்டு, தாமிறக்கக்கருதி உயர்ந்த மலைச் சிகரத்திலேறி அங்கிருந்து உருண்டனர். அப்படி விழுகையில், பூமிதேவியானவள் நூற்கேள்விகளாலும் தவத்தாலும், மிகுந்த அவருடல் ஒரு சிறிதும் வருந்தாவண்ணம் திருக்கையாற் றாங்கிக்கொண்டு, தபோ மகிமையுடைய வசிட்ட முனிவரே உமக்கு இது தகுதியாமோ? நீர் மலைமிசையிலிருந்து நிலத்திலுருண்டால் உமது துன்பம் விலகுமா? பரமேசுவரனை நோக்கித் தவஞ் செய்வீராகில் உமது துன்ப மகலுவதன்றி முத்தியும் பெறுவீரென்றுகூற, அதுகேட்ட வசிஷ்டமுனிவர் துக்கமகன்று, அதுவே நன்றெனக் கூறிப் புண்ணிய தலங்களினு மேம்பட்ட இந்தக் கயாரணிய க்ஷேத்திரமடைந்து சிறந்தவிடத்தில் மனமொடுங்கிப் பஞ்சேந்திரியங்களையுமடக்கி உணவாதிகளை யொழித்து கொன்றை மாலையணிந்த சிவபெருமானை இதய தாமரையிலிருத்தி, நெருப்பு, வெய்யில், மழை, குளிர், பனி, காற்று, மிருக முதலியவற்றினா லுண்டாகும் துயரத்தையுங் கருதாது பசி தாக நித்திரைகளின்றி நெடுங்காலம் அருமையாகிய தவத்தைச் செய்தனர்.

இவ்வகையாகத் தவம்புரியும் வசிட்ட முனிவருக்குத் திருவருள் புரியவேண்டி, பரமசிவன் தனிமையாக, ஐந்தலை யரவ வுருவத்தோடு பரசிவலிங்க மூர்த்தியாய் மேற்குத் திருமுகமாய்த் தரிசனந் தந்தருள, வசிட்ட முனிவர் கண்டு மன நடுங்கி மயிர்க்கூச் செறிந்து அடியற்ற மரம்போல நிலமிசை விழுந்து, சிவபெருமான் எழுகவே னெனத் திருவாய்மலர்ந்தருள மெழுந்து, உஞ்சிற் கூப்பிய கையராய் அருவியாறுபோல ஆனந்தபாஷ்பஞ் சொரியுங் கண்ணராய், நெருப்பிலிட்ட மெழுகுபோலுருகிய மனத்தராய், குழறிய மொழியராய், கொன்றமாலை யணிந்த சடை முடியும் திரிநேத்திரமு முடைய சிவபெருமானைத் தோத்திரஞ் செய்வாராயினர். இவ்வுலகத்தில் தேவரீரோடு உடனெண்ணக்கிடந்த பிரம விஷ்ணுக்களாலும் அறியப்படாத நீர், பிறவியாகிய பெருங்கடலில் வீழ்ந்து வருந்தி, அறிவு மயங்கித் திரியும் அறிதற்கெளிதானவரோ? தவசிகள் மனத்திற்



றங்குபவரே! எல்லாக் கலைகட்கும் ஆதியாகிய வேதங்களாலும் புகழ்தற்கரிய தேவரீர் நூற்கல்வி யின்மையும் அறிவின்மையுமுடைய அடியேனது அற்ப இழிதகமையுடைய சொற்களால் புகழத்தக்கவரோ? கைலாயமலை வாசியே! சரீர வாஞ்சை முதலியன நீங்கி ஐம்புலன்களையும் வெறுத்து மனமிறந்து அருந்தவம் புரிந்தவர்க்கும் தேவரீர் அடைதற்கரியராயிருந்தால், பரந்த ஆசைக்கடலில் செலுத்தும் பஞ்சேந்திரியங்கட்கு அடிமைபுரியும் என்னாற் றொடர்ந்து அடைதற் கெளியவராவீரோ? என்றிவ்வகையாகத் துதித்தார்.

அதனால், அகமகிழ்ந்த அரவாபரணர் நீ கருதிய வரம்யாது? அதனைக் கேட்பின் அங்ஙனமே யருள் புரிவோமென, வசிட்டமுனிவர் மனமகிழ்வுடன், பக்தியென்பதே ஒரு சிறிதுமில்லாத கன்மனத்தனாகிய என் விடயத்தில் பேரருள்கொண்டு காட்சிதந்த இந்தச் சிவலிங்கத் திருமேனியுடன் எக்காலத்தும் தேவரீர் இந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்து பலர்க்கும் இஷ்ட சித்திகளை யளித்தருள வேண்டினேன். அதுவுமன்றி, தேவரீர் அடியேனுக்கு ஞானோபதேசஞ் செய்யவும் விரும்பினேனெனப் பணிய, இறைவர் அவ்வண்ணமே யாகுகவென் றருள்புரிந்து, அங்கோர்கல்லால மர நீழலிலே தக்ஷிணாமூர்த்தி வடிவமாய் வீற்றிருந்து வசிட்ட முனிவரை அருகிருத்தி, இயற்கையாகவே வினையினின்று விலகி விளங்கிய ஞானமாய், பரமானந்த வெள்ளமாய், தம்மை யறிந்தவர்களுக்கு அபேதமாய், பூவில் மணம்போல உலகமுழுதுங் கலந்திருந்தாலும் அவற்றிற்கு வேறாய், ஜீவான்மாக்கட்கெல்லாம் பரவான்மாவாய், சர்வஞான மயமாய், வேதப்பொருள் கடந்த சோதி மயமாய், மனாதிகளுக் கதீதமாய், உயர்ந்து விளங்கிய தமது தன்மையையும், இச்சா மாத்திரையாகத் தாம் * சகளிகரித்த வடிவத்தையும், [illegible]த்தமாயை முதலிய மூன்றின் இயற்கையும் பிருதிவியாதி தத்துவ விலக்கணங்களையும் முத்தியிலக்கணத்தையும், அதனைப்பெறும் வகையையும் விளக்கமாகத் திருவாய் மலர்ந்தருள, வசிட்டமுனிவர் அவற்றையெல்லா முணர்ந்து ஞானமுற்று, துன்பத்தை விலக்கித் தோன்றிப் பேரின்ப மயமாகி, பிரியா விடை பெற்றுச் சுயேச்சையின் வழிசென்றனர். சிவபெருமானும் அத்திருக்கோலத்தோடு அங்கெழுந்தருளியிருப்பாராயினர்.

அப்பொழுது உமாதேவியார் பரமேசுவருடைய பிரிவுக்காற்றாமல் கயாரணிய க்ஷேத்திரமடைந்து ஞானப்பூங்கோதை யென்னுந் திருநாமத்தோடு எழுந்தருளி யிருந்தனர். அதுகண்ட விநாயகக் கடவுள், முருகக்கடவுள், வீரபத்திரக்கடவுள், வைரவக்கடவுளாகிய குமாரர்களும், உருத்திரர்களும், சிவகணங்களும் முதலாகவுள்ள ஏனையோரும், சிவபெருமானும், உமாதேவியரும் எழுந்

* சகளிகரித்த— எ-து —மாயாரூப.

தருளியுள்ள கயாரணிய க்ஷேத்திரத்தை யடைந்து பரமேசுவரனுடைய திருவருள் பெற்றவராய் அங்கு வசித்திருந்தனர். வெள்ளிமலையாகிய திருக்கைலாயமானது சிவபெருமான் குடும்பத்துடன் தன்னைப் பிரிந்த வகையைக் கண்டு, பெற்றோரைப் பிரிந்த குழந்தைகள்போலக் கலங்கிய மேருமலையுடன் கயாரணிய க்ஷேத்திரமடையக் கருதி ஆகாய வழியெழும்பி (பூர்வம் கடலினைத் தாவிச்சென்ற வாயு புத்திரரான அநுமந்தனையும், அண்டகடாகத்தையும் பிளக்க்கும் ஆற்றலுடைய வீரவாகு தேவரையும்போல) அவ்விரு மலைகளும் அங்குற்றன. அவற்றுள், திருக்கைலாயமானது சிவபெருமானுக்குக் கிழக்கிலிருந்தது. மேருமலை அதன் வடக்கிலிருந்தது. அது காரணமாக, அன்றுமுதல் அந்தக் கயாரணிய க்ஷேத்திரம் தென் கைலாயமெனும் பெயர்பெற்று விளங்கியது. அந்தத் தென் கைலாயத்தின் சிறப்பு முழுவதுஞ் சொல்லவேண்டுமானால் ஆதிசேஷன் தன் ஆயிரம் வாய்களாலும் ஆயுள்கால முழுதுஞ் சொன்னாலும் முடிவதன்று. பூலோகம்போலத் தெய்வ லோகமும் மகாப்பிரளய ஜலத்தில் மூழ்குங் காலத்திலும், அழியாது விளங்குகின்ற அத்திவ்விய க்ஷேத்திரத்திற்குப் பிற தலங்கள் ஒப்பாகுமோ? இத்தென் கைலாயத்தில் நாற்புறத்திலும் ஒவ்வோர் காதத் தெல்லை மட்டுமுள்ள கல், மர முதலிய தாவரங்களும், மக்கள் முதலிய சங்கமங்களும் யாவும் சிவரூபமேயாம். அம்மலையிலிருந்த புலி, யானை, இடபம், ஸர்ப்பம், மான், சிங்கம் முதலிய பிராணிகளும் சிவசாரூபமெய்துமென்று திருவாய்மலர்ந்தருளிய விடசங்கம வடிவாகநின்ற சிவபெருமானை நோக்கி, யாதவ மகாராஜன் மற்றொரு சரிதையைச் சொல்லவேண்டுமெனக் கேட்க பொன்முகரி நதியின் விர்த்தாந்தங்களைச் சொல்லத் தொடங்கினர்.

தென் கைலாயச் சருக்கம் முற்றிற்று.


---

உ

சிவமயம்

# பொன்முகரிச் சருக்கம்





பிரமதேவர் அகஸ்திய முனிவருக்கு பொன்முகரி புண்ணிய நதியை அருளல்.

கலி விருத்தம்

ஆதியங்கயிலையி னடைவு கூறினந்
தீதில்பொன் முகரியின் செய்தி கூறுதும்
யாதவ மன்னமர்ந் தினிது கேளென
மாதவ வடிவருள் வள்ளல் கூறுவான்.

---

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

(குளகம்)

மாநிலஞ் செம்மைத் தாக மாதவ நீதெற்கேகி
மேனிமிர் மலய வெற்பின் மேவுதல் வேண்டு மன்றே
ஞானவில் புலவ னாமே நொடிசெலத் தக்க தென்றான்
வானுயர் புகழி னானும் வணங்கிவாய் புதைத்து நின்று.

திருமறு வணிந்த மார்பன் றிசைமுகன் முதலோர் நிற்பக்
கருணையங் கடலே நாயிற் கடையனேன் றன்பால் வைத்த
வருளினாற் பணித்த வேவ லாற்றுவ லருளி னென்று
விரைமல ரடியிற் றாழ்ந்து விடைபொறீஇ விரைந்து சென்றான்

முன்னொரு காலத்தில் நீலகண்டராகிய பரமசிவன் இமாசலத்திலே மலயரசன் புதல்வியா யுதித்த உமாதேவியாரை மணஞ்செய்துக்கொள்ள வெழுந்தருளியபோது கருடர், காந்தருவர், கின்னரர், யக்ஷர், பூதர், வேதாளர், தேவர், அந்தரர், உரகர், தைத்தியர், ஆகாயவாசிகள், போக பூமியுள்ளார் முதலினோர்களுடன் காலக்கினி ருத்திரர், கூஷ்மாண்டர், ஆடகேசர், தாரகேசர், வைரவர், வீரபத்திரர், ஐயனார், சதருத்திரர், ஏகாதசி யுருத்திரர், புத்தியட்டகர், அட்டமூர்த்திகள், குண்டோதர், கும்போதர், சங்குகன்னர் முதலிய கணத்தலைவர்கள், பிரம்ம, விஷ்ணுக்கள், இந்திராதியர், திக்குப்பாலகர், அகஸ்தியர், காசிபர், கௌதமர், பரத்துவாசர், வசிட்டர், விசுவாமித்திரர் முதலிய முனிவர்கள், திருநந்திதேவர் முதலிய பரிசனங்கள் புடைசூழ்ந்து வரவும், விநாயகக்கடவுள் பூதகணங்களோடுமுன் செல்லவும், இறைவர் இடபவாகன மூர்ந்து சர்வ மங்களங்களோடும், வாத்திய கோஷத்தோடும் இமாசலமடைய, பர்வதராசன் எதிர்கொண்டு பணிந்து, மாளிகையினுட் கொணர, சிவபெருமான் அவரவர்கேற்ற ஆசனத்தி லிருக்கச்செய்து, தாமும் உயர்ந்த இரத்தின சகிதமான சிங்காதனத்தில் வீற்றிருந்தருளினர். தெய்வத் தொகுதி முழுவதும் அங்கே ஒன்றுறச் சேர்ந்தபடியால், பூமியானது தென்முனை யுயர்ந்து வடமுனை தாழ்ந்ததாயிற்று. அதனை நீக்க வேண்டுமென்று கிருபா மூர்த்தியாகிய சிவபெருமான் கும்ப யோனியாகிய அகஸ்திய முனிவரை யருகழைத்து, அகஸ்திய முனிவனே! இப்பூமி சமநிலையெய்தும்படி நீ தென்றிசை சென்று உயர்ந்த பொதியமலையில் வாழ்ந்திருப்பாயாக. அல்லாவிடில், நாமே விரைவில் அங்குச் செல்லவேண்டுமெனத் திருவாய மலர்ந்தருள, அகஸ்திய முனிவர் பணிந்து, வாய்பொத்தி நின்று, கடவுளே! திருமால், பிரமன் முதலினோ ரிருக்கவும், நாயிர்கடைப் பட்டேனாகிய என்னை யொருபொருளாக மதித்துத் திருவுளங் கனிந்தளித்த கட்டளையைத் திருவருளின்படி நிறைவேற்றுவேனென்று பாதங்களிற் பணிந்து விடைபெற்று, தம்மனைவி உலோபா முத்திரையாருடன் புறப்பட்டு, கேதார மலையைக் கடந்து கங்கையாறு சூழ்ந்த காசியைத் தரிசித்து, விருபாக்ஷம், தாக்ஷாராமபுரம், நந்திகிரி முதலிய தலங்களைப் பணிந்துக்கொண்டு தென்றிசை நோக்கி வருகையில் தென் கைலமலையைக் காணவும் பணிந்து நமஸ்கரித்து ஆநந்தக் கண்ணீர் சொரிய உடல் மயிர் கூச்செரியத் துதிசெய்துக்கொண்டு, அருந்ததிபோலுங் கற்பினை வாய்ந்த உலோபா முத்திரையாருடன் அந்த க்ஷேத்திர மகிமையைச் சொல்லிக்கொண்டே உள்ளே பிரவேசித்து, தாய்ப்பசு



வின்பாற் செல்லுகின்ற இளங் கன்றுபோல நாகலிங்கப் பெருமான் றிருமுன்னரெய்தி மனம் நெக்குருகவும், கண்கள் இடையறாது நீர் பெருகவும், உச்சியில் கைகளைக் குவித்தும், அந்தக்கரண புறக் கரணங்களை யொடுக்கியும், நெடுநேரம் உடல் தப்பித்து நின்றும், பின்னர் அவர் நீங்கிப் பலவாறு துதிசெய்தும், அங்கிருந்து அரிதில் நீங்கிக் கல்லாலின் கீழ் எழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தியைத் தாழ்ந்து, துதித்து, ஐஞ்சந்தி விநாயகரைப் பணிந்து, இளைய பிள்ளையாராகிய முருகவேளை நமஸ்கரித்து, சர்வலோக மாதாவாகிய ஞானப்பூங் கோதையாரைப் பிரதக்ஷிணம் வந்து துதிசெய்து பணிந்து அரிதில் அங்கு நின்றகன்று, துர்கை மலையிலேறி அத்துர்க்கா தேவியையும் நமஸ்கரித்து, அங்குள்ள பல அதிசயங்களையுங் கண்டு அவ்விடத்தில் ஒரு புனிதமான நதி யில்லாமையைக் கண்டு கண்டு, இங்கதனை யுளதாகச் செய்ய வேண்டுமென்று கருதி, பஞ்சேந்திரியங்களையும் அடக்கி யருந்தவஞ்செய்து ஆங்கு வசிக்கும் முனிவர்களிடஞ்சென்று ஐயன்மீர்! இங்கோர் புனித நதி உண்டாக்க வெனக்கு அநுக்கிரகம் புரிவீராகவென்று வேண்டிக்கொண்டு அந்தத்தென் கைலாயத்தை யகன்று, அதற்கு நான்கு யோசனை தூரத்தில் நிருதி திசையில் ஒரு மலையிலேறிச் சிவபெருமானிடத்தில் மனதைப்பதித்துப் பஞ்சேந்திரியங்களையு மொடுக்கி, உடலினைக் கப்பட்டினியிருந்து உலோபா முத்திரையார் பணிசெய்ய அரிய தவஞ்செய்தனர். வேனிற்கால முழுவதும் பஞ்சாக்கினி மத்தியினின்றும், மழைக்காலத்திலும், பனி காலத்திலும், வாயளவு ஜலத்தி லிருந்தும் அருந்தவம புரிவதுகண்ட இந்திரன் முதலிய தேவர்கள், இம்முனிவர் கருத்தெதுவோமென மயங்கிப் பிரமதேவனை யடைந்து கூற, பிரமதேவர் அத்தேவர்களோடுங் கைலாய கிரியை நோக்கிச்சென்று, திருநந்திதேவர் விடைபெற்றுச் சந்நிதியடைந்து சிவபெருமானைப் பணிந்து நமஸ்கரித்து வேத வாக்கியங்களால் துதிசெய்து நிற்க, அவர்களில் பிரமதேவர் ஐயனே! அகஸ்திய முனிவர் யாது கருதியோ கடுந்தவம் வெகு காலமாகப் புரிகின்றனர். அவர்க்கருள் புரிவீராக வென்றனர். சிவபெருமான் இவ்வாறு விண்ணப்பஞ் செய்த பிரமதேவனுக்குச் சொல்லுகின்றார். அகஸ்தியன் மற்றொன்றும் வேண்டினானில்லை. நம்முடைய தென் கைலாயத்திற்கு தீர்த்தமாக ஒரு நதியை விரும்பித் தவஞ் செய்கின்றான். அவனுக்காகத் தெய்வ கங்கையை விடுப்போம். நீ அவனிடஞ் சென்று கண் களிக்கும்படியிருந்து விரும்பிய வகையே அதனைக் கொடுப்பாயாகவெனத் திருவாய் மலர்ந்தருளவும், யாவரும் களிகூர்ந்து திரும்பினர். பிரமதேவர் அன்னவாகனத்தி லாரோகணித்துத் தென் கைலையடைந்து அகஸ்திய முனிவர் முன்னின்று தரிசனந் தரவும், முனிவரெழுந்து வணங்கிப் பணிய, பிரமதேவர் நீ விரும்பிய தென்னவெனக் கேட்க, அகஸ்திய முனிவர் இங்கே

ஒரு நதி வேண்டினேனெனக் கூற பிரமதேவர் ஆகாயத்தை நோக்க, அம்மலையின்மேல் கங்கையே ஒரு நதியாய் இறங்க அகஸ்திய முனிவர் கண்டு மலடாயிருந்தவள் வெகுகாலந் தவமிருந்து பெற்ற பிள்ளைபோலப் பெருங்களியெய்தினர். அப்பொழுது அந்நதி பொன் னிரத்தோடும் ஓசையோடும் வந்தபடியால், பிரமதேவர் அதற்குப் பொன்முகரியெனப் பெயர் தந்து அந்தர்த்தானமாயினர்.

அந்த நதியானது மலையைப் பிளந்துக்கொண்டு அதில்தேக்கு, சந்தனம், வாழை, மூங்கில்,வேங்கை. பலா, சண்பகம், பனை,முதலிய மரங்களைப் பெயர்த்துக் கொண்டு, கொலைத் தொழில் புரியுந் துஷ்ட மிருகங்களைத் திரளாகக் கொன்று பலரத்தினங்களையும் அவற்றோடு வாரிக்கொண்டு ஓசைமயமாகி, அகஸ்தியமுனிவர் தவஞ் செய்த காரணத்தால் அகஸ்திய மலையெனும் பெயர்பெற்ற அம்மலையை விட்டிழிந்து, திருவேங்கடம் காசி ராமேசுவரமெனுந் தலங்கட் கருகே சென்று, சீகாளத்தியாகிய தென் கைலாயத்திற்கு ஓராரம்போல் அக்கினி திசையிற்றிரும்பி ஓங்காரேசுவரமெனுந் தலத்தைச் சமீபித்துச் சமுத்திர சங்கம மாயிற்று. அதுகண்டு களிப்பு மிகுந்த அகஸ்தி முனிவர் அம்மலையின் றிறங்கி அந்நதிக் கரையில் அநேக சிவலிங்கங்களைத் தாபித்து அன்போடு அர்ச்சனை செய்தனர். தன் மனைவியாரோடு அந்நதியில் மூழ்கிச் சிவத்தியானஞ் செய்துக்கொண்டிருந்து பின்னர் ஒரு மலையில் வீற்றிருந்த அகஸ்திய முனிவரிடம் அங்கிருந்த பல முனிவர்களும் வந்து இவ்வாறு துதிசெய்தார்கள்.

மஹா புண்ணியராகிய அகஸ்திய முனிவரே! தேவரீர் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து அருந்தவஞ்செய்து பிறவி நோயை யழிக்கத் தக்க மருந்தாகிய இந்நதியைத் தருவித்ததால் யாங்களெல்லாம் உஜ்ஜீவித்தோம். தேவரீர் திருவருளுக்கு ஓரளவுண்டா. பூர்வம் சூரிய சந்திரர்களை ஆகாயவழியிற் செல்லவொட்டாது தடுத்த விந்த மலையை ஒருகழர்சிக்காய்போலத் தேவரீர் உள்ளங்கையா லழுத்திப் பாதாளத்திறக்கினீர். அலைகள்பொருந்திய பெருங்கடலை அதில் ஒளித்துக்கொண்ட விருத்திராசுரனைக் கண்டுபிடிக்கும்படி இந்திரன் வேண்டிக்கொள்ள அவ்வேண்டுகோளுக்கிணங்கி, ஒருழுந்தளவு ஜலமாகச் சேவிக்கச்செய்து உள்ளகையில்லேற்று ஆசமனஞ் செய்தருளினீர். தேவரீர் பிரபாவங்களை அடியேங்கள் அளவிட்டுச் சொல்ல வல்லமையுடையோமா? சரவலோகதாயகனை பரமேசுவரன் தனக்கும் தன் கணதிபர்கட்கும் மற்றனைவர்க்கும் தேவரீர் ஒருவரே சமானரென்று இவ்வுலகினை நிலைபெறச் செய்தலென்னுந் தொழிலைக் கட்டளை செய்தானென்றால்,தேவரீரது மகிமாவிசேடங்கள் அளவிடப் பாலனவோ. கனவிலுந் தேவரீரை யன்றிப் பிறரைப்



பணியாது தேவரீர் கருத்தின்வழி யொழுகும் இந்த வொப்பில்லாத கற்பின் விக்கிரகமாகிய உலோபா முத்திரையை மனைவியாகப் பெற்ற சிறப்பினை வாய்ந்தவரே! இல்லறமென்பது தேவரீரையன்றி வேறொன்றுளதோ. இதுவரையில் யாங்கள் இந்தத் தென் கைலாயத்தில் வசித்திருந்த புண்ணிய மிகுதியால் தேவரீருடைய பாதங்களைத் தரிசிக்கப் பெற்றோம். மானுடயாக்கை யெடுத்தனாலாகிய பெறும் பிரயோனசத்தை யடைந்தோமென்று பலவாறு துதித்த முனிவர்களை நோக்கி அகஸ்திய முனிவர் அவர்களைப் புகழ்ந்து தோத்திரமான வார்த்தைகள் பின்வருமாறு சில சொல்லினர்.

வேதத்தின் முடிவில் விளங்கும் பொருளை நிச்சயித்தறிந்த நல்ல ஞான முடையவர்களே! தங்கள் திருவருளினாலல்லவா பெறுதற்கரிய இந்த நதியைப்பெற்றது. அல்லாவிடில் இதனை யடியேன் பெருந்திறமையும் உடையேனோ? தேவரீர் இக்காரியம் செய்தற்கு எளியதேயாயினும், தேவரீர்களை யடைந்து யானும் மேம்பட்டவனாயினேன். அழகிய கொன்றைமாலை யணிந்த சடா முடியையுடைய சிவபெருமானே தெய்வமென்று தென்கைலாயத்தில் வாழ்ந்து விளங்கும் பாக்யமுற்ற சடைமுடி தரித்த பெரியோர்களே! உங்கள் சிறப்புகள் பலயுகங்களாகப் புகழ்ந்தாலும் முடிவு பெறுமோவென்று, இத்தகைய வார்த்தைகளால் அவர்களைச் சந்தோஷிப்பித்து, இந்தச் சிறந்த பொன்முகரி நதியில் மூழ்கினவர்கள் பரிசுத்தமான மோட்சத்தை யடைவார்கள். சிறந்த சிவபெருமானுடைய திருவருட்பெருக்கமே இந்நதியென்றுறுரைக்கத் தக்கது. கோவத்தை, கர்ப்ப ஸ்திரீ வதை, சிசுவதை முதலிய கொலைத்தொழில் புரிந்த பாவிகளாயினும் இந்நதியிற் படிந்தவர்கள் தேவராவார்கள். இதில் மூழ்கிய அன்னம் கருடன் முதலிய பறவைகள் வாகனமாகப் பெரும் உயர்பதவிகளை யடையும். இதில் வசிக்கும் மீன்கள் ஆகாயத்திலுள்ள விண்மீன் நக்ஷத்திரங்களாக விளங்கும். இத்தகைச் சிறப்புவாய்ந்த தீர்த்தத்தில் எக்காலமும் தோயும்படியான பெரும் பாக்கியத்தைத் தாங்கள் பெற்றுள்ளீர்கள். அப்புண்ணியத்தை யடியேன் அடைந்திலேன் எனக்கூறி அவர்கள் பால்விடை பெற்றுக் கொண்டு அகஸ்திய முனிவர் மனைவியாரோடு தமிழ்வலம்பெருகிய பொதிய மலையை யடைந்தனர்.

யாதவமகாராஜனே! இவ்வுலகிலுள்ள தெய்வ தலங்களிற் சிறந்த கயாரணியத்தில் விளங்கும் பொன்முகரியானது எல்லா நதிகளிலும் சிறந்தது. தத்துவாதீனான சிவபெருமானுக்குச் சமானமான அகஸ்திய முனிவரே வெகுகாலந் தவஞ் செய்து அத்தவப் பலனைப் பெற்ற இந்தப் பொன்முகரியோடு ஓராசனாகிய பகிரதன் கடுந் தவஞ் செய்து நிலவுலகிற்குக் கொண்டுவந்த கங்காநதி சமானமாகுமோ? மேற்கடல் மடைதிரந்து ஒருவழிக்கொண்டு கீழ்க்கடலிற்

புகவெழுந் தார்போலும் வருகின்ற இப்பொன்முகரியானது பகீரதன் கொணர்ந்தமையினாலே பாகீரதியெனவும், அது செல்லுகையில் சன்னு முனிவர் தவச்சாலை யழியுமென்று கருதி அவரவர் பானஞ் செய்யப்பட்டு மீண்டும் தம்மை வேண்டியிருந்த பகீரதனுக்காகச் (சன்னு—செவி) செவி விழியால் விடப்பட்டமையால் சாநவியெனவும் பெயர் பெற்ற கங்கையும் கவேர பர்வதத்தில் அகஸ்திய முனிவர் கமண்டல நீரைக் காகங்கழிப்ப வோடிய காவேரி நதியையும் ஒப்பென்று சொல்வது தகுதியாமோ! இந்நதியோ தன் கட்பட்டிறந்த யானை முதலியவற்றின் உடலையும் கடலிற் செலுத்தி, அவற்றின் உயிரையும் வெள்ளி மலையாகிய கைலாயத்தில் விரைந்து செலுத்தத் தக்கது இவ்வுலகத்தில் பொன்முகரியில் மூழ்கின்றவராயினும் பல துன்பங்களைத் தரத்தக்க பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்திரைக்கரை யேறுவர் என்றிவ் வகையாகப் பொன்முகரியின் சிறப்புகளை யெல்லாம் கரும்பு வில்லோனாகிய மன்மதனை யெரித்த நெற்றிக்கண்ணை மரைத்துவந்த சிவபெருமானாகிய சங்கமர், சத்துருக்களை வெல்லத்தக்க யாதவமன்னனுக்குக் கூறி, இதுவேயல்லாமல் இன்னுஞ் சில தீர்த்தங்கள் அங்குள்ளனவென மேலுங் கூறலாயினர்.

அரசனே! இருவினைகளையு மொழிக்கத்தக்க இந்திர தீர்த்தம், பாவியாகிய பாம்பைக் கொள்ளும் மயூர்தீர்த்தம். பிறவியென்னும் புரத்தைச் சுடத்தக்க உருத்திர தீர்த்தம், யமனை வெல்லச் செய்யும் மார்கண்ட தீர்த்தம், அரகர தீர்த்தம், யாவரும் விரும்பத்தக்க மோகினி தீர்த்தம், அலையெரிகின்ற மகாள தீர்த்தம் இவை முதலாகிய மிகப்புண்ணியகரமான தீர்த்தங்கள் எண்ணில்லாதன உள. அவற்றில் மூழ்கினவர்களைத் தேவர் கூட்டங்கள் பணியத்தக்க உயர் பதத்திலிருந்தும், இத்தகைய தீர்த்தங்களில், சூரிய கிரகணம், சந்திர கிரகணம், விதிபாத முதலிய விசேட தினங்களில் ஸ்நானஞ் செய்தவர்கள் *பஞ்சாக்கினிக் கிடையில் நெடுங்காலம் * நோற்றும் அடையப்பெறாத உயர்ந்த இன்பத்தை யடைவார்களென்று பொன்முகரி முதலிய தீர்த்த விசேடங்களைக் கூறி முடிப்ப யாதவ மன்னன் மனமகிழ்ந்து, சுவாமிகளே! அடியேனுக்கு இன்னுமோச் சரிதையைச் சாற்றி யருளவேண்டுமென வேண்ட விடசங்கமர் மிக மகிழ்ந்து, பிரமதேவன் சரிதையைச் சொல்லுகின்றோம். மனமமைந்து கேட்பாயாகவென மேலுஞ்சொல்லத் தொடங்கினர்.

பொன்முகரிச் சருக்கம் முற்றிற்று.

---

* நோற்றும்—எ-து—தவஞ் செய்தும்.



சிவபெருமான் பிரமதேவருக்கு நல்லவரமளித்தல்.

## நான்முகச் சருக்கம்.

---

கலிவிருத்தம்.

தீதில்பொன் முகரியின் செய்தி கூறினும்
வேதியன் கதையினி விளம்ப லுற்றனம்
யாதவ மன்னமர்ந் தினிது கேளென
மாதவ வடிதருள் வள்ளல் கூறுவான்.

எந்தை நீபணித் தாங்கவர் யாரையு
நந்து வித்தன னென்னவந் நான்முகன்
மைந்தர் மாண்ட துயரான் மனங்கொதித்
துந்து சீற்றத்தி னுக்கிரற் பார்த்தனன்.

பார்த்த காலைப் பரிதிவே லுக்கிரன்
போர்த்த நால்வாய்ப் பொருகளிற் றூரித்
தீர்த்த வார்சடைச் செம்மல் விழித்தநாட்
பூத்த வைங்கணை யானெனப் பொன்றினன்.

பொன்றல் கண்டவன் புத்திரர் யாரையுங்
கொன்று நின்ற கொடுமையு மன்றியிந்
நின்ற மைந்தனை யும்முயிர் நீக்கினே
னென்று நெஞ்சத் தெழுந்துய ரெய்தினன்.

எல்லா வுலகங்களையும் படைத்த பிரமதேவர் ஒரு பகற்காலத்தில் சத்திய லோகத்திலே ஒளிசொரியும் செம்பொன் மாளிகையில் மலர்ந்த ஆயிரவிதழ்களையுடைய தாமரைத்* தவிசில் நாரதர் முதலிய மகரிஷிகள் சூழவும், இந்திரன் முதலிய தேவர்கள் இருபுரத்திலுங் கைகட்டி வரிசையாய் நிற்கவும். அழகிய யக்ஷர், விஞ்சையர், துவாதசாதித்தர், ஏகாதச ருத்திரர், அஷ்டவசுக்கள், இரண்டு மருத்துவரெனும் முப்பத்து முக்கோடி தேவர்கள், உரகர், சித்தர், கின்னரர் முதலினோர் நெருங்கி நிற்கவும், காந்தர்வசிரேஷ்டர்கள் வீணாகானஞ் செய்யவும் அழகிய அப்சரசுகள் தாமரை போன்ற கைகளால் சாமரை † யிரட்டவும், பொற்பிரம்பைக்கையிற் பிடித்தவர்கள் முன்னிருந்து இவர்கள் இன்னாரின்னாரென்று குறிப்பிட்டுக் காட்டவும், பணிவோரைக் கண்டு அவர்களுக்குத் தக்கபடி திருவருள் புரிந்து நான்கு சிரங்களும் நான்கு மகமேருபோல விளங்கவும் சிறந்த அரசு வீற்றிருந்தனர்.

அவ்வமயத்தில் திருப்பாற் கடலிலுதித்த தேவாமிர்தமும் சந்திரனிடத்திலுதித்த அமுதகிரணமுங் கலந்து குற்றமில்லாத வடிவெடுத்தாற் போன்ற அழகு மிகுந்தொழுகிய திருமேனியையும் கொவ்வைக்கனிபோன்ற வாயையும் ஒளிதங்கிய விழியையும் குவிந்த குசங்களையு முடைய கலைமகள் சிறந்த ஆடையாபரணாலங்கிருதையாய், அநேக அரம்பாஸ்திரிகள் புடை சூழக் கணவன் பால் வந்து அவரோடு தாமரைப் பீடத்தில் ‡ (ஏகாசனத்தில்) இருந்தனள். பிரமதேவர் தம் மயலிலிருந்த மனைவியின் அவயவலங்காரங்களைக் கண்ணாரக்கண்டு உண்மகிழ்ந்த அடங்காக்காதலைக்கொண்டுக்காமக் கடலின்மூழ்கி, அங்கு வந்திருந்தவர்களை யெல்லாம் அதிவிரைவில் ஒருங்குசேர விடை தந்தனுப்பி, கரிய கூந்தலையும் வெள்ளிய சரீரத்தையுமுடைய கலைமகளுக்கு ஒன்று சொல்லுகின்றார். எனது நாவின் கண் விளங்கும் அமுதம்போன்றவளே! உன்மேலுண்டாகிய பெரும் விருப்பத்தைத் தீர்ப்பதற்கு உன்னுடைய ஒருவடிவமே போதாது. உயிரோடு கூடிய சித்திரப் பதுமைபோல்வாளே! கொவ்வைக்கனி போன்ற இதழையும் அன்னத்தைப்போன்ற நடையையும் உடையாளே! என் கண்மணியிலுள்ள பாவை நிகர்த்தவளே! அழகிய தனங்களையுடைய மயிலின் சாயலை யுடையாளே! நூறு என்னுந் தொகையாகிய வடிவங்களை யெடுக்கக் கடவா யென்றனர். உடனே சரஸ்வதி, தன் கணவன் விரும்பிய படியே தாமரை மலர், போன்ற முகமும் மாந்தளிர் மேனியும், பொன்மலையனைய தனமும் அரிபடர்ந்த விழியும் மேகநிகர்த்த கூந்தலும் அழகிய மேகலையுமுடைய

* தவிசில்—எ-து—ஆசனத்தில்.

† இரட்டவும்—எ-து—வீசவும்.

‡ ஏகாசனம்—எ-து—ஒரே ஆசனம்.



நூறுமாதர் வடிவமெடுத்தனள். பிரமதேவன் பாரதியின் நூறுவடிவங்களையும் தமது எட்டுத் திருவிழிகளாலும் ஆசையடங்கக்கண்டு, எளியவன் பொன்னிரம்பிய குடத்தை ஒருவருமில்லாத விடத்தில் எதிர்ப்பட்டாற்போல மகிழ்ச்சி மிகுந்து, மலர்க்கூந்தல் பொருந்திய மங்கையர் வடிவங்களைத் தனித்தனியே தழுவலாயினர்.

அம்மங்கையரில் ஒவ்வொருத்திபால் லதாவேஷ்டிதம் (கொடிபோலச் சுற்றித்தழுவல்) விருக்ஷாதிரூடம் (மரம்போலேறித் தழுவல்) திலதண்டுலம் (எள்ளும் அரிசியும் போலக் கலத்தல்) க்ஷீரநீரம் (பாலும் நீரும் போலச்சேரல்) ஊருப் பிரகூடம் (தொடையால் நெருக்கல்) சுகனைப சிவேஷம் (குறிகள் நெருங்கச்சேரல்) ஸ்தனாலிங்கனம் (கொங்கையழுந்தத்தழுவல்) லாலாடிகாலிங்கனம் (நெற்றி பொருந்தத் தழுவல்) எனப்படும் அஷ்டவகை ஆலிங்கனங்களைச் செய்து, ஒவ்வொருத்தியின் உதடு, நெற்றி, விழி, நா, கன்னம், கழுத்து, மார்பு, கைம்மூலம், குசம், அல்குல் முதலிய விடங்களை சுவைத்தும், ஒவ்வொருத்தியின் கைமூலம், மார்பு, தோள், பிடர், கழுத்து, கன்னம், கொங்கை, அல்குல், வாய், தொடை, விலாப்புறம் ஆகிய பதினோரிடங்களில், அர்த்த சந்திரன் மண்டலம் புலிங்கம், மயூரபதம், முயலடி, உற்பல முதலிய நகக் குறிகள் வைத்தும், மேலே சுவைத்த தானங்களில் நாவிழி, மேலுதடு, நீங்கிய விடங்களில் மூஷகம், அநுச்சூனகம், பிரவாளமணி, பிந்துமணி, பிந்துமாலை முதலிய தந்தகுறிகளமைத்தும், அங்குலியோகம், கரிகர முதலிய அஷ்டதானங்கள் செய்தும், உத்தானிதம், திரியக்கு, ஆசிதகம், ஸ்திதம், ஆனமித மெனப்படு நால்வகைத்தான அறுபத்து நான்குவித லீலைகளாற்றியும், இதனால் அவரில் ஒருவர்க்கொருவர் மேம்பாடு காரணமாக வெழுந்த ஊடலைத் தவிர்த்தும், நூற்றுவரிடத்திலும் மலர்தோறுமிருந்து மதுவுண்ணும் வண்டுபோல அரும்பெறலின்ப மநுபவித்தனர். பிரம தேவர் மங்கையர் மயக்கால் காலமும் சமயமுங் கருதாது தம்மைத் தரிசிக்க வந்தோர் பலர் திருவாயிலிற் குழுமி யிருக்கவும் மங்கையர் மையலில் அழுந்தியிருந்தனர்.

சதுமுகக்கடவுள் இப்படி ஆனந்த மெய்தியிருக்கையில் வாளுங் கேடகமுந் தாங்கிய கைகளும், செவ்வரி நிறஞ் செறிந்த தலைமயிரும் நெருப்புப் பொறிபறக்கும் கண்ணும் பிறைசந்திரன் போன்ற வக்கிர தந்தமும், கோப சொரூபமும், ஆகாய மளாவிய தேகமும், இடிபோல வெடிபடும் குரலும் கடல் நீர் பருகியெழுந்த கார்மேகம் போன்ற நிறமும், மலைகளையும் பெயர்த் தெரியும் வல்லபமும் வாய்ந்து கண்டோர் அஞ்சத்தக்க முப்பதினாயிரம் அரக்கர்கள் இயமனும் உடல் நடுங்கும்படி ஒன்று சேரப்பிறந்தார்கள். அவ்வரக்கர்கள் உடனே பதுமையோனியின் பதமலரிற்பணிந்து, சப்ததீவுகளையும் பசி தீரவுண்ணலாமா? சப்தசாகரங்களையும் நீர்வறக்குடிக்கலாமா?

மேரு முதலிய பர்வதங்களை* அநாயாசமாகப் பந்தாடலாமா? நக்ஷத்
திரத் தொகுதிகளை யெல்லாம் வாரி வாயிற் பெய்யலாமா? அஷ்ட
நாகங்கள், அஷ்டகஜங்கள், அஷ்டதிக்பாலர்கள் இவர்களை வெல்ல
லாமா? விஷ்ணு, அக்கினி இயமன், வருணன், வாயு, குபேரன்,
ஈசானன் முதலினோரை அடக்கலாமா? எந்தையே! அடியேங்கட்கு
ஒருகுற்றேவலைக் கட்டளையிடவேண்டு மெனகேட்க, பிரமதேவர்
காலமல்லாத காலத்தில் இவ்வனிதையரைக் கலந்தமையின் இத்
தகைத் தீயோருதித்தன ரெனமனங்கொண்டு, மகாகோப சொரூபி
களாகப் பிறந்த அப்புதல்வரை நோக்கி, நீங்கள் ஆகாயமளாவிய
விந்தகிரியில் வசித்திருங்க ளெனக்கூற அவர்கள் ஒன்று சேர
ஆண்டடைந்திருந்து இந்திராதி திக்குப்பாலகரு மெதிர்த்தோட
அவர்களாற் கொடுக்கப் பெற்ற கப்பங்களாகிய நவரத்தினங்கள்,
பொன், யானைகள், குதிரைகள், முதலியவற்றைப் பெற்றுக் சுகித்து
வாழ்ந்திருந்தார்கள்: அவர்கள் தேவர், யக்ஷர். பூதர்: கருடர்:
கந்தருவர், நாகர், அசுரர், சித்தர், வித்திராதர், கின்னரர்முதலினோர்
அடிபணிந்து குற்றவேல் கேட்க உலக முழுதும் தடைபடாது
கட்டளை செலுத்தி அரசாண்டு, சடைமுடி தரித்த முனிவர்
தவத்தை யழித்தும், மாதர் கற்பை விலக்கியும்: வேதியர் புரியும்
யாகத்தை வேரோடறுத்தும், தேவர் பெருமையைத் தீர்த்தும் வந்
தார்கள். அந்தணர்கள் ஒரு கடிகைக்குள் காலைக்கடனைக் கழித்துச்
சடைகுலையவோடி அரக்கர் செல்வம் பெருகுக வென்று வாயில்
வாழ்த்தித் திரிந்தார்கள். இந்திரன் அரக்கருடைய சமயம் நோக்கி
அவர்பாற் சென்று சிவபெருமான் திருவடிபோலப் பணிந்து
நம்பால் என்ன குற்றங் கற்பித்துத் தண்டிப்பார்களோ வெனப்
பயந்து மனத்தில் அச்சத் தீச்சுட விருந்தான். தெய்வ நடன
மாதர் அவ்வரக்கரிடத்தில் பாடியும் புணர்ந்தும் சிறுவர் கையிலகப்
பட்ட மலர் மாலைபோலக் கசங்கி வருந்தினர். இவ்வகையாகத்
தேவர்களெல்லாம் வருந்த கொடிய அரக்கர் வாழ்க்கையில் வச்சிர
பாணியாகிய இந்திரன், ஒருநாள் பிரமதேவர்பாற்சென்று பணிந்து
தமக்குற்ற சங்கடங்களை யெல்லாஞ் சாற்ற சதுமுகக்கடவுள் பெரி
துஞ்சினந்தார். அக்கோபத்தினின்றும் உக்கிரன் என்னும் உக்கிர
சொரூபி தோன்றித் தந்தையாரைப் பணிய, நீ விரைவில் தேவர்
களோடு விந்தமலை யடைந்து அவ்வரக்கர் முன்னோரென்றுகருதாது
அவர்களையெல்லாங் கொன்று தேவர்கட்கு நன்மையை விளைவிப்
பாயாக வென விளம்பி குதிரை, தேர், யானை, சேனை, முதலியன
கொடுப்ப உக்கிரன் அக்கணமே தக்கபடி தந்தை தாயார் பாதங்
களைச் சிந்தையிற்கொண்டு இந்திரனோடு கூடிப் போர்க்கு சிங்கத்
தேரின்மேல் உதயகிரியிற் சூரியன் உதயமானாற்போ லேறினன்.
தான் ஏறிய ஆயிரஞ் சிங்கங்கள் பூட்டிய தேரின் சக்கரத்தி லெழு

* அநாயாசம்—எ-து—அலட்சியம்



ந்த * துகள் விண்ணுலகைமூடி மண்ணுல கெனும்படி செய்தது.
தும்பமாலை சூடிப் போர்க்கோலங் கொண்டு உக்கிரன் வருஞ்செயலை
ஒற்றர்களறிந்து அரக்கர்களிடத்தில் வாயு வேகமாயோடி அடி
வணங்கி, தேவர்கள் உங்கள் துன்பத்திற் காற்றாது முறையிட உங்
கள் பிதா ஒரு புதல்வனை யுண்டு செய்து போருக்கனுப்பி யுள்ளார்.
அவன் பெயர் உக்கிரன், பொன்மலை போலும், பூரித்த
தோளுடையவன், கோப மிகுந்தவன், ஒளிக்கும் வீரகண்டாமணி
தரித்தவன். சூரியன் போன்ற வேலேந்தியவன். சிங்கங்கள் பூட்டிய
தேரைக் கொண்டவன். தேவர்களெல்லாரும் புடைசூழச் † செருச்
செய வருகின்றன னெனக்கூற, ‡ ஒற்றர் உரைத்தமை செவியிற்
புகுமுன், உள்ளேயிருந்து கோபாக்கினி யெழுந்தாற்போலக் கண்
கள் சிவந்து, வில்போன்ற புருவத்தையும் நெற்றியையும் நெரித்துக்
கொண்டு, உதடு துடித்து, பற்களைக் கடித்து, உடல் துடித்தார்கள்.
நமக்கெல்லாம் இளையவனை ஒருவன் நம்மீது போருக்கு வந்தா
னென்றால், இவ்வுலகத்தில் நம்மிலும் எளியாரொருவருண்டோ
வென்று சொல்லி, இடிபோலச் சிறித்து கடல்போ லார்ப்பரித்து
விரைந்தெழுந்தார்கள். அவ்வாறு யுத்தசன்னத்தரான திவாந்தகன்,
சயோத்துகிகன்: நீலாங்கன். சமரகேசரி, அரிலுண்டவன் முதலான
வர்கள் ஆயுதங்களோடும் இரதாரூடராய் நால்வகைச் சேனையும்
புடைசூழ வீராவேசத்தோ டெதிர்த்துப்பெரும்போர் செய்தார்கள்.
உக்கிரனும் உக்கிரமாகப் பலபடைகளைச் செலுத்தி அவ்வரக்கரைத்
தக்கபடியே தனித்தனிமாய்த்து எஞ்சிநின்ற ஏனைய சேனாதிபர்
முதலினோர் மீது அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்து அவரனை
வரையும் ஒரு விநாடியிற் சாம்பராக்கினன். அக்காலத்தில் எண்ணி
றந்த பூதங்களும் நாய் நரிகளும் கழுகு பருந்துகளும் விருந்
துண்டு சந்தோஷித்தன, கவந்தங்களாடின, உதிரவாறோடியது.
தேவர்கள் மலர்மாரி சொரிந்து வாழ்ந்திருந்தார்கள்.

பிரமதேவராகிய பிதாவின் கட்டளைப்படி அரக்கர் முப்பத்தி
ஞ்பிர வரையு முடித்து, யுத்தக்களத்தை நீங்கி, தேவர்கள் புடை
சூழ்ந்துவர, உக்கிரன் சத்தியலோகமடைந்து பிதாவைப் பணிந்து,
எழுந்து எதிரே நின்று, எந்தையே! தேவரீர் கட்டளைப்படியே
யாவரையும் கொன்று தேவர் துயரத்தைத் தீர்த்து வந்தேனெனத்
தெரிவிக்க, நான்முகக் கடவுள் தன் புதல்வ ரிறந்த துன்பத்தால்
மனங்கொதித்து உக்கிரன் முகத்தைப் பார்க்க, அப்பொழுது சிவ
பெருமான் திருநெற்றி விழியால் பார்க்கப்பட்ட மன்மதன்போ
லெரிந் தொழிந்தனன்.

* துகள்—எ-து—புழுதி
† செரு—எ-து—போர்.
‡ ஒற்றர்—எ-து—தூதர்.

அவ்வாறு உக்கிரன் இறக்கக்கண்டு, பிரமதேவர் ஐயோ! நான் புத்திரர்களை யெல்லாங் கொல்வித்த பாவத்தோடிராமல் அவ்வாறு செய்த இந்த உக்கிரனையும் இறக்கச் செய்தேனே யென்று மனத்திற் பெருந்துயர் கொண்டு, ஒருவாறாதாமே தணிந்து தமக்குப்புதல்ரில்லாமையும் புதல்வரைக் கொலை செய்த பாவத்தையும் விலக்க விரும்பி, சிவபெருமான் எழுந்தருளியுள்ள புண்ணிய ஸ்தலங்களெல்லாவற்றினும் மேம்பட்ட தென்கைலை மலையையடைந்து பொன்முகரி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சந்திர சேகரராகிய நாகலிங்க பெருமானைத் தரிசித்து அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்கரித்தனர்.

பின்னர், பிரமதேவர் தென் கைலாய மலைக்கும் நீலமலைக்கும் நடுவேயிருந்து தமது மனத்துயரை யொழிக்கத்தக்க நல்ல தவஞ் செய்யத் தொடங்கி, மனத்தை ஐம்புலன் வழிச்செல்லவொட்டாது நீலகண்டராகிய சிவபெருமான் பாதத்திலிருத்தி அருந்தவத்தில் அமைந்திருந்தமையின், கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் அவர் செய்த தவத்திற்கு அருள்புரிய விரும்பி, காளகண்ட சதுர்புஜ உமா சமேதராய் இடபாரூடராய்க் காட்சி தந்தருளவும், பிரமதேவர் *துணுக்குற்றெழுந்து உடல் புளகிக்கவும் கண்கள் ஆனந்த பாஷ்பஞ்சிந்தவும் மனமுருகவும் இறைவரது தாட்டாமரையில் சாஷ்டாங்கமாகப் பணிந்து எழுந்து நின்று, கைகளைச் சிரமிசைக் கூப்பி ‡ நாத்தழும்பேறவேத வாக்கியங்களாற் றுதித்து நிற்கையில், சிவபெருமான் திருவுள மகிழ்ச்சி மீக்கொண்டு, பிரமனே! நீ விரும்பியது யாது? சொல்லுகவென வினவ, நான்முகக்குரிசில் கிருபாமூர்த்தியே! யான் காலத்தையும் சமயத்தையுங் கருத்திற் கொள்ளாது மாதுமயக்குற்றமையின் வலிதங்கிய பகைஞராகிய முப்பதினாயிரம் அரக்கர் அக்கினிபோலப் பிறந்தார்கள். அவர்கள் யாவரும் விந்தகிரியிற் சேர்ந்திருந்து உலகிற்கெல்லாம் பெருந்துயர் விளைத்தனர். தேவர்கள் அத்துன்பத்தை என்னிடஞ் சொல்லி யாசிக்க, எனக்குப் பெரிய வடவா முகாக்கினி போன்ற கோபமுண்டாயிற்று. அப்போது உக்கிரனென்னும் பெயரேற்ற ஒரு மகன் உதித்து என் கட்டளையை மேற்கொண்டு விந்தத்தையடைந்து அரக்கர்களனைவரையுஞ் சிந்தும்படி கொன்று திரும்பி நிகழ்ந்த செய்தியை எனக்குத் தெரிவிக்க, முப்பதினாயிர மக்கள் முடிந்த காரணமாக மனம் வருந்தி அவ்வுக்கிரன் முகத்தைப் பார்க்க அக்கணமே அவன் திக்கென வெரிந்து போயினன். தேவரீர் தர்மசொரூபராதலால், என் மக்களில்லாக் குறையையும் மக்கட் கொலை செய்த மிக்க பாவமும் தீர்க்கக்கருதி இங்கு தவமியற்றினேனெனச்சாற்ற, சிவபெருமான் நீ தென் கைலாயத்தின் சிகரத்தை நன்றாகத் தரிசித்தனை. நீ கொலை புரிந்த தனாலுண்டாகிய பாவத்தை விலக்கி[illegible]யினை. தமது

* துணுக்குற்றெழுந்து—எ-து—பயப்பட்டு.

‡ நாத்தழும்பு—நாக்குத் தடிப்பு.




தென் கைலாய மலையின் உயர்ந்த சிகரத்தைக் கண்டோர் யாவராயினும் சூரியனைக்கண்ட பனிபோலத் தன்பாவங்களினின்று நீங்குவர். நீமகப்பேறு கருதினையாயின், மாசிமாத மக நக்ஷத்திர தினத்தில் சூரியோதய காலத்தில், பொன்முகரியில் ஸ்நானஞ்செய்து இந்நாகலிங்கப் பெருமானை யடைந்து நூற்றெட்டுமுறை பிரதக்ஷிணஞ் செய்து நூற்றெட்டு நமஸ்காரம் புரிந்தால் பாவங்களை விலக்கத்தக்க சற்புத்திரனைப் பெறுவாய். இஃதுனக்கேயன்றி வேறொருவர் யாவராயினும் இங்ஙனம் புரிவோர் புதல்வனைப் பெறுவது நிச்சயமெனத் திருவாய் மலர்ந்தருளி அந்தர்த்தான மாயினர். அம்மொழிப்படி செம்மையாகச்செய்து விரதமிருந்த பிரமதேவருக்குச் சிவபெருமான் திருவருளால் பேரறிவுடைய புத்திரன் கலைமகள்பாலுதித்தனன்.

மகப்பேறுண்டாகலின் மகிழ்வெய்திய கலைவாணியும் நான்முகக்கடவுளும் உச்சிமோந்து களித்தார்கள். அக்காலத்தில் சிவபெருமான் ஆங்கெழுந்தருளி அம்மனுக்கு ரிபுவென்று நாமகரணஞ் செய்து வேதமுதலிய கலைஞானங்களில் பூரண அறிவு அனுக்கிரகித்துமறைந்தனர். பின்னர் சிலகாலஞ்செல்ல, ரிபு தந்தயரை வந்தனைசெய்து விடைகொண்டு காடுமலை ஆறு முதலிய விடங்களில், வசித்து * நிதாகருக்கு ஞானோபதேசஞ் செய்தனர். அந்த நிதாகரே சனகாதியர்க்குபதேசித்தன ரென்பார்கள். பிரமதேவர் தம் மனைவியாருடன் சர்ப்பாபரணராகிய நாகலிங்கப் பெருமானுடைய திருவடிகளில் நமஸ்கரித்துத் தமது சத்திய லோகமடைந்து நித்திய வாழ்விலமர்ந்தனர். சிவதலங்களெல்லாவற்றிலும் இத்தென் கைலாயம் மிகவும் புகழத்தக்க புண்ணிய பூமி. யாதவமன்னனே! இஃதுபசாரமன்று என்று விடசங்கம வடிவாக வந்த சிவபிரான் திருவாய்மலர்ந்தருள, அரசன் மகிழ்ச்சி மிகுந்து அடியேனுக்கு இன்னும் அந்த க்ஷேத்திர மகிமையைச் சொல்ல வேண்டுமென வேண்ட இறைவர் இதுகாறும் பிரமதேவர் சரிதையைச் சொன்னோம். இனிச் சிலந்தி, பாம்பு, யானைகளின் சரிதையைச் சொல்வோம் கேட்பாயாகவெனச் சொல்லலாயினர்.

நான்முகச் சருக்கம் முற்றிற்று.

*நிதாகர்—எ-து—சூரியர்.




## சீகாளத்திச் சருக்கம்.

யயாதிராஜனே! நான்முகக்கடவுளாகிய பிரமாவானவர் சிருஷ்டித்தொழிலை நடத்தி வருகையில் விசுவ கன்மாவின் கண்ணில் பிறந்த மாதவவூறன்என்பவன், அப்பிரமாவினைச் சிறிது மதியாமல் தானும் இந்தஉலகங்களைச் சிருஷ்டிக்கும்பொருட்டு, எத்தனிக்கப் பிரமாவானவர் அந்த மாதவ வூரனை யழைத்துப் பார்த்து அதிக கோபங்கொண்டு நீ தகாத காரியம் செய்ய ஆரம்பித்தனை, ஆகையால் நீ சிறிய நூலினை யுண்டுபண்ணும் சிலந்திப் பூச்சியாகக் கடவையென்று சபித்தனர். உடனே அவன்வணங்கி ஐயனே! நான் அறியாமையாற் செய்த பிழையினை மன்னித்தருளவேண்டும் என்று மிகவும் வணங்கிக் கேட்டுக்கொள்ள பிரமாவானவர் மனமிரங்கிப் பிள்ளாய் நீ பயப்படவேண்டாம். எமது கருணை நிதியாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தென் கைலாயமடைந்து, அவரைப்




பூசிப்பையேல் அவர் திருவடியினை யடைவா யென்றனர். அம்மாதவ வூரன் கிருதயுகத்திலே ஒரு சிலந்தி பூச்சியாகிய பூர்வ ஜென்மாந்திர புண்ய விசேஷத்தினாலே பொன்முகரி நதியிலே பிரதிதினம் ஸ்நானஞ் செய்து தென்கைலையி லெழுந்தருளி யிருக்கும் அனந்த கல்யாண குண பரிபூரணனாகிய சிவலிங்கப் பெருமானை வணங்க எண்ணித் தன்னுடைய வயிற்றிலே யிருந்து உண்டாகின்ற நூல்களை யெல்லாம் தனது வாயினாலே வாங்கி இழைத்து இழைத்து மதில், கோபுரம், மண்டபம், மாளிகை, கருப்பக் கிரகம் முதலியவைகள் செய்து சிவலிங்கப் பெருமானுக்குப் பந்தலிட்டு ஒரு சிறிதுநேரமும் இளைப்பாராமல் அடிக்கடி அறுந்துபோகும் நூல்களை முன்போலவே புதுக்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது திவ்யமங்கள விக்கிரகனாகிய சிவபெருமான் அச்சிலந்திப் பூச்சியின் அன்பினைச் சோதிக்கும் பொருட்டு, திருவுளங்கொண்டு சமீபத்தில் எரிந்துக் கொண்டிருக்கும் தீபத்தை அதிகச்சுடர் விட்டு எரியும்படி செய்யவே அந்தத் தீபாக்கினியால் சிலந்திப் பூச்சி கட்டிய நூல் ஆலயமுழுவதும் எரிந்து விட்டது. அதைக்கண்டு அச்சிலந்தியானது மிக்கத்துயரங் கொண்டு கட்டியகோயிலானது எரிந்து விட்டதே! என்செய்குவேன், நான் முன்பிறப்பில் செய்த தீவினையோ? கிருபா மூர்த்தியாகிய சிவபெருமானுக்கு என் கோயிலின் மீது கிருபை யில்லையோ? ஒன்று மறியேனே! நெடுநாள் நித்திரையின்றிக் கட்டி முடித்தேனே, தூங்கி யறியேனே! பெருமான் திருவுளம் இப்படியோ முடிந்ததுஎன, விம்மி விம்மி யழுது, இனி யான் கட்டிய கோயிலழிந்த பின் நான் உயிரோடு இருந்து இவ் வுலகில் வாழமாட்டேன் என்று தீர்மானித்துக்




சிலந்திப் பூச்சிக்கு ஈஸ்வரன் காட்சி தந்தது.

கொண்டு நானும் அந்த விளக்கில் விழுந்து உயிரை விட்டு விடுவே னெனத்துணிந்து எழுந்தது. அதை யுணர்ந்த ஆபத்துச் சகாயனாகிய அருட்பெருமான் வெளிவந்து சிலந்தி விளக்கில் விழுந்து இறந்துபோகாதபடி தடுத்துச் சிலந்தியே! உன் விருப்பம் என்ன கேள் என்ற மாத்திரத்தில் சிவபெருமான்! வேதவேதரீர் தங்களை யறிந்த முனிவரர்கட்கும் எட்டாது விளங்கும் தேவரீர்திருவடியை யடையவேண்டுமென்ன, அங்ஙனமே செய்வோமெனத் தமது திருவடி நிழலில் கலந்து வாழும்படி செய்தனர்.



திரேதாயுகத்திலே, தேவ தேவனாகிய சிவபெருமான் உலக மாதாவாகிய பார்வதியுடனே, திருக்கைலாய மலையிலே சிவபுரத்திலே தேவர்கள் சூழச் சிங்காசனத்தி லெழுந்தருளி யிருக்கையில், தமது திருமேனியில் புலித்தோலாடை தரித்து ஆதிசேடன் முதலிய பாம்புகளை ஆபரணமாகத் தரிக்கையில் காளனென்னும் பாம்பைக் காணாமல் ஆலோசித்துக் கொண்டிருக்கையில், அப்பாம்பு விரகங்கொண்டு தனது மகளிர்பால் அடைந்திருத்தலை யறிந்து அதையழைப்பித்து காளனே! நீ தென் கைலாய மடைந்து சாமானியமான பாம்பாகப் பிறந்து நம்மைப் பூசித்துக் கொண்டிருக்கக் கடவாய். அப்போது உன்மேற் பகைக் கொண்டு ஒரு யானை யுன்னைக்கொல்ல இருவரும் சிவ சாரூபமடைவீரென்றனர். அந்தப்படியே அப்பாம்பானது தென்கைலாயத்திலே பிறந்து அருமையான விலையுயர்ந்த இரத்தினங்களைச் சேகரித்துக் கொண்டு வந்து சிவலிங்கப் பெருமான் திருமுடிமேல் சாத்தி ஆனந்தங்கொண்டு பூசித்துக் கொண்டிருந்தது.



திருக்கைலாய மலையாகிய வெள்ளியங்கிரியிலே ஒருகாலத்தில் அத்தி யென்னும் ஒரு கணத்தலைவன் சிவபெருமானைப் பூசிக்கத் திருக்கோயிலின் வாயலில் வந்த போது அவ்வயலைக்காத்துக் கொண்டிருந்த காவலாளர் அவனைநோக்கிஐயா! உள்ளே போவதற்கு இச்சமயம்ஜெக




தீசவரியாகிய அம்பாளும் சர்வைஸ்வரிய சம்பன்னனான பரமசிவமும் தனித்து வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்களென்றனர். இவ்வார்த்தையினைக் கேளாது உள்ளே பிரவேசித்தனன். அம்பாள் கண்டு ஏ கணத்தலைவனே! நீ யானையாகக் கடவாய் என்று சபித்தனர். பின்னர் அவன் பிரார்த்தனைக்கு மனமுவந்து நீ இத் தென் கைலாயமடைந்து யானையுருக்கொண்டு சிவபெருமானைப் பூசித்துப்பின் இவணடைகுவா யென்றனர். அங்ஙனமே யானையாகப் பிறந்து பொன்முகரிநதியிலே ஸ்நானஞ் செய்து தனது துதிக்கையினால் திருமஞ்சன நீர் முகந்துக்கொண்டு வந்து அப்பாம்பு அணிந்திருந்த இரத்தினக் கற்களை யெடுத்தெறிந்து விட்டு அபிஷேகம் செய்து வில்வத்தளிகளைப் பறித்துச் சாத்திப் பூசித்துச் சென்றது. அடுத்தநாள் பாம்பு மறுபடியும் வந்து சிவலிங்கப் பெருமான் சிரசில் வில்வ இதழ்களைக் கண்டு வருத்தமுற்று ஐயோ! இதென்ன அநியாயம்,நான் தரித்த இரத்தினங்களைக் களைந்து விட்டுப் பத்திரங்களை வைத்திருக்கின்றதே யென வருத்தமுற்று அவ்வில்வங்களைக் களைந்துவிட்டு மாணிக்கங்களை சாத்திப் போய்விட்டது. மருநாள் யானை வந்துப் பார்த்து இதென்ன கொடுமை நானருமையான வில்வங்களைச் சாத்தியிருக்க அவைகளை எறிந்துவிட்டுக் கற்களைச் சுவாமியின் தலைமேல் கொட்டியிருக்கிறதே யெனத்துக்கித்து அக்கற்களைக்களைந்து விட்டு வில்வங்களைச் சாத்தி போய் விட்டது. மற்றைய நாள் பாம்பு வந்துப்பார்த்து மருபடியும் வில்வங்களைச் சாத்தியவர் யாவர்? இத்தகைய கொடுமைகளும் செய்யத்தக்கவர் இப் பூமியிலிருப்பாரோ? இங்ஙனம் செய்தவர் எனக்குப் பகைவராகவே யிருக்க வேண்டும். அவரைக் காணின் சும்மா விடுவேனோ? என் விஷப் பற்களினாற் கடித்து உயிரை யிழக்கச் செய்யேனோ? என் பூசைக்கு விக்கினம் செய்வது சிவபெருமானுக்குச் சம்மதியாமோ? நல்லது ஆகட்டும் நாளைக்கு அக்கள்வனைக்கண்டு பிடித்துத் தக்கவேலை செய்கிறேனென்று இரத்தினங்களைச் சாத்திவிட்டுப் போய் விட்டது. உடனே யானைவந்து கற்களைக் கண்டு மனங்கசிந்துத் துதிக்கையைத் தரையிலேமோதி வீழ்ந்து புலம்பி அப்பனே! இங்ஙனம் நடப்பது உமக்குச் சம்மதந்தானோ? இக்கல்லுகளை எவ்வாறு சுமந்துக் கொண்டிருக்கிறீர், தேவரீருக்குத்


தலைநோயெடாதா? இக் கற்களைப் புட்பமாக எண்ணினீரோ? என் பகைவரிடத்து நீர் பட்சமாக விருக்கலாகுமா? அப்படி யிருந்தால் எனக்குத் துணைவர் யாவர்? ஒரு பகைவரும் எனக்கில்லையே? எனத் துக்கித்து, நான் எங்ஙனமாயினும் என் பகைவரை நாளையதினம் கொல்லுவேன் என்று வழக்கப்படி பூசித்துச் சென்று இரவு முழுதும் நித்திரையில்லாமல் விடியற்காலம் வருமளவும் நோக்கி யிருந்தது.

பாம்பும் பொழுது விடிந்தவுடன் எழுந்து சந்நிதியை யடைந்து சிவலிங்கப்பெருமான் திருமுடியில் சாத்தியிருக்கும் பூங்கொத்துக் களைக் கண்டு அதிகக் கோபங்கொண்டு அக்கொத்தில் தனது உடலைச் சுருக்கி யொளித்துக்கொண்டு பகைவரைக் காண வேண்டுமென



எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குப்பின் யானை வந்து தான் சாத்தியபடியே பத்திர புஷ்பங்கள் இருக்கக்கண்டு சந்தோஷித்துச் சிவபெருமான் நமது பூசைக்கு இன்றுதான் உவந்தருளினன் போலும் எனக்களித்துப் பொன்முகரியினை யடைந்து முழுகித் திருமஞ்சன மெடுத்துக் கொண்டு வந்து பெருமான் முடியின்மேலிருக்கும் பழைய புஷ்பங்களை யெடுத்தெறிய துதிக்கையினை வைக்க, மறைந்திருந்த பாம்பு சீறி யானையின் துதிக்கைத் துவாரத்தினுழைந்து மண்டைற் புகுந்துக் குடைய ஆரம்பித்தது.








யானை சிறிதும் சகியாது பேரிடியைப்போலக் கர்ச்சித்து நீரை முகந்து, முகந்து அடிக்கடி வீசி, வீசி கைசோர்ந்து பூமியிலே துதிக்கையினை மோதி இரத்தம்வெள்ளம்பெருகமரங்களில் மோதிக்



கொண்டும் தீராது கண்டு, நமது பகைவனைக் கொன்றுநாமுமிறந்து விடுவோமெனத் தீர்மானித்துத் துதிக்கையை மூடிக்கொண்டு பூமியதிரும்படி பின் பாய்ந்து பாய்ந்து தலைபிளந்து வீழ்ந்திறந்தது. பாம்பின் உடலும் நருங்கியது. உடனே பரமபதியாகிய பரமசிவன் சிவலிங்கத்தினின்றும் வெளிவந்து யானையையும் பாம்பினையும் எழுப்பி அவ்விரண்டிற்கும் சிவ சாரூபமளித்து உடன்கொண்டு திருக்கைலாயஞ் சென்றனர். சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்று முத்தியடைந்தமையின் இத்தலத்திற்குச் சீகாளத்தி என்னும் திருநாமமுண்டாகியது என்றருளிச்செய்து யயாதிராஜன் விருப்பத்தின்படி மேலும் கண்ணப்ப நாயனர் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினர்.

சீகாளத்திச் சருக்கம் முற்றிற்று.





## வாயு பூசித்த சருக்கம்

யாதவமகாராஜனே! ஒருகாலத்தில் பிரளய முற்பத்தியாகி அது முடிந்தபின்னர் ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து தேயுவும், தேயுவிலிருந்து அப்பும், அப்புவிலிருந்து பிருதிவியும் உண்டாயது. அப்பூதங்கள் அதிட்டித்துள்ள ஐந்து தேவர்களில் ஒருவராகிய வாயுபகவான் மகா கைலாசமடைந்து சிவானந்த நிலயமென்னுஞ் சிகரத்திற் சென்று சோதி சொரூபமாக விளங்கும் சிவலிங்கப்பெருமானைக் கண்டு பச்சைக் கற்பூரத்தினல் பூசித்துவர, ஒர்நாள் சிவபெருமான் பிரத்தியட்சமாகி ஓ அன்பனே! உன் தவத்திற்கிரங்கினேம். நீ இம்மலைக்குத் தெற்கு சென்று பாதகண்டத்திலே பிரசித்தியுள்ள திருகாளத்தி மலையினை யடைந்து பூசித்து வருவையேல் நீ கோறிய வரங்களை யளிப்போமென உடனே பெருமானிடத்தில் விடைபெற்றுத் திருகாளத்தினை யடைந்து பல ஆண்டு வில்வபத்திரங்களை கொண்டு,பச்சை கற்பூரத்தால் பூசித்து வருகையில் கண்ணுதல்மூர்த்தி அம்பாள் சமேதராக இடபவாகனத்தின் மீது காட்சிதந்தருளுளி உனக்கென்ன வரங்கள் வேண்டு மெனக்

கேட்க, வாயுபகவான் எழுந்து விழுந்து பணிந்து கருணையங் கடலே! அடியேன் உலகிலுள்ள சர்வ சிவராசிகளிடத்தும் சர்வ வியாபகமாக விளங்கவும், நான் பூசித்தபடி பச்சைகற்பூரங் கொண்டு பூசிப்பவர் சகல சித்திகளையடையவும், இம்மலை சிவானந்த நிலயமெனப் பெயரடையவும், நான் பூசித்த இவ்விலிங்கப் பெருமானை வணங்குவோர்கள் சிவசாம்பிராச்சிய மடையவும், இத்தலத்திற்கு என்பேரால் வாயுக்ஷேத்திரமெனப் பெயருண்டாகவும், நான் பூசித்ததற் கடையாளமாக சிவலிங்கப்பெருமான் சந்நிதியில் விளங்கும் தீபமானது எக்காலத்தும் அசைந்துகொண்டே யிருக்கவும் கிருபை செய்தருள வேண்டு மென்றனர். அங்ஙனமே தந்தோமென்று கருணைசெய்து அம்பாளுடன் அந்தர்த்தானமாயினர். வாயு பகவானும் தனதுலகடைந்து சுகித்து வாழ்ந்தனன்.

வாயு பூசித்த சருக்கம் முற்றிற்று.

---



## நக்கீரச் சருக்கம்.

யயாதிராஜனே! மதுரைமாநகரத்திலே வங்கியசேகர பாண்டியன் அரசாட்சி செய்துகொண்டிருக்குங் காலத்தில் தாமரைப் பூவின் கண்ணே எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவனார் காசிமாநகரினையடைந்து, அசுவமேதயாகம் பத்து செய்து முடித்து, கங்கா நதியிலே ஸ்நானஞ் செய்து எண்ணி தனது பத்தினிமார்களாகிய வாணி, சாவித்திரி, காயத்திரி யென்பவர்களுடன் போகையில், வாணியென்பவள் ஆகாய மார்க்கத்திலே ஒரு விஞ்சையர் கன்னியானவள் பாடிக்கொண்டிருந்த வீணைகானத்திலே தன் மனதினை வைத்துக் கேட்டுக்கொண்டே யிருந்துவிட்டனள். பிரமதேவன் கங்கையையடைந்து ஸ்நானஞ் செய்கையில் வாணியைக் காணாமையால்



மற்றைய இரு பத்தினிமார்களுடன் முழுகி எழுந்து கரையேறுகையில், வாணியானவள் வந்து தனது நாயகனை நோக்கி, ஐயா! என்னைப் பிரிந்து மற்றையருடனே நீர் ஸ்நானஞ்செய்தல் தகுதியாகுமோவென்று அதிகமாகக் கோபித்துக்கொள்ள, பிரமதேவன் ஓய் வாணி என்னுடன் நீ வராத குற்றம் உன்மீதிலே யிருக்க, அதனைச் சிறிதும் ஆலோசியாது நீ வீணே கோபித்துக்கொண்டனை. இந்தக் குற்றத்திற்காக நீ மனிதஜென்மமெடுத்து நீக்கிக்கொள்ளக் கடவாயென்று சபித்தனர். அச்சாபத்தை யேற்றுக்கொண்ட வாணியானவள் மிக பயந்து ஐயனே! சிருஷ்டி கர்த்தாவாகிய உனக்கு மனைவியாக நானிருந்தும் மனிதஜென்மமெடுத்து உலகில் மயங்கலாமோவென்று கேட்டுக்கொள்ள, பிரமாவானவர் மனமிரங்கி வாணியைப் பார்த்துப் பெண்ணே! என்சாபம் வீண்போகாது அது அனுபவித்தே தீரவேண்டும். ஆனால் அது உலோகோபகாரமாகவிருக்கும், நீயும்மிகுந்த கீர்த்தியடைகுவை உனது சொரூபமாகவிருக்கிற ஐம்பத்தோரெழுத்தில் அகர முதலாக நாற்பத்தெட்டுத் தமிழ்ப்புல்வர்களாக உலகத்திலே புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே தென்றேயத்திலே பிறந்து, அகர வுயிருக்குத் தலைவராகிய சிவபெருமான் மதுரையம்பதியில் எழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கப் பெருமானாகலின், அவ ஒரு புலவருருக்கொண்டு உங்கட்குத் தலைவராகவிருக்க அப்பெருமானுடன் நாற்பத்தொன்பது புலவர்களாய்ச் சங்கப்பலகையிலிருந்து, தீஞ்சுவைக்கரும்பினும், இனிய பசும்பாலினும், முப்பழத்தினும், சக்கரைப்பாகினும் மிகத் தித்திப்பாகிய செந்தமிழினை வளர்க்கக்கடவா யென்றனர். உடனே சரஸ்வதியின் உருவமே நகற்பத்தெட்டு எழுத்துகளாக வெவ்வேறே சாதிகளிற் பிறந்து பதினெட்டு பாஷைகளின் சொரூபத்தினையறிந்து தென்மொழியிலே மிகுந்த நுண்ணறிவுடையவர்களாய், தமிழ்ப்புலமையில் தலைமையுடையவர்களாய். விபூதி ருத்திராட்ச மேனியராய் பஞ்சாட்சர நாவினராய், சர்வஞ்ஞனாகிய சிவபெருமானுக்குத் தமிழ்மாலையினை யேசூட்டுபவராய், ஒவ்வொருதேசமுஞ் சென்று தங்கள் தங்கள் புலமையினைக் காட்டி ஜெயங்கொன்டு, தாமிரபரணி தீரத்திலுள்ள பாண்டிநாட்டிலே மதுரையம்பதியிலே செல்லவருகையில், கருணைசமுத்திரமாகிய கண்ணுதல் மூர்த்தியானவர் தான் ஒரு தமிழ்ப்புலவரைப்போலத் திருவுருக்கொண்டு அவர்கன் எதிரிலே வந்து அவர்களை நோக்கி நீங்கள் மகவர்? எத்தேயத்திலிருந்து வருகின்றீர் என்று கேட்க, அப்போதவர்கள் ஐயா! நாங்கள் தமிழ்ப்புலவர்கள் பாண்டிநாட்டிற்குப்

போகின்றோமென, அப்படியானால் தமிழ்மணம் வீசப்பெற்ற திருவாலவா யென்னும் மதுரையம்பதியிலே எழுந்தருளி யிருக்கின்ற கருணைமூர்த்தியாகிய சொக்கலிங்கப் பெருமானை வணங்கவேண்டும். என்னுடன் வாருங்களென்று இட்டுக்கொண்டுபோய் ஆலயத்திற் பிரவேசித்து மீனாட்சி சுந்தரேசனை வணங்குகையில் மறைந்து போயினர். புலவர்கள் கண்டு அதிசயங்கொண்டு தனித்தனியே சொக்கலிங்கப் பெருமானைப் பாடித் தோத்தரித்து வெளிவந்து பாண்டியனைப்போய்க் கண்டார்கள். பாண்டியன் அவர்கள் கல்வி கேள்விகளைக் கேட்டுச் சந்தோஷித்து, இவர்கள் ஒழுக்கத்தினைத் தெரிந்து மதித்து மிக வியந்து திருவாலவாய்க் கோயிலுக்கு வடமேற்றிசையில் ஒரு சங்கமண்டபமுண்டாக்கி, அப்புலவர்கட்குத் தகுந்த சிறப்புகளைச் செய்து, இந்த மண்டபத்திலேயே அமர்ந்திருங்களென்று சொல்லி மிக மரியாதையுடன் ஆதரித்துவந்தான். பாண்டியனால் மதிக்கப்பெற்ற இப்புலவர்களைப் பழையபுலவர்கள் கண்டு பொறாமைகொண்டு, அப்புலவர்களுடன் பலவிதமாகத் தர்க்கஞ்செய்து தங்கள் கவுரவமனைத்து மிழந்து தோற்றுப்போனார்கள். இவ்வாறே அந்நியதேசத்துப் புலவர்களும் அடிக்கடி வந்து விதண்டாவாதஞ் செய்யத்தொடங்கினர். அதன்மேல் சங்கப் புலவர்கள் மிக ஆலோசித்து மீனாட்சி சுந்தரேசுராகிய புலவர்பெருமானிடஞ் சென்றுவணங்கி, பெருமானே! பற்பலரும் வந்து எங்களுடன் வீண்வாதம் செய்து உபத்திரவஞ் செய்கின்றனராதலின், கல்வியின் நிறையினைக் காட்டுவதற் கேதுவாகிய ஒரு சங்கப்பலகையினை எங்கட்குத் தந்தருள வேண்டுமென்ன உடனே பெருமான் புலவன் வடிவங்கொண்டு அவர்கள் முன்வந்து புலவர்களே' இந்தப் பலகை சதுரமா யிரண்டுசாணளவுளது. இது மிகப் பரிசுத்தமானது. உங்களைக்கு போன்றோர்க்கு ஒருமுழம் வளர்ந்து இடங்கொடுக்கு மென்றனர். அப்பீடத்தினைப் புலவர்கள் தொழுது வாங்கி, கோயிலை வலம்வந்து, சங்கமண்டபத்திற் கொண்டுபோய்ப் பலகையை வைத்து பூமலர்சாத்தி, தூபதீபந் தந்து பூசைபுரிந்து வணங்கி அப்புலவர்களுள் நக்கீரர்முன்னேறினர். அவர்பின் கபிலர், பாணர் முதலியோர் முறையே ஏறியிருந்தார்கள். மீனாட்சிசுந்தரரும் அவர்களுள் ஒரு புலவராய் மத்தியில் தங்கப் பீடத்தின்மீது எழுந்தருளிச் செந்தமிழை வளர்த்துவந்தனர்.

இங்ஙனம் நிகழ்ந்துவருகையில் வங்கியசேகர பாண்டியன் சிவபெருமான் திருவடி நிழலையடைய அவன் குமார வங்கிய சூடாமணி அரசாட்சி செய்துவருங்காலத்தில், இவ்வரசன் ஒருநாள் வசந்தகாலத்



திலே, தன் மனைவியோடுங் கூடி வேறு ஒரு புறத்திலே சந்திரக்காந்தச் சலதை மண்டபத்தில் இருந்துகொண்டிருக்கையில், தென்றல் காற்றானது திவ்வியபரிமள சுகந்தவாசங்கொண்டு வந்தது. அதனை அரசன்கண்டு ஈதேது புதிவகன நல்ல திவ்விய பரிமளகந்தமா யிருக்கின்றது. இது பூஞ்சோலை வாசனையன்று. காற்றுக்கோ வாசனைகிடையாது. இப்பரிமளம் எங்கிருந்துண்டானதென்று ஆலோசித்துத் திரும்பித் தனது மனைவியைப் பார்த்தான். அந்த வாசம் அவள் கூந்தலினின்றும் வரக் கண்டு, இது வண்டுகளால் இதுகாறும் காணப்பெறாத வாசமாயிருக்கிறது. இது இவள் கூந்தலில் இயற்கை வாசனையோ செயற்கை வாசனையோ எனச் சந்தேகித்து, எனக்குண்டான சந்தேகத்தின் கருத்தினை விளக்கிப் பாடவல்லவர்உண்டானால் அவர்கட்கு ஆயிரம்பொன் கொடுப்பேன் என்று முடிப்புக்கட்டிக் கொடுக்க, அங்கிருந்த ஏவலாளர்கள் அதைக் கொண்டுபோய் சங்கப் புலவர்கட்கு முன்னே வைத்தார்கள். அவர்கள் தனித்தனியே ஆலோசித்து பாண்டியன் கருத்தை அறியாதவர்களாகய் மயங்கி யிருந்தனர்.

அக்காலத்தில் ஆதிசைவ குலத்திலே வந்த பிரமசாரியாய் தாய் தந்தை யில்லாத தனியனான தருமி யென்பவன் இதனைக் கேள்வியுற்றுச் சொக்கலிங்கப்பெருமான் சன்னிதானத்தையடைந்து, கிருபாநிதியே! நான் விவாகஞ் செய்வதற் கேலாமல் பிரமசாரியனாய் இருந்துகொண்டிருத்தலினால், தேவரீர் திருமேனியைப் பரிசித்துப் பூசிக்க யோக்கியமற்றவனா யிருக்கிறேன். தேவரீர் பாண்டியன் கருத்தை தெரிந்து ஒரு பாட்டுபாடித் தந்தருளுவீரேல் அதனை இராசனுக்குக் காட்டி பொன்பெற்று உமக்குத் தொண்செய்து வருவேனென்று பிரார்த்தித்தனன். சொக்கலிங்கப்பெருமான் அவன் வேண்டுகோளுக்கிசைந்து,

கொங்குதேவர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலது செழீஇய
நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ அறியும் பூவே.

என்கிற ஒரு திருச்செய்யுளைத் திருவாய் மலர்ந்தருளித் தருமியென்பவன் கையிற் கொடுத்தனர் அவன் தொழுதுவாங்கி ஆனந்தமுற்றுப் புதையல் கண்டெடுத்தவன்போல மனதுமகிழ்ந்து சங்கப்புலவர்கட்கு

85746

முன்புபோய் அப்பாலைக் கொடுக்க, அவர்கள் வாங்கி வாசித்துப்பார்த்து அமன் சொற்சுவை, பொருட்சுவை தெரிந்து நல்ல நல்ல வென்று கொண்டாடி அப்புலவர்கள் பாண்டியனுக்கு முன்போய்ச் செல்லா, பாண்டியன் கேட்டுத் தனது கருத்துக் கொத்திருந்ததனாலே மனமகிழ்ந்து ஆயிரம் பொன்னை அப் பிராமணக்குக் கொடுக்கும்படி உத்திரவு செய்ய, தருமியென்பவன் சங்கமண்டபம் அந்தப் பொற்கிழியை எடுக்கையில், நக்கீரனார் நில் நில்லென்று விலக்கி, இச் செய்யுளிலே குற்றமிருக்கிறதென்று சொல்ல, தருமி என்பவன் கேட்டுப் பசித்து நெடுங்காலம் அன்னம் கிடையாமல் பட்டினி கிடந்து, ஒருநாள்கிடைந்து உண்ணப் போகும்போது கையைப் பிடித்துக்கொண்ட காலத்தில் அவன் எங்ஙனம் கலங்குவானோ அங்ஙனங் கலங்கி, மனமும் வாயுமுலர்ந்து பயந்து கடவுள் கோயிலமுன்னே வந்து, அந்தப் பாடலை வைத்துச் சுவாமி! இந்தகைய பிழையான பாடலை எனக்கேன் கொடுத்தீர் இப்பாடலால் எனது தரித்திரப்பிணியொழியுமென்று எண்ணியிருந்தேன் ஏமார்ந்துபோனேனே! நான் எங்ஙனமாயினுமா குதகே. வரீர் பாடலை ஒருமனிதன் பிழையென்று சொல்லிவிடுவானேயானால் இனி யார் இவ்வுலகில் உம்மை மதிப்பவர் என்றதைப்பற்றி நான் துக்கிக்கின்றேன் என்று புலம்பிநிற்க, உடனே திருவாலவாயலில் எழுந்தருளி யிருக்கிற சொக்கலிங்கப் பெருமான் ஒருபுலமராகிச் சங்கமண்டபம் வந்து, அப்புலவர்களை நோக்கி, நாம் பாடி யனுப்பினபாட்டிலே குற்றஞ் சொன்னவர் யாவரென்று கேட்க, நக்கீரர் அஞ்சாமல் நானே குற்றஞ் சொன்னவனென்ன, வந்த புலவர் அதில் எது குற்றமென்று கேட்க, நக்கீரர் அப்பாட்டிலே சொற்குற்றமில்லை பொருட்குற்றமிருக்கிறதென்ன, அதற்குப் புலவர் பொருட்குற்ற மென்னவென, நக்கீரர் முடிக்கும் பூவால் கூந்தலுக்கு வாசமேயல்லாமல், கூந்தலுக்கு இயற்கை வாசமேது அப்படி வாசமுள்ளதாக "கூந்தலினறியவுமுளவோ" என்று வினவியதே குற்றமென்ன, புலவர் பதுமினிக் கூந்தலுக்குஞ் செய்கைதானோ வென்ன, நக்கிரர் அவள் கூந்தலுக்கு முடித்ததினாலே வாசமுண்டாகுமென்ன, புலவர் தெய்வப்பெண்கள கூந்தலும் அப்படிதானோ வென்ன, நக்கிரர் அந்தப்பெண் கூந்தலும் மந்தாரம் முதலிய மலர்களாலேதான் வாசங் கமழுமென்ன புலவர் நீ துதித்து வணங்குகின்ற பரஞ்சோதியான திருக்காளத்தியப்பர் பாகத்தே வீற்றிருக்கின்ற ஞானப்பூங்கோதை கூந்தலும் அப்படித்தானோவென்ன, அதற்குமஞ்சாமல் நக்கீரர் ஞானப்பூங்கோதை கூந்தலுக்குப் அப்படியே செயற்கையாலேதான் வாசங்கமழுமெகுறு



சாதிக்கும்போது வந்த தெய்வப்புலவர் தமது நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்துகாட்ட நக்கீரர் கண்டு பயப்படாமல் நீர் வடிவமுழுமையும் கண்களைக் காட்டினும் உமது பாடல் குற்றம் குற்றமே! ஏனை மயக்கவேண்டியதில்லை. இதற்குப் பயந்து எனது கொள்கையைவிடேன் என்றனர். சுவாமி அவரை நோக்கி அறிவிலாதவனே! வேதாகமங்களாற் புகழப்படும் அம்பாளது கூந்தலை எம்முடன் மாறுபட்டுப் பழித்தாயாகையினால், நீ குட்டநோய்கொண்டு அலைக எனக் கட்டளையிடுதலும், நக்கீரதேவர் கருணையங்கடலே! கண்ணுதல் மூர்த்தியே! கைலையாளியே! கறைமிடற்றிறையே! காலகாலனே! கங்காதரனே! காமநாசனே! எனப் பலவாறு தோத்தரித்து மிகவும் பயந்து நடுங்கித் திருவடிகளில் விழுந்து பணிந்து ஆண்டருளும் அடியேனை ஆண்டருளும், ஆதரவற்றவனை ஆண்டருளும், வேறு கதிகாணேன், நாயினிற் கடையேன் அறிவிலாது செய்த பிழையினைப் பொறுத்தருளி இந்தச்சாபம் நீங்கத் திருவருள்புரிந்து பாலித்தருளல் வேண்டும் எனப் பிரார்த்திக்க, சிவபெருமான் திருவுளங்கூர்ந்து, நக்கீரனே! நீ சென்று கைலையைத் தரிசிக்கின் இக் கொடிய நோயொழியும் என்று திருவாய்மலர்ந்தருளி ஆலயத்துள் புகுந்து மறைந்தருளினர். தருமியார் பொற்கிழி பெற்றுத் தனது வறுமை நீங்கிச் சந்தோஷித்திருந்தனர்.

பிற்பாடு, நக்கீரதேவர் சிவபெருமான் தந்த சாபத்திற்பிணிதனது மேனியி லுண்டாவதற்கு முந்தியே கைலையை யடைந்து தரிசித்து நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும் எனத் தீர்மானித்து, வித்துவான்களைத் தனித்தனியே யழைத்து எனது ஆத்மார்த்த நண்பினர்களே! உங்களுடன் வாழும் பாக்கியத்தை நானிழந்தேன். பாபியாகியஎன்னை மறவாதீர் என்றுரைத்து வியாதி காரணமாக விலகிநிற்க, அவ்வித்துவான்கள் அதையறிந்து, நெருங்கியணைத்து, கண்ணீர் பெருக மனங்குழைத்து, பெறுதற்கரிய பெருந்தகையே! பிரபல வித்துவசிகாமணியே! தங்களைப் பிரிவதால் நாங்களே பாபியாயினோமேயன்றி வேறு யாவருளர் இனி எவர் வாயினின்றும் இனிய தமிழின்நயத்தைக் கேட்டு ஆனந்திக்கப் போகின்றோம். இனி எங்களிடத்துத் தமிழேது? என்றுசொல்லிக் கலங்கினர். நக்கீரதேவர் அவர்களைத் தனித்தனியே தழுவி நட்பினர்கட்கு ஒரு தேசத்தவராய் உடன்கலந்து பழகுதல் வேண்டுவதில்லை. உணர்ச்சி யொத்தலே சிறப்பு எனத் தோன்ற பெரியீர்! சிறியேன் பொருட்டுத் தியங்கவேண்டுவதில்லை. யாது செல்

னுகின்றேன் என்றுகூறி, அவர்களுடைய கண்களும் மனமும் தன்னைத் தொடர்ந்துவர அரிதினீங்கி, இனி இம்மதுரைமாநகரினையும், சோமசுந்தரக் கடவுளையும், அங்கயற்கண் ணம்மையையும், பாண்டியனையும், சங்கப்புலவர்களையும் எக்காலத்துக் காணப்பெறுவேனென வும், தமிழின் இனிமையினை யெடுத்தெடுத்து யாவர்க்குணர்த்துவேம் எனவும் நினைந்து நினைந்து, வருந்தி வழிக்கொண்டு சோழநாடு, மகத நாடு, தொண்டைநாடு என்பவற்றிலுள்ள திவ்விய சிவஸ்தலங்களையும், பருப்பதம், விருபாட்சம், கலியாணபுரம், காசி, திருக்கேதார முதலிய வடநாட்டுத் தலங்களையும் தரிசித்து, ஒருநாள் தங்கியவூரில் மற்றொருதினம் தங்காமல் விரைந்து, சிவானுக்கிரகத்தால் மனிதர்களாலடைதற்கு அரிய இமயமலையடைந்து, தனது திருமேனியில் பிணிமிகவும் வருத்தவும், உள்ளங்கால்கள் வெள்ளெலும்பாகத் தேயவும், செல்லும் வழியிலே கடலையொத்த ஒரு தடாகத்தினைக் கண்டு நீராடி நியதிமுடித்து, அதன் கரையிலே தெய்வீகமுற்றுப் பணைத்துத் தழைத்திருக்கும் ஒரு ஆலவிருட்சத்தினடியிலே தியானஞ் செய்துகொண்டிருந்தார்.

அவ்வமயத்திலே, அவ்வாலமரத்திலிருந்து ஓரிலை பாதி சலத்திலும், பாதி கரையிலுமாக விழுந்தது. சலத்தில்விழுந்தபாகம் மீனும், கரையில் விழுந்தபாகம் பறவையுமாகி, மீன்சலத்திலும், பறவை கரையிலுமாக இழுக்க, நக்கீரதேவர் அப்புதுமையைக்கண்டு அதி வியப்படைந்து, தியானநிலையினின்றுந் தவறினர். உடனே வடவாமுகாக்கினிபோலும் உதராக்கினியுடையதாய் இடியைப்போலும் கடியமுழக்கமுடையதாய், கிருபை என்பது சிறிதுமில்லாததாய் மிகப் பயங்கர சொரூபமான ஒரு கரியபூதம், அவ்விடத்திலே சிவபூசை யாதிகளில் தவறினவர்களாகிய தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரை ஒரு இருட்குகையிலே அடைத்துவைத்துக்கொண்டு இன்னுமொருவன் வேண்டுமெனக்காத்திருந்து இவரைக்கண்டவுடனே தூக்கிச்சென்று, அக்குகையினுள்ளே அடைத்து, ஆயிரவராக்கி தன்னியமத்தின்படி நீராடுதற்குத்தடாகத்திற்குச் செல்ல, முன்னர் அடைபட்டிருந்தவர்கள் தங்கள் பூர்வ புண்ணியத்தினாலே நக்கீரதேவர் எழுந்தருளியதை உணராமல் அவரைநோக்கி, நாங்கள் வெகுகாலமாகச் சிறையிலகப்பட்டிருந்தும், இப்பூதத்தினால் உணவு முதலியவைகளைப் பெற்றுச் சுகமாய் பிழைத்திருந்தோம். இன்றைக்கு உம்மாலே நாங்கள் இறக்குங்



காலம் நேர்ந்துவிட்டது என்று அழுதார்கள். நக்கீரதேவர் அவர்கள் வார்த்தைகளைக்கேட்டு, மனம் சலியாது எல்லோர்க்கும் இவ்வுலகில் இன்பமுண்டாதலும், துன்பமுண்டாதலு மியற்கையேயாயினும், இவர்கள் துக்கத்தை இப்போது மாற்றுவதே நமக்குத் தகுதியெனத் தீர்மானித்து எண்ணுவாராயினர்.

ஆபத்துக் காலத்தில் ஆதரிக்கத்தக்க தெய்வம் குறிஞ்சிநிலத் தலைவனாக விளங்கும் சிவசுப்பிரமணியக் கடவுளன்றி வேறு இல்லை. அவனை வழிபடில் எத்தகைய துன்பமும் சூரியனைக்கண்ட பனிபோலாகும். அம்மட்டோ அம் முருகப்பெருமானுடைய ஆறெழுத்தைத் தியானிப்போர் அநாதிதொடங்கி நீங்குவதற்கரிய பல பிறவிகள்தோறும் தொடர்ந்துவரும் சென்மநோயினைத் தாம் நீங்கி, வேதாகமங்களினாலே விளம்புதற்கரிய பேரானந்தம் விளைவிப்பதற்குரிய மோட்சவீட்டிலே வாழும் பாக்கியம் பெறுதற்குத் தடையேது. அங்ஙனமாயின், இவ்வாறெழுத்தை உச்சரிப்போரை இச்சிறிய ஆபத்தினின்று நீங்குமென்பதொருவியப்பாகுமோ? பஞ்சபூதங்களின் வாயிலே அகப்பட்டு மயங்கும் ஆன்மவர்க்கங்களை அவற்றினின்றும் நீக்கிச்செம்பொற்சிலம்பணிந்த திருவடிநிழலிலே வைக்கும் எமது சண்முகக் கடவுளுக்கு இப் பூதத்தால் உண்டாகிய இடுக்கணை இப்போதே தொலைப்பேன் என நினைந்து, அம்முருகக்கடவுளின் பன்னிரண்டுசெவிகளும் அமுர்தம் போன்றதும், எவரோதினும் அவர்கள் எண்ணிய பலனை அச்சென்மத்திலேயே கூட்டிவைப்பதும், செய்யுள்களினுள்ளே பெரியதும் சிறந்ததும் யாதென ஆராய்ந்து பார்க்கில் தனக்கிணையன்றி எவற்றிற்கும் முன்னிருக்கத் தகுந்ததாய் விளங்கும் திருமுருகாற்றுப் படையைத் திருவாய்மலர்ந்தருளினர்.

அடியார் துயரையகற்றும் அறுமுகக்கடவுள் வள்ளிநாச்சியாருடையகன்னலையும்அமுதத்தையுமொத்த இனிய மொழியையும் விரும்பாமல், நக்கீரப்பெருமான் கூறும் தமிழ்த்துதியைத் தமது திருச்செவியிலேற்று, மிக மகிழ்ந்து பசிய சமுத்திரத்தினிடத்தே உதித்த செஞ்சூரியனைப்போல் மயில்வாகனத்தின்மீதில் எழுந்தருளிப் புலவர் பெருமானாகிய நக்கீரதேவரையுண்ண நெருங்கிய அப்பூதத்தைக் கதையினால்மோதி, முடியைத் தகர்த்து, யாவரையும் சிறைவிடுத்து திருவருள் பாலித்தனர்.



உடனே நக்கீரதேவர் அக் குமரக்கடவுளை நோக்கி, ஆறுமுகக் கடவுளே! ஆண்டலைக் கொடியோனே! கங்கைமைந்தனே! கலையுணர் புலவனே! கார்த்திகேயனே! குறிஞ்சி வேந்தனே! கௌரி நந்தனே! சரவணபவனே! சிகிவாகனனே! சிவசுப்பிரமணியனே! சூர்ப்பகைவனே! வள்ளி தெய்வானை சமேதனே! வேலாயுதக்கடவுளே சரணம்! சரணம்! நின் திருவடிக்கபயம்! அபயம்! அடியனேன் செருக்கை நோக்கி ஆலவாய்க் கடவுள் அடியேன்மீது முனிந்து இப்பிணி தந்தருள அடியேன் வேண்டுகோளுக்கு மனமிரங்கிக் கைலையைத் தரிசிக்கின் இப்பிணி நீங்குமெனத் திருவருள்புரிந்தனர். அதனால் திருக்கைலையைத்தரிசிக்கும்பொருட்டு இம்மார்க்கம் வருகையில் இப்பூதம் இவ்வாபத்தினை விளைவித்தது. தேவரீர் எழுந்தருளி நிவர்த்தி செய்தருளி வேண்டுமென்று பிரார்த்திக்க, கந்தவேள் கருணைகூர்ந்து, நக்கீரனே! ஆலவாய் எந்தை இன்ன கைலையெனச் சுட்டிக் கூறாமையால், தென் கைலையும் இப்பிணியினைத்தீர்க்கும். இதோ தோன்றுகிற தடாகத்தில் மூழ்குவையேல் அத்தென் திருக்கைலையினைத் தரிசிப்பாய், அன்றியும் நீ இன்று எம்மைத் துதித்த திருமுருகாற்றுப்படையை இவ்வுலகில் யாரோதினும் அவர்கள் இஷ்டசித்தி யெல்லாவற்றையுமடைவர். நாக் வள்ளிதெய்வானை யிருவரிடத்தும் வைத்திருக்கும் விருப்பத்தினைக்




காட்டிலும் இத்திருமுருகாற்றுப் படையினிடத்து அதிக விசுவாசம் வைத்திருக்கின்றோம். இப்படையைப் பாராயணஞ் செய்துவருபவர் பக்கத்திலேயே எனது வேலாயுத மிருந்துகொண்டிருக்கும். அவர்கட்கு எந்தகாலத்திலேயும் ஆபத்தென்பது கிடையாது எனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர்.

நக்கீரதேவர் அப்பெருமானை வணங்கி அப்பொய்கையிலே மூழ்கி, மேற்சமுத்திரத்தில் மறைந்த சூரியன் கீழ்ச் சமுத்திரத்தில் தோன்றியதுபோலத் தென்கைலையில் பொன்முகரி நதியில் தோன்றினர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். ஆகாயத்தில் தேவதுந்துபி முழங்கின. நக்கீரதேவர் நோயகன்று கடைந்தெடுத்த இரத்தினம்போலத் தேகம் விளங்க, நெஞ்சுருக ஆனந்தக்கண்ணீர் சொரிய, இரண்டுகரங்களையும் சிரமேற்குவித்து, நாகலிங்கப்பெருமானையும், ஞானப் பூங்கோதை யம்மைபாரையும் பலதரம் பணிந்தெழுந்து, பஞ்சாட்சரம் தியானித்து, அன்புமயமாகி, கைலைவேறு காளத்திவேறு என்கிற சிந்தனையின்றி, கைலைபாதி காளத்திபாதி யென்னும் ஒரு அரிய பிரபந்தம்பாடி யருளினர். அதைத் திருச்செவியிலேற்ற காளத்திநாதர் மான்மழுசதுர்புஜ காளகண்ட திரிநேத்திரராய் இடபவாகனரூடராய், அம்மையிடப்பாகராய்க் காட்சி தந்து வேண்டியவரம் யாது? என வினவ, அய்யனே! எனது உடன் பிணியை நீக்கி யாட்கொண்டது போலவே, எனது ஆணவப்பிணியையும் நீக்கியருளவேண்டும் என வேண்டிக்கொள்ள, அங்ஙனமே அவர் வேண்டுகோளுக்கிசைந்து, அவரது பந்தபாசத்தை யொழித்து தமது திருவடிநிழலிலே இருத்தியருளினர் என்றுரைத்தருளி யயாதிராஜன் விருப்பத்தின்படி கன்னியர்கள் சரித்திரத்தைக் கழறத்தொடங்கினர்.

நக்கீரச்சருக்கம் முற்றிற்று.

---



# கண்ணப்பச் சருக்கம்.

யயாதிராஜனே! துவாபரயுகத்திலே அஸ்தினாபுரத்தினை அரசாட்சி செய்துவந்த பஞ்சபாண்டவர்களுள் ஒருவனாகிய அருச்சுனன் என்பவன் தனது பங்காளிகளாகிய துரியோதனன் முதலிய பகைவர்களைச் ஜெயிக்கும்படி பாசுபதாஸ்திரம்பெற இந்திரநீல பருவதத்தை யடைந்து அங்கிருந்த அழகிய சுனையில் ஸ்நானஞ்செய்து மடியுடுத்தி விபூதியணிந்து உருத்திராட்சமணி பூண்டு பஞ்சாட்சரம் செபித்து நியதி யனைத்து முடிந்த பின்பு தனியே யொருயிடத்தை யடைந்து ஒரு ஆசனத்தின் மேலிருந்து தனது பிராண வாயுவானது இடகலை பிங்கலை வழியே போகவொட்டாது தடுத்து சுழுமுனை வழியாகச் செலுத்தி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறுதாரங்களையுங் கடந்த பிரமாந்திரத்திலே விளங்குவதாகிய அருட் பெருஞ் சோதி சொரூபத்தினை மனத்தின் கண்ணே இலயப்படுத்தி அருந்தவம் புரிந்துக் கொண்டிருந்தனன். இவ்வாறு நெடு நாள் இருந்துக் கொண்டிருக்கையில், இவனைக் கொல்லும் பொருட்டுத் துரியோதனன் ஏவலின்பேரில் மூகாசுரன்என்னும் ஒரு அசுரன் ஒரு கொடிய பன்றி யுருவங்கொண்டு, அக்காட்டில் வந்து அங்கு வாழ்ந்துக் கொண்டிருக்கும் முனிவர் முதலியோர்கட்கு அனேகமான துன்பங்களைச் செய்துக் கொண்டிருக்க, கருணையங் கடலாகிய கண்ணுதல் மூர்த்தி, அப்பன்றியால் அருச்சுனனுக்கு இடையூறு உண்டாகாமற் பொருட்டு, அதனைக் கொல்லத் தமது திருவுளத்தெண்ணித் தான் ஒரு வேடவுருவ மெடுத்து இடையில் புலித்தோல் சுற்றி அதில் உடைவாள் சொருகி, கவடி, குன்றிமணி, சங்கமணி, ஆத்திக் கொன்றை முதலிய மாலைகளைப் பூண்டு அம்புத்தூணியை முதுகிலே தொங்க விட்டு, வில் அம்பு கைக்கொண்டு தம்மைப்போலே வேடுருவந்தாங்கிய அம்பிகையுடனே காட்டில் வந்து அப்பன்றியைக் கண்டு ஒரு திருவிளையாடலாக ஒரு கூர்மையான அம்



பினைப் பிரயோகித்தனர். அவ்வம்பு பட்டமாத்திரத்தில் அது பேரிடிபோல் முழங்கி யாரவாரித்து அக் காட்டில் தவஞ் செய்துக் கொண்டிருந்த முனிவர்களிடம் நெருங்க அவர்கள் கண்டு பயந்து எழுந்து ஓடி அருச்சுனனுக்குச் சமீபத்தில் வந்து சேர்ந்தனர். அப்போது அருச்சுனன் எழுந்து ஒரு வில்லம்பு கைக்கொண்டு எடுத்து சமீபத்தில் வந்த பன்றியின்மேற் பிரயோகித்துக் கொல்ல, அச்சமயத்தில் அப் பன்றியைத் தொடர்ந்து வந்த சிவபிரானாகிய வேடன் அருச்சுனனை நோக்கி என்னம்பினால் இப்பன்றி மாய்ந்ததேயன்றி உன் அம்பினால் மாய்ந்ததாக வெண்ண வேண்டாம் என்றனர். வேடனே! இப் பன்றியைக் கொல்லத் தகுந்த அம்பும் சாமர்த்தியமும் உனக்குண்டோ? என்பாணமானது உருவி அப்பன்றி இறந்து விட்டதனைப் பிரதியட்சமாகக் கண்டும் உதவியற்ற வார்த்தையினைப் பேசுகின்றாய் சிக்கிரம் இவ்விடம் விட்டு ஓடிப்போகக் கடவாயென்று அருச்சுனன் சொல்லினன்.

இதனால் இருவருக்கும் பெரிய கலகம் நடக்கவே ஒருவர்மேல் ஒருவர் அம்புகளைப் பிரயோகித்துச் சண்டைசெய்ய ஆரம்பித்தனர். அருச்சுனன் மிகுந்த கோபாவேசத்தனாய் தனது கையிலிருந்த வில்லினால் மோதி வேடன் தலையிலோரடி யடித்தான். அச்சமயத்தில் அவ்வடியானது விண்டுவின் மீதும் பிரமாவின் மீதும், இந்திரன் மீதும், மற்றைய தேவர்கள்மீதும், மண்ணுலகத்தார் மீதும், நாகலோகத்தவர்கள்மீதும், ஆதிசேடன் முதலிய பிரம்புகளின் மீதும், வேதங் களின் மீதும் ஆகமங்களின்மீதும், புராணங்களின் மீதும், மற்ற தலைகளின் மீதும், ஐம்புலன்களின் மீதும், வருடம் மாதம், நாள் திதி, நட்சத்திரம், முதலியவை மீதும், அவரவர்கள் கற்பத்திலிருந்த குழந்தைகளின்மீதும் பட்டன. யாவரும் துணுக்குற்றுப் பயந்து அரகர! சிவசிவ! எனக் கரங்குவித்துச் சர்வலோக நாயகனாகிய சிவபெருமானைத் தோத்தரித்து நின்றனர். சிவபெருமான் மான் மழு சதுர்புஜ காளகண்ட திரிநேத்திரனாய் அம்மை இடப்பாகனாய் இடபவாகன ரூடனாய் ஆகாயத்தில் காட்சி தந்தனர். அருச்சுனன் கண்டு பயந்து பூமியின்மீது சாஷ்டாங்கமாகப் பலதரம் விழுந்து, எழுந்து கரங் குவித்து ஆனந்தக்கண்ணீ ரொழுக வாய் தடுமாற மெய் சிலிர்த்து, அப்பனே! அடியேனையாட்கொள்ள வந்த ஐயனே! அடியேன் அறியாமையினாலே செய்த பிழை யனைத்தினையும் பொறுத்தருள வேண்டும் என்று பயந்து எதிரிலே வணங்கி நின்றனன். சிவபெருமான் கிருபைகூர்ந்து மைந்தனே! அஞ்சேல், நீ கூறிய மொழியனைத்தும் நமது சுப்பிரமணியம் மொழி போல அங்கீகரித்துக் கொண்டோம், துரியோதனன் ஏவலால் உன்னைக் கொல்லும்படி ஏவிய பன்றியைக் கொல்லுவதற்கே நாம் வேடுவனாகி வந்தோம். உனக்கு வேண்டும் வரம் யாது? சொல்லுவையேல் தந்தருள்வோம் என்றனர். அருச்சு

னன் அன்புடன் பணிந்து அருட்கடலே! அடியேன் பிரவித் துயரினால் மிகமெலிந்து வாடுகின்றேன். இனித் தேவரீர் திருவடி நிழலைத் தந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். பரமசிவம் அருச்சுனனனே! நீ யுனது பகைவரை யொழிக்ககப் பாசுபதாஸ்தரம் வேண்டித் தவம் புரிந்தனை யாகையால் முன்னர் அதனைப் பெற்றுக் கொள்வாயாக, என்று அந்தத் தெய்வ அஸ்திரத்தை அவன் கையிற் கொடுத்து பின்பு அவனை நோக்கிக் குழந்தாய்! நீ நம்மை வேடனென்று இழிந்து கூறினையாகலின், நீ வேடுவ அரசனாகிப் பிறந்து தென் கைலாயமடைந்து அன்பே யுருவாகி, வேறு சிந்தனையின்றி நாகலிங்கத்தினைப் பூசித்து,பன்றி முதலிய விலங்குகளின் தசையை பரிந்து உண்பித்து வாழுநாளிலே முத்தியைத் தந்தளிப்போமென திருவாய் மலர்ந்தருளி மறைந்தருளினர்.

யயாதிராஜனே! கலியுகத்திலே நல்ல வளப்பங்கள் பொருந்திய புட்பங்கள் மலர்ந்த வாவிகளும், சோலைகளும் சூழ்ந்த போதப்பிநடென்ப தொன்றுண்டு. அந்நாட்டிலே முத்துக்களை வாரிக்கொண்டு வருகின்ற அருவியுடன் கூடிய மலைப் பக்கங்களையுடைய நீண்ட மலைகள் சூழ்ந்த இடத்தில், மதம் பொழிகின்ற கொடிய யானைக் கொம்பினால் மிக்க நெருங்கிய வேலிகளை வளைத்துப் பெரிய காட்டாறால் சூழப்பட்ட பழைய ஊராகிய உடுப்பூர் என்று சொல்லப்படும் ஒரு நகரமுண்டு. அவ்வூரில் வாழுகின்றவர்கள் குறவர்கள், கொடிய செவிகளையுடைய நாய்களைக் கட்டிய மிக்கவலியினையுடைய விளா மரத்தினது கொம்புகளில் வாராற் பின்னிய வலைகள் அருகில் தொங்கிக்கொண்டிருக்க, பன்றியும், புலியும், கரடியும், கடமையும் ஆகிய விலங்கினங்கள் வாழ்வதன்றியும், பாறைகளின்மீது தினைகளும் உலர்ந்துக் கொண்டிருக்கும் வலிய புலிக்குட்டிகளோடும், வெற்றியினையுடைய யானைக்கன்றுகளோடும் வேடச் சிறுவர்கள் விரும்பி விளையாடுதலின்றி, பெண்மான்களைப் பிடித்து அதனுடன் விளையாடுகின்ற வேடப் பெண்களும் எங்கு முள்ளார். பகைவர்களை வெல்லத்தக்க ஆயுதங்களையும், வன்கண்ணும் கடுஞ்சொற்களுமுடைய வேடர்களுடைய கூட்டமிருக்கு மிடங்களில் இதைக்கொல் இதைப்பிடி இதையெறி ஈட்டி முதலியவற்றால் குத்து என்று ஆரவாரிக்கின்ற ஓசையே யல்லாமல், உடுக்கை வாத்தியமும், கொம்பு வாத்தியமும், சிறுபறை வாத்தியமும் எங்குமுழங்கும். வேடர்கள் அயல் நாடுகளிற்போய் கொள்ளையடித்து வந்த பல நிறங்களுடன் கூறிய மாடுகளின் முழக்கத்துடனே மாறுபட்ட கர்ச்சனை வாய்ந்த மதஞ் சொரிகின்ற துதிக்கையினையுடைய யானைக் கூட்டங்களு மிருந்துக் கொண்டிருக்கும். அவ்வேடர்கள் கருத்த உடம்பினையும் கொலை தொழில்களையும் உடையவர்கள், தங்களிடத்துப்பயமும்,பிறவுயிரிடத்துக் கருணையும் இல்லாதவர்கள், தோலுடை உடையவர்கள், காடுகளில் தேடி யெடுக்



குந் தேனையும், மிருகங்களின் மாமிசத்துடன் கூடிய மலைநெல் முதலியவற்றால் ஆகிய சோற்றையும் உண்பவர்கள், விஷம் போலும் அம்புகளையுடையவர்கள். இவர்கட்குத் தலைவனாக நாகன் என்னும் ஒரு அரசனிருந்தான். இவன் தான் பிறந்த வேடச்சாதிக்குரிய ஒழுக்கத்தால், தீத்தொழிலையே நற்செய்கையாகக்கொண்டு வாழ்வான். கொடுமை செய்தலையே முதன்மையான தருமமென்று எண்ணுவான். வில்வித்தையில் மிக்கவல்லவன். கொடியகோபத்தையுடைய சிங்கத்தை யொத்தவன். அவனுக்குத் தத்தை யென்று மனைவி யொருவள் இருந்தாள். அவள் பெரிய புலியானது பல்லாகிய தாலியில் இடையிலே பலகரைகளைக் கோத்துமார்பில் தொங்கவிட்டிருப்பாள், மயிற்பீலியும், தழைகளும் கூடிய மாலையினைச் சூடிய உச்சிக் கொண்டையினையுடைய பெண் சிங்கத்தினை யொத்தவள்.

இவர்களிருவரும் ஒருமித்து வாழ்ந்து வருகையில், தங்களுக்குப் புத்திரப் பேறின்மையால் நற்கதியுண்டாகாதென்று மிகவருந்தி யதன்பொருட்டுத் தங்களுக்குரிய குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகக்கடவுளுக்கு ஒரு ஆலயம் கட்டுவித்து நித்திய நைமித்திய திருவிழாக்களை நடத்தி மயில்களையும், சேவல்களையும் வளர்த்துக் கோயிலுக்கு விட்டுப் பிரதிதினம் வணங்கி வருகையில், அக்கோயில் அர்ச்சகன் மீது ஒரு நாள் முருகக்கடவுள் தோன்றி அவ்வேடத் தலைவனாகிய நாகன் என்பவனை நோக்கி அன்பா! நீ செய்து வந்த பூசைக்கு மிகமகிழ்ந்தோம். இவ்வுலக மனைத்தும் புகழத்தக்க வில் வித்தையில் வல்ல வீரியனாகிய அருச்சுனனையே ஒரு சற்புத்திரனாகத் தந்தோம், என்று சொல்லி மறைந்தருளினர். அது கேட்ட நாகனும் அவன் மனைவி தத்தையும் ஆனந்தமடைந்து அம்முருகக் கடவுளுக்கு அதிக சிறப்புகளனைத்தினையுஞ் செய்து மிகச்சந்தோஷமாய் வாழந்துவந்தனர். சில நாளைக்குப்பின் அத்தத்தை என்பவள் வயிற்றிடமாக ஒரு ஆண் குழந்தை பிறக்கநாகன் மிக மகிழ்ந்து விசேஷ பூசை யாதி முருகன் ஆலயத்திற் செய்து தன்னுடைய நகரமுழுமையும் எண்ணெயாட்டுச் செய்வித்தனன். தாய் அப்புதல்வனுக்கு வாசநீராட்டி முலைப்பால்செய்து நிலந்தேய்த்து நெற்றிப்பொட்டணிந்து, பாலூட்டி, நன்கு அலங்காரஞ்செய்து தனது நாயகன் கரத்திற் கொடுக்க, அவன் வாங்கித் திண்ணென விருந்தவையால் அப்புதல்வனுக்குத் திண்ணனெனத் திருநாமந் தரித்தனன்.


திண்ணனார் தொட்டிலில் விளையாடித்தவழ்ந்து குறுநடை பயின்று தெருவிலே சிறுதேருருட்டி, சிறிய வில்லம்பு கையிலேந்தி சிறு பிள்ளைகளுடனே காட்டிற்புகுந்து மான், புலி, கரடி முதலிய

விலங்கின் குட்டிகளிற் சிலவற்றைக் கொன்றும், சிலவற்றைக் கொண்டு வந்து வளர்த்தும் வந்தனர். அக்காலத்திலே நாகன் தனது பிள்ளை பருவமடைந்ததைக் கண்டு வில் வித்தைச் சொல்லி வைக்க உத்தேசித்து, அந்நகரிலுள்ள வேடர்களை யெல்லா மொருங்குகூட்டி வில்விழாநடத்தி தங்கள் குல ஆசாரியனுக்கு வேண்டியவைகளை ஏராளமாய்க் கொடுத்து இக்குழந்தைக்கு வில் வித்தைப் பயிற்றுவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள, அவன் சுப முகூர்த்தத்திலே கிரமப்படி வில்லினை யேந்தச்செய்து, அவ் வித்தை யனைத்தும் பூரணமாகக் கற்பித்து பஞ்சபாண்டவருள் ஒருவனாகிய காண்டீபனே இவன் என்று யாவரும் வியந்துக்கொண்டாடும்படி அதிக சாமர்த்திய வானாக்கி வைத்தனன். நாகன் இள வேட்டம் முடிப்பிக்க வெண்ணி வனதேவதைக்கு வேண்டிய சிறப்புச் செய்யவேண்டுமெனத் தீர்மானித்து, வேடர்களுடனே வனத்தையடைந்து, அவ்வனதேவதைகள் இருந்துக்கொண்டிருக்கும் ஆல மரத்தினை யலங்காரஞ் செய்து பூசை முடிப்பித்து, குங்கிலிய தூபம் வன முழுவதும் கமழும்படிச் செய்து அனேக ஆடுகளைப் பலியிந்து உடுப்பூரையடைந்து இருந்தனன்.

சிலநாளைக்குப்பின் தனது மைந்தனை யழைப்பித்து எனது கண்மணியே! இன்று முதலாக நீயே வேடர்களனைவர்க்குந் தலைவனாயிருந்து பகைவரனைவரையுஞ் செயித்து அவர்கள் பொருள்களை யெல்லாங் கொள்ளைக்கொண்டு, வெற்றியுடன் வாழ்வாயாகவென்று தங்கள் மரபின் வழியே வந்த ஒரு பெருஞ்சிலையினைக் கொடுத்து மிகுந்த ஆசையுடன் மார்பில் தழுவிக்கொண்டுநமது முருகக்கடவுள் திருவருளினையே துணையாகக்கொண்டு வேட்டையாடி வருக என ஆசிர்வாதஞ் செய்தனன். திண்ணனார் தந்தையை வணங்கி விடை பெற்றுத் தாயிடம் வந்து வணங்க அவள் எடுத்துப் புல்லி உச்சி மோர்ந்து முலைப்பால் சோர நெஞ்சம்குழைய மகனே! நீ பெரிய கடுங்காட்டிலே நுழையாமல் குளிர்ச்சி பொருந்திய சோலை வழியாகச்சென்று வேட்டையாடி முள்கிரலும், திருஷ்டி தோஷமும்இல்லாமல் வேடர்களுடன் திரும்பிவருவாயாக என்று நெற்றியிலே விபூதி தரித்தனள். திண்ணனார் மறுபடியும் தாயை வணங்கி அனுமதி பெற்றுக் கச்சினையிருக்கி அதில் உடை வாளைத் தொங்கவிட்டு, வில்லம்பு கைக்கொண்டு வேடர்கள் சூழ்ந்துவர பல விலங்குகளும் வாழுமிடமறிந்து வலைகட்டி பறையடித்து அவைகளை யெல்லாம் அவ்வலையிலுள்ளே நுழைவித்துக் காடுகளை வெட்டிப் பார்வை மிருகங்களினோசையால் அவை சென்ற வழி மறைந்துநின்று அம்புமுதலியவற்றால் மிருகங்களைக் கொன்றுவேட்டைமுடித்து ஊரையடைந்தனர்.



இந்தப் பிரகாரம் பலதரம் வேட்டையாடி தாய் தந்தையரைச் சந்தோஷிப்பித்து வருகிறகாலத்தில் ஒருநாள் நெடுங்காட்டிற் சென்று வேடர்களை விட்டுத் தனித்து வேட்டையாடி மிகவும் இளைத்து ஒரு மரத்தினிழலிலே தூங்கிக் கொண்டிருந்தனர். அச் சமயத்தில் அவர் கனவில் பரிபூரண சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் தோன்றி மைந்தனே! இம்மலையிலே பொன் முகரியாற்றங் கரையிலே கல்லால விருட்சத்தினடியிலே ஒரு சிவலிங்கமுள்ளது. அது சகல துன்பத்தினையும் நீக்கிப் பேரின்பத்தினைக் கொடுக்கும், நீ சென்று அதனை வணங்குவாயாக என்று கூறி மறைந்தருளினர். உடனே திண்ணனார் விழித்து ஆச்சரியங் கொண்டு எட்டுத்திசையும் பார்த்து நின்றனர். அப்போது ஒரு பன்றி வேடர்களுடைய ஆரவாரத்தால் வலையை அறுத்துக்கொண்டு அதிக வேகமாக மலையிலே நுழைவதற்குப் போகையில் திண்ணனார் கண்டு கோபங்கொண்டு துரத்திச்சென்று ஆலவிருட்சத்தினடியிலே சிவலிங்கத்தினருகே சென்று மறையக்கண்டு வியப்படைந்து அந்தோ இப்பன்றி மறைந்தவிடம் தெரிந்தோமில்லை யென்று உற்று நோக்குகையில் எதிரிலே சிவலிங்கப் பெருமானிருக்கக் கண்டு மகிழ்ந்தனர்.



உடனே அப்பெருமான் திருவருட் பார்வைபட்ட மாத்திரத்தில் தரிசன வேதியினால் இரும்பு பொன்னானதுபோல திண்ணனார் முற்குணங்களனைத்து மாறி, அப்பெருமானிடத்து வைத்த பூர்வ ஜென்மாந்தர அன்பு மேற்கொள்ள, நெடுநாள் பிரிந்திருந்த தனது குழந்தையினைக் கண்ட தாயைப் போல் விரைந்தோடித் தனது தோள்களினாற் றழுவி மோந்து முத்தமிட்டு, அக்கினியிற்பட்ட மெழுகுப்போல மனமுருகி, கண்ணீர் சொரிய உரோமஞ் சிலிர்ப்ப நின்று குருடன் கையிலகப்பட்ட தெய்வமணிபோல இப்பெருமான் எனக்கு அகப்பட்டன ரென்று கூறிப் பேரானந்தமடைந்து குலுங்கச் சிரித்து, எந்தையே! யானை, புலி, காடி, சிங்கந் திரியுமிந்தக் காட்டிலே யாதொரு துணையுமின்றி வேடனைப்போலத் தனித்திருப்பதற்குக்காரணமென்ன? நீர் பிரதி தினம் சாப்பிடுவதற்கு இரைச்சி கொண்டுவந்து கொடுப்பவர் யாவர்? என்னுடைய ஊருக்கு வருவீரேல் தேன், தினைமா, காய், கனி, கிழங்கு முதலியவைகளும் மான், முயல், பன்றி முதலியவற்றின் மாமிசங்களும் யானே கொண்டு வந்து தினம் கொடுப்பேன் வேடர்கள் துணையுமுண்டு நீர் இங்கே தனியே யிருப்பதைக்காண என்மனம் மிகத்துன்ப முறுகின்றது. தேவரீர் என் பொருட்டுத் திருவுள மிரங்கி இப்போதே என்னுடன் உடுப்பூருக்கு வருதல் வேண்டும், என்று மிக விரங்கிக் கேட்டுக் கொண்டனர். இவ்வாறு உரைத்தும் இரைவர் ஒன்றும் பேசாமலிருக்கக் கண்டு, இவருக்கு இவ்விடத்திலேயே யிருக்கச் சம்மதம் போலும், இவரை விட்டு சிறிதுநேரமாயினும் யான் நீங்க மனந் துணிவேனோ' துணிந்து உயிருடன் வாழுவேனோ! வாழேன்! வாழேன்! என்று மொழிந்து அப்பெருமான் சிரசிலே அபிஷேகம் செய்து மலர்களும் வில்வத்தளிர்களும் சூட்டி யிருப்பதைக்கண்டு இவை இவருக்குப் பிரீதிபோலும். அப்படியே அடியேனுஞ் செய்து மகிழுவேனென்று ஆரம்பித்தனர்.

பின்பு, ஐயோ! வெகு நேரமாய் விட்டது, இவர் மிகவும் பசித்திருப்பர். சுவையான இறைச்சி கொண்டுவர நான் போய்விடுவனேல் தீய மிருகங்கள் வந்து யாது தீங்கு இவரைச் செய்து விடுமோ? என மனமிரங்கி சிறிது நேரம் ஆலோசித்து ஐயனே! தேவரீருக்கு வேண்டுமான மாமிசத்தைச் சேகரித்துக்கொண்டு ஒரு நிமிடத்திற்குள் வந்து விடுவேன். கொடிய மிருகங்கள் வந்து தீங்கு செய்யுமென்று பயப்பட வேண்டாம். வந்தால் உடனே என்னைக் கூப்பிடுவீராக, அதிக தூரம் போகமாட்டேன் என்று சொல்லிவிட்டு, அரிதினீங்கிக் கன்றைவிட்டுப் பிரிந்த தலையீற்றுப்பசுப்போல அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்று காட்டிற் புகுந்து ஓர் சிறிய பன்றியைக் கொன்று தானே யேந்திப் பொனமுகரி நதிவந்து அலம்பித் தீக்கடைக் கோலினால் தீமூட்டி அப்பன்றியை வதக்கி வாளினாலறிந்து நல்ல தசையெலாம் வேறெடுத்து அம்பிலே கோத்து



பதமாகக் காய்ச்சி, தன் வாயிலிட்டு, பல்லினால் மெல்ல மெல்ல அதுக்கிப்பார்த்து சுவையுடைய மாமிசத்தை யெல்லாம் தேக்கிலையினாலே தைத்த கல்லையிலே வைத்து, சுவையில்லாத மாமிசத்தை எறிந்துவிட்டு, அதன் பின்னர் தளிர்களையும் வில்வத்தையும் கொய்து தலையிற் செருகிக்கொண்டு, திருமஞ்சன ஜலத்தை வாயிலே முகந்து, ஒரு கரத்திலே மாமிசமும், மற்றொருகரத்திலே அம்புமேந்தி, அந்தோ! வெகு நேரமாய் விட்டதே சுவாமி மிகப் பசித்திருப்பாரே! சீக்கிரம் போகவேண்டும் இதற்குள் ஏதாவது விலங்குகள் வந்து துன்பம்செய்தனவோ? எனப் பதை பதைத்து குஞ்சுக்கு இறையூட்டச் செல்லும் பறவைபோல வெகு விசையாக வோடிச் சென்று சிவலிங்கப் பெருமானது திருமுடியிலுள்ள பழய பத்திர புஷ்பங்களைத் தனது செருப்புக் காலினாற்றள்ளி வாயிலுள்ள நீரால் திருமேனியில் உமிழ்ந்து, அபிஷேகித்து, பத்திரபுஷ்பங்களைத் தனது சிரம்வளைத்துச் சூட்டி மாமிசத்தை எதிர்வைத்து உபசாரவார்த்தைப் பலசொல்லி எடுத்து ஊட்டி எதிரிலே நின்றனர்.

அச்சமயத்திலே, வேடர்கள் திண்ணனாரைக் காணாது நெடுநேரந்திரிந்து அங்குமிங்கு மோடிப்பார்த்து அச்சமடைந்து அவருக்குச்சமீபம் வந்து நீர் எங்களைவிட்டுப் பிரிந்து இவ்விடம் வந்ததென்ன? யாங்கள் ஏதேனும் பிழை செய்தோமோ, எங்கள் மீது கோபமோ? சூரியன் உச்சிக்கு வந்து விட்டானே, மிகப்பசித்திருக்கின்றீரே! நீர் இங்கிருப்பது இதுவரையில் தெரிந்தோமில்லை. கோபியாது சீக்கிரம் வரவேண்டும் என்று பலவாறு கூறியும் பதிலொன்றும் பேசாமல் இருக்கக்கண்டு இதென்ன அநியாயம் இங்கிருக்கும் தெய்வம் இவர்மேலேறிக்கொண்டதோ? ஒன்றுந் தெரியவில்லையே! இது சங்கதியினை நமது அரசனுக்குத் தெரிவித்தால் அவர் வந்து ஒருவகை தேடுவார் என்று துணிந்துச் செல்லச் சூரியன் அஸ்தமித்து விட்டனன். திண்ணனார் இரவிலேதாவது தீய விலங்குகள் வந்து ஸ்வாமிக்கு உபத்திரவம் செய்யும், ஆகையால் நானிவ்விடத்தை விட்டு பிரியப்படாது என்று அம்பு வில்லிலேந்தி இரவு முழுவதும், சமீபத்திலேயே காத்துக் கொண்டிருந்து காலையில் சுவாமிக்கு உணவு கொண்டுவரும் பொருட்டு மலையடிவாரஞ் சென்றனர்.


இச்சமயத்தில், அன்பு, அறிவு, அடக்கம், ஆசாரம், சிவபக்தி முதலிய ஒரு வடிவெடுத்தாற்போலவுள்ளவரும், நல்வினை தீவினைகளால் ஏற்படும் இன்பதுன்பங்களைச் சமமாக வெறுப்பு விருப்பின்றி யனுபவிப்பவரும், தெய்வலோக சுந்தரிகள் மேல்வந்து வீழினும் தாயென நாடி யிருப்பவரும், திருக்காளத்தியப்பனைத் தினந் தோறும் சிவாகம விதிப்படி பூசித்து வருபவருமாகிய ஆதி சைவ

டணியாகிய சிவகோசரியார் என்பவர் காலையிலெழுந்து, பொன்முகரி நதியிலே முழுகி விபூதி ருத்திராக்ஷம்பூண்டு தலையிலே திருமஞ்சனமேந்திக் கரத்திலே பத்திரபுஷ்பந் தாங்கி, பஞ்சாட்சரத்யானஞ் செய்துக்கொண்டு மலையேறி சந்நிதியடைந்து, அவ்விடத்தில் மாமிசம் சிந்திக்கிடப்பதைக்கண்டு,உள்ளம் நடுங்கி,ஒரு குதிகுதித்து அப்புரத்தோடி, இத்தகைய அநுசிதமானகாரியம் செய்திருப்பவர் கொலைத்தொழில் புரியும் வேடுவராக விருக்கவேண்டும். இக்கொடிய செய்கைக்குச் சுவாமி சம்மதப்பட்டிருந்தனரோ? சிவபக்திமான்கள் கண்டால் உயிர்விடாது இருப்பாரா? பாவியேன் இன்னம் உயிர் வைத்து வாழுகின்றேனென்று வருந்தி இனிசெய்வதுயாது? பூசை நேரம் தவரிவிடுகிறதே யென்று, அவ்வசுத்தங்களை யெல்லாம் திருவலகினால் மாற்றி, கோமயந் தெளித்து மறுபடியுஞ் சென்று பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்து வந்து சிவாகம மந்திரத்தினாலே சுத்தி புரிந்து, உருத்திர சமகநமகத்தில் அபிஷேகம் செய்து பத்திர புஷ்பங்களினின்றும் ஆனந்தப்புஷ்பம் சொரிய திருமேனிபயிர்ப்பொடிப்ப, அக்கினியிற்பட்ட மெழுகுபோல் மனமுருகி நாத்தழும்ப சாமவேதம் பாடிப் பலதரம் பிரதக்ஷணஞ் செய்து நமஸ்கரித்து அரிதி நீங்கி தமது ஆசிரம மடைந்தனர்.

பிற்பாடு, திண்ணனார் பன்றி மான் வாழுமிடமறிந்து சென்று பிடித்துக் கொன்று அவைகளின் இறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி தேன் விட்டுக்கலந்து இலையிலே முன்போலவே திருமஞ்சனம், புஷ்பமுதலியதும் கொண்டு, அதிவேகமாக ஓடிவந்து திருமுன்னர் வைத்து அப்பனே! நான் நேற்று கொண்டுவந்த மாமிசமன்று. முயல், மான், கலை, மரை, கடமை என்பவைகளின் இறைச்சி. தேனும் கலந்திருக்கின்றேன். நானும் சாப்பிட்டுப் பார்த்தேன். மிகவும் தித்திக்கும் என்று சொல்லி உண்பித்து, அவர் பக்கத்திலேயே பிரியாது நின்றுகொண்டிருந்தனர். அந்த வேளையில் வேடர்கள் சென்று சொன்னசங்கதியை நாகனும் அவன் மனைவி தத்தையும் கேட்டு அதிக துக்கமடைந்து ஊணுறக்கமின்றிக் காலையில் வந்து திண்ணனாரைக்கண்டு பல உபாயங்கள் செய்தும் வசமாகாமையைக் கண்டு மனம்புழுங்கி இனிச்செய்வது ஒன்றுமில்லையெனத் தியங்கிச் சென்றனர். அவர்கள்வந்ததும் போனதும் திண்ணனார் அறியாதவராகி தினம் பகற்காலத்தில் மாமிசம் உண்ணச் செய்வதும், இரவு காலத்தில் காவல் கொண்டிருப்பதுமான பணிவிடையே செய்துக்கொண்டிருந்தனர். சிவ கோசரியார் தினந்தோறும் வந்து ஊண் கிடக்கக்கண்டு அழுது வருந்தி அவற்றை நீக்கிச் சுத்தி செய்து நாகலிங்கப்பெருமானைப் பூசித்து, இத்தகைய அநுசிதமான காரியத்தினை எப்போது நீக்கி யருளுவையோ பெருமானேயென்று துக்கசாகரத்தில் மூழ்கி யிருந்தனர்.



இங்ஙனமிருக்க காளத்திநாதர் இவர் துன்பத்தினை யகற்றவெண்ணி ஐந்தாம்நாளிரவிலே அவர்சொர்ப்பனத்திற்றோன்றி, அன்பனே! நீ நமது முன்பாக இருப்பது இறைச்சியென்று வருந்தாதே. அது நாம்விரும்பியருந்தும் பெருதற்கரிய அமுர்தமாகும். அதை நமக்குஉண்பிப்பவன் செயலைக் கூறுவோம் கேட்பாயாக. அவன் நம்மிடத்தில் வைத்துள்ள அன்பு எவ்வளவென்னில் பல்லாயிரம் நதிகளில் மூழ்கியும், பலகோடி விரதங்களை அநுஷ்டித்தும், எண்ணில்லாத தான தருமங்களைப் புரிந்தும், ஊழைக்கடந்து ஒரு புதல்வனைப்பெற்ற தாய்க்கு அப்புதல்வன்மேல் எவ்வளவு அன்பிருக்குமோ அவ்வளவேயாகும். அவன்நமது சிரசிலுள்ள புட்பங்களைச் செருக்காலால் மாற்றுகிறபோது, இளமையான குழந்தை தனது கையால் முலை நுனியை வருடப்பெற்ற தாயினது மனம்போலப் பெரிதும் நெஞ்சம் உருகுகின்றேன். அவன் நம்மேல் உமிழ்கின்ற நீர் அது உள்ளத்தினின்றுவருகிறபேரன்பாயிருத்தலால் அது ஆற்றுநீரன்று முனிவர்கள் அபிஷேகிக்கும் மந்திரநீரினும் இனிதாகும். அவன் கழுத்தை வளைத்துச் சூட்டும்மயிரோடு கலந்த மலர்கள் வியாக்கிரபாதர் முதலியோர் விதிப்படி யெடுத்துச் சகஸ்திரநாமங்களை யுச்சரித்து அருச்சிக்கும்போது தேன்விரிந்த மலரினும் உசிதமாகும். அவன் தின்று பார்த்து இளஞ் சூட்டுடன் படைக்கும் இறைச்சியைத் தந்தபின்பு, தேவர்கள் இரத்தின பாத்திரத்திலே நிவேதித்த பாற்கடலமுர்தமும் விஷமாயது. அவன் எனக்கு முன்னே நின்றுபேரன்புடனே வாய்திறந்து உரைக்குஞ்சொற்கள் அறிவு முதிர்ந்த முனிவர்களாலே பாடப்படும் சாமவேதமும் இனியதன்று. அவன் மனம் நமக்குக் கோயிலாகும். அவன் உரைகளெல்லாம் வேதமாகும். அவன் செயல்களெல்லாம் அறச்செயல்களேயாகும். அவனியல்பைக் காட்டுகின்றோம். நீ நாளைவந்து அவன் அறியாதவண்ணம் அயலிலே ஒளித்திருப்பாயாக, இனித் துன்ப மொழிக, எனக் கட்டளையிட்டு மறைந்தருளினர். அதுகேட்ட சிவகோசரியார் சொப்பனவஸ்தை நீங்கிக் காளத்திநாதர் தனக்கு அருளிச்செய்த வார்த்தைகளை நினைந்து நினைந்து அதிசயித்து, காலையிலெழுந்து பொன்முகரியிலே ஸ்நானஞ்செய்து நித்தியகடனை முடித்துச்சென்று சிவலிங்கப்பெருமானுக்குப் பின்னே சிறிது தூரத்திலே ஒளித்துக் கொண்டிருந்தனர்.



திண்ணனார் வழக்கப்படி வேட்டையாடி இறைச்சியும், திருமஞ்சனமும், புஷ்பமும் முன்போல அமைத்துக்கொண்டு அதிசீக்கிரமாக வந்துகொண்டிருக்கையில் வழியிலே பற்பல துற்சகுனங்களைக் கண்டு, இச் சகுனங்களெல்லாம் இரத்தம் காட்டுகின்றன. என் கண்மணிபோன்ற எம்பெருமானுக்கு யாதாயினும் தீங்கு சம்பவித்ததோ தெரியேன்! என்று மனம் கலங்கி அதிசீக்கிரமாக ஓடி வந்தனர். அச்சமயத்திலே சிவபெருமான் திண்ணனாருடைய அன்பு முழுமையும் சிவகோசரியாருக்குக் காட்ட திருவுளங்கொண்டு, தமது வலது கண்ணினின்றும் உதிரஞ்சொரியப் பண்ணினார். அதை தூரத்திலே நோக்கிவிரைந்தோடி வந்து உதிரம் சொரிதலைக் கண்டு, வாயிலுள்ள திருமஞ்சனமும், சிரசிலுள்ள புஷ்பமும், கையிலுள்ள மாமிசமும், மற்றொரு கையிலுள்ள அம்பும் வில்லும் பலவிடங்களிலும் சிதறுண்ண, பதைபதைத்துக் கீழே விழுந்து நெடுநேரம் மூச்சின்றிக் கிடந்து இறந்தவரைப் போலக் கிடந்து, ஒருவாறு தெளிந்து எழுந்து பலமுறை கையினாலே துடைத்துப்பார்த்தும் உதிரம் நீங்காமை கண்டு மீட்டும் பூமியிலே விழுந்து புரண்டு விம்மிவிம்மி அழுது, முகமெல்லாம் உதிரம் சோர மார்புவீங்க கைகால் மோதிக்கொண்டு, எனது அப்பனுக்கு இத்தகைய தீங்கு விளைந்தது எனக்குப் பகைவர்களாகிய வேடுவர்களாலேயோ அறியேன். அப்பகைவரைக் காண்பேனாயின் இப்போதே அவர்கள்உயிரை வாங்குவேன். அங்குமிங்கும் நெடுநேரம் ஓடிப்பார்த்து ஒருவரையுங் காணாது



திரும்பி மலையிடை வாய்ந்த மரகதமணியே! உம்முடைய கண்களில் உதிரம் வருவதற்குக் காரணம் யாது? சிறிது தயைசெய்து சொல்லவேண்டும்? என்று தழுவிக்கொண்டு வாய்விட்டழுதார். இவ்வண்ணம் நெடுநேரமாயின பின்பு பச்சிலை மருந்து கொண்டு வந்து பிழிந்து பார்ப்போமென்று காடு முழுமையுந் திரிந்து கண்ட இலைகளையெல்லாம் பிடுங்கிக்கொண்டுவந்து பிழிந்தும் உதிரம் நில்லாமையை நோக்கி உயிர்சோர்ந்து இனி யான் இதற்கு என்செய்வேனென ஆலோசித்து நின்றார். ஊனுக்கு ஊனிடல் வேண்டும் என்னும் பழமொழி உள்ளத்தில் தோன்றியது.

உடனே இனி எனது கண்ணையெடுத்து அப்பினால் இறைவன் கண்ணிலிருந்து வரும் உதிரம் நின்றுவிடுமென்று தீர்மானித்து, தனது கண்ணை அம்பினால் களைந்து பெருமான் கண்ணிலே அப்பினார். அப்பொழுதே உதிரம் நின்று விட்டது. அதனைக்கண்டு அடங்குதற்கரிய ஆனந்தங்கொண்டு ஆனந்தக்கூத்தாடினார். நான் செய்த காரியம் நன்று நன்று என வியந்து பாராட்டினர். இந்தப்பிரகாரம் அளவில்லாத ஆனந்தங்கொண்டு உலாவிவருஞ் சமயத்தில், அத் திண்ணனாரின் மிகுந்த பேரன்பைச் சிவகோசரியாருக்குப் பின்னுங் காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, திண்ணனார் சிறிது ஏங்கி உடனே தெளிந்து இதற்கும் மருந்தைக்கண்டேன் கண்டேன் என்று களிகூர்ந்து எனக்கு இன்னமொரு கண்ணிருக்கிறது. ஆதலால் இதற்கஞ்சேன் அஞ்சேன் என்று துணிந்து, தன்னுடைய கண்ணைக் களையத் தனித்தபோது சிவபெருமான் கண் இவ்விடத்திலிருக்கின்றதென்று தெரிந்து கொள்ளுவதற்காக தனது செருப்புக்காலையொன்றை அப்பெருமான் கண்ணினருகே ஊன்றிக்கொண்டு அம்பைத் தனது கண்ணிலே வைத்தார்.

கிருபாநிதியாகிய சிவபெருமான், அது சகியாது வேதாகமங்களைத்திருவாய்மலர்ந்தருளிய தமது திருவாயினைத் திறந்து, ‘நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப, என் னன்புடைத்தோன்றல் நில்லு கண்ணப்ப!’ என்று மூன்றுமுறை இனிது மொழிந்து கொண்டே அவர் திருக்கரத்தினைப் பிடித்துக்கொண்டனர். பிரமாதிதேவர்கள் கற்பகப்பூமாரி பெய்தனர். ஆகையால் மங்கள துந்துபி வாத்திய முழங்கியது. திண்ணனார் தனது திருக்கரத்திலே யிருந்த அம்பை யெறிந்துவிட்டு, சிகாளத்தி நாதருடைய திருவடித்தாமரைகளைச் சிரசிலே சூட்டிக்கொண்டனர். சிவகோசமுனிவரும் அதிக அச்ச

முற்று அப்பெருமானை வணங்கினர். இருவினை யொப்பும் மலபரிபாகமும் வாய்ந்த அவ்விருவர்கட்கும் கிருபாநோக்கம் வைத்து தமது திருமேனியில் கலக்கச் செய்துகொண்டனர். அன்று முதல் சிவபெருமான் திருவாக்கின்படி திண்ணனுருக்குக் கண்ணப்பன் என்னும் அருமைத்திருநாமம் வழங்கியது. ஆறுநாளிலே முத்தியடைந்த அக்கண்ணப்பநாயனருடைய அருமைச் சரித்திரத்தினைச் சொல்லி முடித்து அவ்வரசன் வேண்டுகோளின்மீது நக்கீரதேவர் சரித்திரத்தைச் சொல்லத் தொடங்கினர்.

கண்ணப்பசருக்கம் முற்றிற்று.

---

கன்னியர் சிவபெருமான் கருணையைப் பெறல்.

# கன்னியர் சருக்கம்.

---

கலித்துறை.

மல்லன் ஞாலமோர் முடிமிசைக் கிடத்தலை மறந்த
தொல்லை நாகமொன் றழகிய சொக்கனா ரருளா
லெல்லை காணிய சூழ்கிடந் தனையவின் சியின்மே
லல்லு லாமதி தவழ்திரு வாலவா யதன்கண்.

பாண்டிய நாட்டிலே மதுரைப்பதியிலே பொது மடந்தையர் மரபிலே மாதரியற்கை முற்று மமைந்த மாணிக்க வல்லி யெனப் பெயரிய மங்கை யொருத்தி யிருந்தனள். அவளோ முத்து மாலை போன்ற பல்வரிசையும் நீலரத்தினம் போன்ற கண்களும் நெடிய குழலும் ஒளிவாய்ந்த முகமுடையவள். அவள் தன்னழகாகிய தாம்பினால், அரசிளங்குமரரென்னும் குடங்களைப்பூட்டி அவ்வவர்கள் மாளிகையிலிருக்கும் பொக்கிஷசாலை யென்னுங் கிணற்றில் விட்டு, திரவிய மெனும் ஜலம் வற்றும்படி நாடோறும் மொண்டு பெரும் பொருள் சம்பாதித்து வாழ்கையில், புண்ணியவசத்தால் முலைமுகங் கறுக்கவும் உடல்விளர்க்கவும் நரம்புகள் பசப்பெய்தவும் கர்ப்பவதியாகி, திருமகள் கலைமகளெனு மிருவரும் சிவஞான மங்கையர்களாகி அவதரித்தனர் போலவும், வேதசிவாகமங்களே சிவஞானத்தை வெளிப்படுத்த உருவேற்று வந்தாற்போலவும், உலகத்தார் யாவருஞ் சந்தோஷமெய்தவும், மன்மதன் தனக்குற்ற இறுமாப்படங்கவும், இரண்டு புதல்வியரை யீன்று, நீராட்டி பாலூட்டி ஆபரணங்கள் பூட்டி, தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டி தன்னிரு கண்மணிபோலக் கண்ணேறு படாவண்ணம் வளர்த்து வருகையில், அப்புத்திரிகள் அரிவைய ரிலக்கண மடங்கலும் அமையப் பெற்று, திருமகளிற் சிறந்த அழகினராகி கவிழ்ந்து இருந்து தவழ்ந்து நடந்து ஓடி நாளடைவில் வளர்ந்து பேதைப் பருவங்கடந்து *பெதும்பைப் பருவமெய்தி, கலைகளைக்கற்கும் காலமடைய, மாணிக்வல்லி மனமகிழ்ச்சி மிகுந்து, தமக்கியற்கையாகவே யுணர வேண்டிய கல்வித் தொழில்களை அவர்கள் கற்றுத்தேர்ச்சி பெறத் தக்க உத்தி யாதென் றுள்ளத்திற் கருதி, கண்டோருக்கு விரகமிஞ்சத் தக்க லீலா சித்திரங்களை மாளிகை முற்றிலும் எழுதுவித்தும்,

---

* பெதும்பை—எ-து—பதினொருவயதுபெண்.

போக வோசை பயிற்றுகின்ற, மயில் புறு முதலிய பறவைகளையும் வீணை முதலிய இசைக்கருவிகளையும் அதிகமாகச் சேகரித்தும் அவ்விரு புதல்வியருக்குங் காமக்கல்வியோடு கானக் கல்வியையும் சிறந்தோரைக் கொண்டு பயிற்றுவித்தனள். அவையாவும் சூரியனுக்கு இருளைச் சேர்ப்பித்தல் போலப்பயனற்றவாறுயின.

மாணிக்கவல்லி பற்பல வகையாக அவர்கட்கு மிக முயற்சியோடு கற்பித்தபோதிலும், சிவபெருமான் அவ்வனிதை யருள்ளத்திலே விளங்கி, சிவாகமங்களென்னும்† அபரஞான வுணர்ச்சியையும் பந்தபாசங்களைப் பற்றறக் களையும் அநுபவமாகிய ‡ பரஞான வுணர்ச்சியையும், கொடுத்தருள, கண்ணிற் காணப்படுவனவும் காதிற் கேட்கப் படுவனவும் மனத்தில் எண்ணப்படுவனவும் வேறெவ்வகைப் பட்டனவும் சிவமாகவே எண்ணத்தக்கவ ராணர்கள் மாயா கற்பனைகள் ஒன்றிலும் அகப்பட்டிலர். பலவிடங்களிலும் தேடி, உண்மையான சிவனடியார்கள் தம் கண்ணெதிர்ப்பட்டால், அவர்களைப்பாடிப் பரவிப் பாதங்களைப் பணிந்து தொண்டு புரியும் செயலில் மேம்பட்டிருந்தார்கள். அவர்கள் கண்கள் காம வேட்கைக் குறிப்பையும், சொற்கள் வஞ்சக மொழியையும், மனம் பழிபடு செயலையும், கால்கள் பவநடை வழியையும் அறிந்ததில்லை. இன்னும் அம்மாதர்கள் உலக வார்த்தைகட்கு ஊமை போலவும் சிவ நாம மகிமையில் கலைமாதாகவும், கிருபா சமுத்திரத்திற்குக் காமியாகவும், பஞ்சேந்திரியங்களையும் அடக்குதலின் ஆமையாகவும் விளங்கினர். இவர்கள் பெதும்பைப் பருவமெய்தியும் காமவேட்கையில் பேதைமையராய். ஆதி மூர்த்தியாகிய கடவுளை யுணரவேண்டு மென்னும் ஞானத்தால் பேரிளம் பெண்கள் போலாயினர். இம்மங்கையர் தங்கள் மதுரையில் சங்கப் புலவர்களில் சிறந்தோங்கிய நக்கீர தேவர், சந்திர சேகரராகிய சிவபெருமானது தென்கைலாயத்தையடைந்து அங்கே ஞானமயமாகிய கைலைபாதி காளத்திபாதி யென்னும் வெண்பாவந்தாதி யுரைத்ததும், ஆசையோடு சிகாளத்தி யப்பர் திருமேனியிற் கலந்ததும் சில சிவனடியார் சொல்லக் கேள்வியுற்று, பெருவிருப்பு கொண்டு நாமென்று தென்கைலையைச் சென்று சேவிப்பேமென்னும் எண்ணத்தோடிருந்து ஞானவந்தாதியை நாடோறும் நியமனமாகப் பாராயணஞ்செய்து, கண்ணிற் காணப்பெற்ற கண்ணப்ப நாயனரைப் போலவே கேட்ட மாத்திரத்தில் சிகாளத்தியப்பர் ஆசை மிகுந்து உண்ணல், உடுத்தல் முதலியவற்றில் நினைப்பின்றிப் பித்தர் போன்றிருந்தனர்.

மாணிக்கவல்லி தன்மகளிர் சாதிமுறைமையை விட்டு விலகியதும் பரமேசுவரனிடத்திற்கொண்ட பக்தியுங்கண்டு மனதிற்கோபங் கொண்டு கட்குடியன் அதனைக் குடியாதவனுக்குச் சொல்வதுபோல

† அபரஞானம்—எ-து—வாலஞானம்.

‡ பரம்—எ-து—முற்றுந்துறந்த.



சொல்லுகின்றாள். அடிபெண்களே ! ஒருமழை பெய்தகாலத்தில் உழுநர் தங் கொல்லையை விதைப்பது போல, இளைஞர்கள் உங்களை யவாவுஞ் சமயத்தில் பொருளைப் பெறுதிருந்தால் நாளை உங்கட்கு இளமை வருமோ! அஃதுள்ளபொழுதே பொருள்தேடவேண்டாவா? நீங்களெப்பொழுது வளர்வீர்கள், எப்பொழுது முலைகளைப் பெறுவீர்கள், எப்பொழுது காமக்கலைகளைக் கற்பீர்கள், எப்பொழுது * காவினத்தையை யறிவீர்கள், எப்பொழுது உதவுவீர்களென்று கருதி வருந்தி யிருந்த எனக்கு நீங்கள் எப்பொழுதுதான் உதவுவீர்கள். உங்கள் உதவி இவ்வளவுதானே? இளைஞர் மார்பையணையுஞ் செயலையறியாத உங்கள் பூரித்தமுலைகள், கொலையாளி யல்லாதவனிடத்துள்ள பொன்னையும் பெருஞ் சபைக்குப் பயந்த அறிவிலி கற்ற நூலையும் ஆண்டகைமை யில்லாதவன் கையிலுள்ள வேலையும் நிகர்க்குமன்றி யாது பயனுறும்? உன்னைக் கண்டால் உயிரிருக்கும், காணவிடிற்போம். உன்மேல் ஆணைப்படியென்று, பொய்க்கண்ணீ ரொழுக்கி பெரும் பொருளைக் கொண்டு ஆடவர்கட்கு ஆசையூட்டும் அறிவில்லாமல் மரப்பதுமை போன்றிருக்கின்றீர்களே.நீங்கள் என்வயிற்றிற் கர்ப்பமாய்ப் பொருந்தி என் வாயில் மண்ணைப் போட்டீர்கள். அழகுமுழுவதையும் இழக்கச் செய்தீர்கள். இளைஞரை மயக்கி அவர்கள் செல்வத்தைப் பெற்று உங்களையீன்ற எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவியைச் செய்திலீர். ஐயோ! மணிமந்தர மருந்துகளாலும் யந்திரங்களாலும் வாலிபரை வசப்படுத்திப் பொருளைக்கிரகித்தால் நம்மிடம் வரும் அடியார்களுக்கும் சிவபெருமானுக்கும் மிகுதியாகப் பயன்படாதோ? கல்வியுடைய மெல்லியரே ! உங்கள் தனங்கள் மார்பினின்று வயிற்றுக்கிறங்கியபின் உங்களைக் $ காமுகர்கள் இச்சிப்பார்களோ? சிறிதும் அழகில்லாதவர்களும் ஆடையாபரணதிகளால் அலங்கரித்துக் கொண்டு சிலரைமயக்கிப் பொருள் தேடுவார்களே, நீங்கள் பேரழகோடு கூடி உலகத்தை முற்றும் மயங்கச் செய்யும் நிலைமையிலிருந்தும் ஓரழகு மில்லாதவர்கள் போலவிருப்பது விவேகமல்லவே? உலகத்திலுள்ள பொதுமாதர்கள், காமுகராகிய ஆடவர்முன் ஆடை

* காவினத்தை—எ-து—மருந்துண்டை.

$ காமுகர்—எ-து—நாகரிகர்.

மையவித்துடுத்தியும், முலைகளும்மேலாடையும் குலுங்கும்படி நடந்
தும், நாடகம் நடித்தும், நல்லஇசைப்பாடல் பாடியும் மோகசாகரத்
தில் மூழ்கச் செய்வார்கள். நம்மவர்களெல்லாம், பெருஞ்செல்வ
ரென்னும் யானைகளை நெடிய † உகிரங்குசத்தால் நிறுத்தி, தோளா
கிய பாசத்தைப்பூட்டி, பூரித்த கொங்கையாகிய கட்டுத்தறியில்
கட்டுவார்கள் என்று இத்தன்மையாக மாணிக்கவல்லி தன் குல தர்
மங்களை அநேகவகையாக எடுத்துக்கூற, அக்கொடுஞ் சொற்கள்
யாவும், கவிழ்த்த குடத்தின்மேற் பொழிந்த மழைநீர் போலொழிய
குற்றமற்ற சித்தமுடைய அக்கன்னியர் சொல்லுகின்றார்கள்.

தாயே ! மின்னல்போலழியும் உடம்பினை வளர்க்கக் கருதி, நர
கத்தினால் விழுங்கி வெளியிடப்படாத தீச்செயல்களை நாங்கள் செய்
யும்படி நீ போதிக்கலாமா? இப்பியி னிடந்தோன்றிய முத்தானது
இப்பிக்குப்பயன்படாது தன்னையணிபவருடலையே பொருந்துமாறு
நாங்கள் உனக்குப் பயனற்றவரானோம். செஞ்சடைப் பவளவண்ண
ராகிய சிவபெருமானையே யடைவோம். சிவபஞ்சாக்ஷரத்தை ஜெபிக்
கும் எங்கள் வாய், பாவிகளாகிய மனிதரை வருவிக்கத்தக்க வசிய
மந்திரங்களை மீண்டும் ஜபியாது உடல் முழுதும் ஆயிரங்கணக்கான
ஆபரணங்களை யணிந்தாலும் உடல்பாரமன்றி உடன் பருவதொன்
றுண்டோ. சிவசின்னமாகிய உருத்திராக்கமணி யொன்றனை ஒரே
நாள் உடலிலணிந்தாலும் எல்லாத் தீவினைகளும் ஒழியும். சந்தனம்
புனுகுமுதலிய பரிமள வஸ்துக்களைப் பூசி நவத்துவாரங்களமைந்த
மலபாண்டமாகிய சரீரத்தை அழகுசெய்தால் * மலமகலுமோ. சிவ
பெருமானது திருவெண்ணீற்றை யணிந்தால் ஆணவாதி மலங்களும்
அடியோடகலும். சூரிய சந்நிதானத்தில் இருள் நுழையாத வகையே
சிவத்தியானம் பொருந்திய எங்கள்மனதில் அறிவையகற்றுங் காம
நோய் அடையுமோ? தத்துவாதீதமாகிய தனியிடத்திலே சிவபெரு
மானைக் கண்டு மெய்யின்ப ‡ நுகரும் நாங்கள் மாளத்தக்க மனித
ரைக்கலந்து பொய்யின்பத்தைப் பொருளெனக்கொள்வோமா? யானை
யை யேறி நடத்துவோர் கழுதைமேலேறுவரா? சிவதருமங்களைக்

† உகிர்—எ-து—நகம்.

* மலம்—எ-து—ஆணவம்—காமியம்—மாயை—முதலியன.

‡ நுகரும்—எ-து—அனுபவிக்கும்.



கடைப்பிடித்த நாங்கள் உம்முடைய குலதர்மங்களைக் கொள்
வோமா? இம்மை மறுமை யின்பங்களைப் பயக்கும் எம்பெருமானை
வழிபடும் நாங்கள், பொய்ப்பொருளை † யவாவிப் ‡ புல்லிய அரச
ரைப்புகழ்வோமா? இளமையிலேயே தருமங்களை நடத்தாவிடின்
முதுமையில் அது கைகூடுமா? உண்டபொருளை யுடனே மலமாக
மாற்றும் உடலைப்போஷிக்கு நிமித்தமாகத் தீத்தொழில்புரிந்து திரி
யும் மனிதரை மக்களுட்பதரென்று மதிவாணர் கூறுவர். பொதுமக
ளிர் தம்மைநம்பிய ஆடவர்பால் மேலுறவு பாராட்டி உள்ளுறவின்
றியே பொருளனைத்துங் கவர்ந்துகொண்டு அவரை நரகத்திற்கும்
அனுப்புவதால், திருடரினும் பெருந்திருடன்றோ! குயில் காகத்து
டன் ஒருகூட்டிலிருந்தாலும், காகத்தின் செயலைக் கற்றுக்கொள்ளா
ததுபோல நாங்கள் உம்மோடிருப்பினும் உமது தொழிலைக் கற்றுக்
கொள்ளோம். ஆனதால் நீ யினி எங்களை வசப்படுத்த வேண்டு
மென்று கொண்ட கருத்தை யிப்பொழுதே விட்டு விடுகவென
வெளிப்படையாக விளம்பினர்-

இவ்வண்ணமாகப் பெண்கள் சொல்லக்கேட்ட மாணிக்கவல்லி,
தன் தளர்ந்த முலையைப்போலத் தலைவளைந்து சிந்தைநொந்து, அடி
பெண்களே ! நான்மலடியுமா யிலேனில்லை. உங்களைப் பெற்று
மகிழ்ச்சி யடையும் சிறப்புற்றேனு மில்லை, பூர்வபுண்ணிய முடை
யோர்க் கன்றிப் புதல்வரால் உதவியுண்டாதல் ஏனையோர்க்கில்லை
யென்று வருந்தி, ஒருவாறு தெளிந்து, மதிமயக்குற் றிருக்கும் இம்
மங்கையரை மணிமந்திர ஔஷாதிகளால் வழிப்படுத்திக் கொடுப்
பவர் பொருள் கொடாமலே இவர்கள்மோக நலத்தை யனுபவிக்கக்
கடவரென்றும் பலர்க்கும் வெளிப்படுத்த, அக்கன்னியர் தாயின்
கருத்தை யறிந்து சிறிதுஞ் சகியாதவர்களாய், என்றும் நாம் தென்
கைலையைக் காணப்பெறுவோ மென்னுமெண்ண மிகுந்தவர்களாய்,
பாம்பின் வாய்த் தேரைப்போல மனம்நைந்து எந்தச் சமயத்தில்
தாயைப் பிரிந்து போய் விடலாமென்று சமயம் பார்த்திருக்கையில்,
இதனையறிந்த இரண்டுகள்வர்கள் அந்தஞானக்கன்னிய ரணிந்த
ஆபரணங்களை யபகரிக்கும் உபாயமிது வென்றுயோசித்து, சிவனடி
யார் வேடந்தாங்கி, பாலில் மறைந்த விஷமும் பழத்தில் மறைந்த
புழுவும், மாமிசத்தில் மறைந்துள்ள தூண்டிமுள்ளும், மிருகங்களைக்
கொல்லமறையும் வேடரும்போலத் தங்கள் நிலைமைவெளிப்படாது
ஞானக்கன்னிய ரிருக்குமிடத்தைச் சார்ந்து உங்களைக் காளத்தி
நாதன் காக்கவென்னுஞ் சொல்லோடுவர, அக்கன்னியர் தாய்மொழி
கேட்ட குழந்தைகள் போலச் சந்தோஷமிகுந்து தம்மிருக்கைக்குள்
வருவித்துச் சிறப்புகள் செய்து சொல்லுகின்றார்கள். நீர் இருக்கு

† யவாவி—எ-து—வேண்டி.

‡ புல்லிய—எ-து—அடைந்து.

பிடம்யாது செல்லுமிடம்யாது என வினவ, நாங்கள் சிவதலங்களை உலகெங்குஞ் சஞ்சரித்துத் தெரிசிப்போம். இப்போது சீகாளத்தியை தரிசிக்கும் விருப்புடையவர்களாகப் போகின்றோமென, கேட்டமாத்திரமே அவர்கள் பாதங்களைப்பணிந்து, நாங்களும் தென்கைலையைக் காணப்பேரவாவுடையோ மாதலின், எங்களையும் உங்களுடன் கொண்டு செல்லுவீர்களாயின், உங்களுக்கு நாங்கள் செய்யும் பிரதியுதவியுண்டோ என்று சொல்ல, கள்வர் அக்கின்னியரை நோக்கி மங்கையரே! நீங்கள் கோமள மேனியுடையவர்கள். வெப்பமிக்க பாலைநில முதலியவற்றை எப்படிக் கடப்பீர்களென்றும், உங்களை யழைத்துப் போனால் பழிச்சொல்லுக் கிடமாமே யென்றும், உங்களைப்பெற்ற தாய் கன்றிழந்த பசுப்போற் கலக்கமுறுவாளே யென்றும் யோசிக்கின்றோம். ஆயினும் காளத்தியைக் கண்டகண்களே கண்கள், காளத்திக்குப் போகுங் கால்களே கால்கள், காளத்தியைக் கருதும் மனமே மனம், காளத்தியைத் துதிக்கும் நாவே நாவென்று நூலறிந்தோர் சொல்லுவர். இவ்வுடலோடு யான் சீகாளத்திக்குச் செல்வேனென்று விளையாட்டாகச்சொல்லினவரும் கைலாயப்பதவியடைவர். அவ்வாறு சொல்வோரை விநோதார்த்தமாகத் தடுத்தவரும் வெகுகாலம் நரகிற் கிடப்பர். நீங்கள் சீகாளத்தி காணும் விருப்பத்தை நாங்கள் தடைசொல்ல மாட்டோமென, * பசப்பு வார்த்தைகளாற் சொன்னதை, அவ்வுத்தம மங்கையர் உண்மையென் றுள்ளத்திற் கொண்டு, நாங்கள் சிவபெருமானை யடைந்தால் இவ்வுடல் எவ்வகையாயினும் என்ன? உலகினர் பழித்தாலென்ன? புகழ்ந்தாலென்ன? எங்களை எவ்விதமாகவேனும் நீங்கள்தென் கைலையைச் சேரச் செய்ய வேண்டுமெனப் பலவாறு பணிந்து வேண்டிக்கொள்ள, அவ்வஞ்சகச் சிவவேடதாரிகள் நன்றென் றங்கீகரித்து, நீங்கள் பாதியிரவில் உங்கள் தாயறியாத விதமாக இன்னவிடத்தில் வந்துசேருகவென்று குறித்துக் கூறிப்போயினர்.

ஞானக்கன்னிய ரிருவரும், தங்களை நிழல்போலப் பிரியாத இரண்டு தோழிகள் பலபொருளைக் கொண்டுவர, † சங்கேதப்படி அர்த்தயாமத்தில் குறித்த விடமடைந்து, கள்ளர்களோடு பொழுது விடியுமுன்னமே இருகாத தூரஞ்சென்று, வழியில்நேர்ந்த ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, சோணாடடைந்து கும்பகோண முதலிய தலங்களை வணங்கி, சிதம்பரஞ் சார்ந்து திருவெல்லையைப் பணிந்து வீதிப்பிரதக்ஷிணம் வந்து ஆலயத்தெதிரே நின்று நமஸ்கரித்து, திருமூலட்டானரையும் பஞ்சகிருத்திய ஆநந்ததாண்டவம் புரியும் ஸ்ரீ நடராஜப் பெருமானையும் சிவகாமியம்மையாரையும் கண்கள் பயன்பெறத் தரிசித்து அத்தலத்திலுள்ள பத்துத் தீர்த்தங்களிலும்

* பசப்பு—எ-து—மயக்கும்

† சங்கேதம்—எ-து—கட்டுப்பாடு.



ஸ்நானஞ் செய்து காலந்தவறாது சிவதரிசனஞ் செய்துகொண்டு சிலநாளிருந்து, அங்குநின்றும் புறப்பட்டுக் காஞ்சிபுரஞ் சார்ந்து பணிந்து, திருக்காளகிரியென்னும் தலத்தையடைந்து நதியிலே மூழ்கி, சித்தகணங்கள் வழிபாடு செய்யும் சித்தி வைரவைப் பணிந்து பிரதக்ஷிணஞ் செய்து, தரிசித்தோர்க்குப் போக மோக்ஷங்களைக் கொடுக்கும் வாலிநாதரைத் தரிசித்து வணங்கி, வெளியே வந்து ஒரு புராணிகரைச் சந்தித்து நமஸ்கரித்து அந்த ஸ்தல மகிமையைக் கேட்ப, அவர் சொல்லுகிறார்.

கன்னிகைகளே! பண்டைக் காலத்தில் மகாபலவானான வாலியென்பவர் தம்முடைய ஆன்மார்த்த சிவலிங்கமூர்த்தியை இத்தடாகத்தின் கரையிலே யமர்த்தி யபிடேக முதலிய பூசாகிரியைகளை முடித்து, பலவாறு தோத்திரஞ் செய்து அன்பின் மிகையால் ஆநந்தக் கூத்தாடி, வழக்கப்படி பெட்டகத்தில் எழுந்தருளுவிக்கக் கையா லெடுக்கையில், இலிங்கமூர்த்தி யசையாதிருந்தமை கண்டு இரண்டு கைகளாலும் இறுகப்பிடித் தெடுத்தும் அசையாமையால் மனக்கலக்க மெய்தி அப்பெருமானை வாலினாலே நன்றாகச் சுற்றிக்கொண்டு, கைகளை யூன்றி அண்டகடாகமட்டும் உயர்ந்து பெயர்க்கவும் பெயராமையின், வாலைவிட்டுப் பெருமூச்செறிந்து பின்வருமாறு துதித்தார். தேவாதிதேவரே! தேவரீரே திருவருள்வைத்தெழுந்தா லல்லது பொய்த் தன்மையுடன் நான் வலியால் பெயர்த்தற் கெளியூரோ? என்வாலினால் தேவரீர் திருமேனியில் தழும்புண்டாகத் தீங்கிழைத்தேன். என்செய்வேன் கொடியேன். என்செய்வேன், ஆ! ஆ! என்செய்வேன். தாயானவள் இளங்குழந்தையைக் காட்டில் விட்டுப் போனதுபோல அடியேனைக் கைவிட்டு இங்கமர்ந்து விட்டீர். நான் என்ன பிழைசெய்தேனோ? கருணைக் கடலே! என்னுயிரும் நீ, என்றுணையும் நீ, என் வாழும் நீ, என் அன்னையும் நீ, தந்தையும் நீ, உன்னையன்றி வேறு எனக்குயார் உறவாவார்? உன்னை நீங்கினால் என்னுயிர் நில்லாது நில்லாதென்று பற்பல்விதமாக வருந்தி நிற்க, பெருமான் பிரசன்னமாகி, அன்பனே! நாம் இவ்வனத்தில் இத்தடாகக்கரையில் வசிக்க விரும்பினோம். கவலையடைய வேண்டாம். இன்றுமுதல் உன் உள்ளத்தி லிருந்து உன் பூசையை யங்கீகரிப்போ மென்றாஞ்ஞாபித்து அந்தர்த்தானமாயினர்.

வாலியானவர் இறைவர்வார்த்தையைதக் கேட்டு, இவர் இங்கமர்ந்தது இத்தடாகத்தின் ஆசையினாலன்றி வேறன்று. இதனை யழித்துவிடுவதே யிதற்குத்தீர்ப்பென்று, பெருமலை யொன்றைப் பெயர்த்து ஆகாயம் வரையில் நீர்த்துளிகள் செலலும்படி ஓங்கியெறிய, அம்மலையினின்றுஞ் சிதரிய மருந்துகளால உலகில் நோய்புண் முதலியன வுடையோர் அவற்றை நீக்கினர். இறந்தவர் பிழைத்தார்கள்.

கிழவர் பாலியராயினர். அத்தடாகம் அழிவின்றிப் பலர்க்கு முதவும் பெருநதியாகிப் பெருகி யோடுதலை வாலிபார்த்து எம்பெருமான் திருவுள்ளம் இஃதாயின் யாது செய்வேனென்று பணிந்து பிரியாவிடைகொண்டு போயினர். இந்நதியில் மூழ்குவோர் பிறவிக்கடல் கடந்து முத்திக்கரையை யடைவர். இது தீவினையென்னுஞ் செத்தைக்கு ஜலரூபமான நெருப்பு. கைலையைப்போலவே சிவபெருமான் இங்கு வாலிநாதரென்று உமாபிராட்டியோடு எழுந்தருளி யிருக்கின்றார். இப்பரமனைப் பணிவோர் பாதமெல்லாந் தவிர்ந்து பரகதியடைவர். இதுசிறந்ததொரு தலமென்றுரைக்க, ஞானக்கன்னியர் களிப்புமிகுந்து அவர்பாதங்களைப் பங்கயமுதலிய பலமலர்களா லர்ச்சித்துப் பணிந்து, அன்றப இரவிலும் வாலிநாதரை வணங்கி ஒருமலையிற்றங்கினர். இவர்கள் இப்படித் தங்குந்தோறும் சிவபெருமான் இவர்கட்குக் கள்வரால் துன்பெய்தாத விதமாக அடியவர் வேடமேற்றிருந்து காத்துவந்தனர்.

அவ்வாறு, திருக்காளகிரியிற் றங்கி கன்னியர் சூரிய னுதிக்கு முன்னேயே யெழுந்து * நியதி முடித்துச் சென்று அன்றோர் நகரிற்றங்கி மற்றையநாள் தென்கைலைக்கு நெருக்கமாகச் சேர்க்கையில் வஞ்சகரிருவரும் இனி தென் கைலாயம் குறுகிவிட்டது. யாது செய்வோம், இதனைக் கடந்தால் தக்கவிடம் கிடைக்க மாட்டாதே இதுவே தனித்தவிட மாதலின், இவ்வனத்திலேயே இந்நான்கு மாதரையும் மாய்த்து இவர்களிடத்துள்ள பொன் பூஷண முதலியவற்றைக் கவர்ந்து போகவேண்டு மென்னுந் தம் விருப்பத்தை வெளிப்படுத்த அவர் நிலையை யறிந்த, இளையாள் உளநடுங்கி தமக்கையே! இவர்கள் நம்மை முடிக்க முயல்கின்றன ரெனவுணர்ந்த முதியாள் இதுகாறுங் கார்த்த சீகாளத்தி நாதர் இன்றுங் காப்பார் அஞ்சற்க வெனத்தேற்றி, நிற்கும்போது, தென் கைலாய நாதர் பாம்பின் வாயிலகப்பட்ட தேரையைப் பாதுகாப்பவர்போல, கள்ளரிடத்திருந்து கன்னியரைக் காக்கத் திருவுளங்கொண்டு, திருப்பள்ளித் தாமத் திருத்தொண்டு செய்யும் அடியவர் வேடமேற்று அருகேவர, அவர் வருகையைக் கண்ட வஞ்சகர் விரைந்தோட, பெருமான் பெண்களருகே வந்து, தம்மைப் பக்தியுடன் பணிந்து நின்ற பாவையரைப்பார்த்து, நீங்கள் எவ்விடத்திலிருந்து வந்தீர்களென வினவி, அம்மங்கையர் நிகழ்ந்தன யாவுஞ் சொல்லக்கேட்டு, கன்னியர்களே! உங்களைத் தென்கைலையிற் சேர்ப்போம் வாருமென்றழைத்துக் கொண்டு பூமிதேவி புரிந்த தவப்பயனால் பாதங்கள் நிலத்திற்றோயத் திருவடி வருந்த நடந்து தென் கைலைசேர்ந்து மங்கையரே! இதுவே தென்கைலை மலை, அது துர்க்கைமலை, அது நீலபர்வதம், இவ்வாறே பொன்முகரி, இது மயூரநாத்தம், என ஏனைய

* நியதி—எ-து—நேமநிஷ்டை




வற்றையு முணர்த்தி அந்தர்த்தான மாயினர். அம்மங்கையர் திசைகளை நோக்கி நம்மையழைத்துவந்து வழிகாட்டி மறைந்தவர் தென்கைலாய நாதரேயென்று தெளிந்து, மூவர முதலியவ ரருளியதிருமுறைகட்கு உவந்த எம்பெருமான் இரக்கமெய்தி இத்தென்கைலையிலிருந்து சங்கமராகத் திருவருட் பெருக்கத்தால் வந்தனரென்று பெரும்வியப்புற்றனர். ஐயோ காளத்தியண்ணல் கண்ணெதிர்ப்பட்டும் முத்திபெறாது, மணிபெற்றுழந்த வறிஞனையும் அமுதம் பெற்றிழந்த அறிவில்லாதவனையும் ஒப்பானோமே என வருந்தி மயங்கி, மீண்டும் இங்குள்ள சிறப்புகளை யெல்லாம் இறைவரே காட்டப் பெற்றோமென்று தெரிந்து, பின்னர் பொன்முகரியில் மூழ்கி, திருவெண்ணீறு தரித்து, உருத்திராக்க வடம்பூண்டு, பஞ்சாக்ஷரஞ் சபித்து, ஞானவந்தா நிலை நியமனப்படி யோதிக்கொண்டு நாகலிங்கப்பெருமான் சந்நிதியடைந்து, நமஸ்கரித்து, வலம்வந்து அன்பின் மிகையால் நடனஞ்செய்து பரவசராகி நின்ற கன்னியரைப் பரமசிவன் திருவருள் மிகுந்து அச்சிவலிங்கத்திலே செவ்வொளியும் மரகத வொளியுமாகத் தரிசனமளித்து, அவர்களன்பை நோக்கி மனமகிழ்ந்து, திருமாலி தேவர் சேவிக்கவும், உமாபிராட்டியார் உள்ளம் நாணவும், அவர்களைத் தம்முள்ளே கலப்பித்துப் பண்டுபோல் விளங்கினர். அப்போது, அவர்களோடு உடன் வந்த தோழியர், ஆலய மடைந்த கன்னியரைக் காணோமே யென்று தேடி மயங்குகையில், அக்கன்னியர் முத்தியடைந்தனர். நீங்கள் அவர்கள் பெயராற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யக்கடவீரென் றுண்டான ஆகாய வாணியைக்கேட்டு, அத்தோழிகள்கன்னிலிங்கமென் றிரண்டுசிவலிங்கப் பிரதிஷ்டை செய்தர்ச்சித்து நற்கதிபெற்றனரென்று விடசங்கம வடிவாய் வந்த விமலர் கூற, யாதவமகாராசன் மனங்களிமிகுந்து, அடிகளே! தேவரீர் முற்கூறிய சிலந்தி முதலியவற்றின் ஜன்மாந்தர வாலாற்றின் அடியேனுக்கு உபதேசிக்கவேண்டுமென வேண்ட, நெற்றிக்கண்ணைக் காட்டாது மறைத்து விடசங்கம வடிவாக வந்த சிவபெருமான் மேலுஞ் சொல்லலாயினர்.

கன்னியர்ச் சருக்கம் முற்றிற்று.

---

* முதியாள்—எ-து—மூத்தவள்—தமக்கை




# கைலாச சிகரச் சருக்கம்

யாதவ மகாராஜனே! ஒருகாலத்தில் சர்வலோக சரண்யனாகிய பரமசிவப்பிரபு உலக சங்காரத்திற்குப் பின் மறுபடியும் சிருஷ்டி தொடங்குகையில், தன்னுடைய வலது பாரிசத்தில் பிரமனையும், இடபாரிசத்தில் விஷ்ணுவையும், இதயத்தில் உருத்திரனையு முண்டாக்கி மூவருக்கும் முறையே சிருஷ்டி திதி சம்மாரமென்னும் முத்தொழிலைக் கற்பிக்க, பிரமாவானவர் அதிக இறுமாப்படைந்து நமது சாமார்த்தியத்தினைச் சிறிதும் அறிந்துகொள்ளாது இத்கைய சிருஷ்டித்தொழிலை நமக்கு இக்கடவுள் ஏற்படுத்தினரேயென இறுமாந்தபோது தனது சிருஷ்டித்தொழிலும் செய்ய முடியாது அஞ்ஞானம் மேலிட்டு அங்கு மிங்கும் திரியத்தக்க நிலையினை யடைதலும் பிரமன் மிக்க வியசன முற்றுச் சிவபெருமானை யடைந்து வணங்கித் தனது பெரும்பிழை பொறுத்தருளவேண்டுமென இரங்கிக் கேட்டுக்கொள்ளப் பரமேஸ்வரன் கிருபையுடன் பழையபடியே சிருஷ்டித் தொழிலைக் கற்பித்தனன். அது பெற்று உலகங்களை யெல்லாம் படைத்து வருகையில் சிவத்தியானத்தை மறந்து, தனது சாமார்த்தியத்தால் எதனையுஞ் செய்துமுடிப்பதாக வெண்ணிச் செருக்குற்றுப் படைக்குந் தொழிலுங் கெட்டுப் பரதவிக்



கையில், தெளிந்து கைலையையடைந்த ஸ்ரீகண்டனைப் பலகால் வேண்ட சுவாமியானவர் அவனை நோக்கிப் பிரமாவே! நீ ஆயிரம் சிகரங் கூடிய எனது கைலையில் ஒன்றரைகாதம் அகலமும் நீளமும் இரண்டரைகடிகை உயரமுமுள்ளது. ஒரு முடியானது ஐந்து சிகரத்துடன் விளங்கும் ஒரு தலம் இருக்கும் தென்றேயமடைந்து பூர்வத்தில் நம்மைப் பூசித்துப் பல வரங்களை யேற்ற வாயுவால் பிரதிஷ்டிக்கப்பெற்ற சிவலிங்கத்தைப் பூசிப்பையேல் நினது எண்ணம் நிறைவேறுமென்று கட்டளையிட, அந்தட்சணமே பிரமாவானவர் பூமியையடைந்து வாயுலிங்கத்தைப் பூசிக்கவெண்ணிக் கைவல்லிய தீர்த்தமொன்று உண்டாக்கி அதில் ஸ்நானம்செய்து விபூதிருத்திராட்சம் பூண்டு, கற்பூரங்கொண்டு அபிஷேகித்து, நின்மாலிய முண்டு, சிவபூசை செய்துவருகையில், சாம்பவமூர்த்தி வெளிப்பட்டு அவர்முன் வந்து அப்பிரமனுக்கு சிருஷ்டிக்குந் தொழிலுற்றும், அஞ்ஞானம் நீங்காமையின் சரஸ்வதி தீர்த்தமொன் றுண்டாக்கி அதில் அப்பிரமாவை முழுகச்செய்து அஞ்ஞானத்தைப் போக்கி என்ன வரங்கள் வேண்டுமெனக் கேட்க, நான்முகன் எழுந்து சாஷ்டாங்கமாக பூமியில் பலதரம் விழுந்து எழுந்து நின்று ஐயனே! நான் எடுத்த தீர்த்தத்திற்குப் பிரமதீர்த்தமெனப்பெயருண்டாகவும், இத்தீர்த்தத்தின் தட்சணதிசையில் நான் ஆன்மார்த்தமாகத் தாபித்த சிவலிங்கத்தினை மாசிமாதம், சுக்கிலபட்சம் பௌர்ணமியில் பூசிப்பவர்கட்குச் சத்தியலோகப்பிராப்தி யுண்டாகவும், அடியேனுக்குண்டாகிய அஞ்ஞானம் நீங்கவும், தேவரீர் திருவடியில் மிகுந்த பக்தி யுண்டாகவும், எனக்கு சர்வஞ்ஞானம் உதயமாகவும், சிருஷ்டித் தொழில் சரிவர நிறைவேறவும், நான் பூசித்த இலிங்கத்திற்குப் பிரமலிங்க மெனப் பெயருண்டாகவும், இதனையேத்துவோர்கள் சாயுச்சியமடையவும், ஒருவருடம் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்துவந்தால் வாக்கு சித்திபெறவும் உண்டாக வேண்டுமென விரும்ப அங்ஙனமே யுண்டாகுகவென்று ஆசீர்வதித்து அவ்வாயுலிங்கத்தில் மறைந்தருளினர்.

கைலாய சிகரச்சருக்கம் முற்றிற்று.





# வித்தியாபீடப் பருவதச் சருக்கம்.

---

யாதவமகாராஜனே! ஒரு காலத்தில் வெள்ளியங்கிரியிலே பரமேஸ்வரன் பரமேஸ்வரிக்குப் பிரணவப் பொருளைப் போதித்துக் கொண்டிருக்கையில், சமீபத்திலிருந்த சண்முகக்கடவுள் கேட்டுக் கொண்டிருந்து, பின்னர் அந்தப் பிரணவப் பொருளை பிரமாதி தேவர்கட்கும், அகத்தியராதி முனிவர்கட்கும் போதிக்க, அதனையறிந்த கைலைக்கடவுள் தன் புத்திரனையழைப்பித்து, கந்தனே! நீ என்னிடத்து உபதேசக்கிரமமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய பிரணவ அர்த்தத்தை அங்ஙனந் தெரிந்துகொள்ளாமல் நான் நினது தாயினுக்குப் போதித்துக்கொண்டிருந்த காலத்தில் அறிந்து யாவருக்கும் உபயோகித்து வருகின்றனை. அது சாம்பிரதாயமன்று. ஆகையால் நீ தெரிந்துகொண்ட அப்பொருளை எனக்கு அர்ப்பணஞ் செய்துவிடக்கடவை என்றனர். கந்தப்பெருமான் ஐயனே! நானெங்ஙனம் அதனை தேவரீருக்குத் தத்தஞ்செய்து களவாகக் கிரகித்ததனால் எனக்குண்டாகிய தோஷத்தை நீக்கிக்கொள்வது கட்டளையிட்டருளவேண்டுமெனக் கேட்க, சுவாமி குழந்தாய்! திருக்காளத்தி நிருதிதிக்கில் இரண்டுகாத தூரத்தில் நவாந்தரகைலாசம் என்னுமிடத்தில் சுமேதர் என்னும் முனிவர் தவஞ்செய்துக்கொண்டிருக்கின்றனர். அவ்விடம் சென்று அங்குள்ள வேத தீர்த்தத்தில் உலகிலுள்ள புண்ணிய நதிகளெல்லாம் வந்து படியும்படியாகச் செய்து அதற்குத் தருமகுல்யநதியெனப் பெயரிந்திடுவாய். அத்



தீர்த்தத்தில் பிரணவத்தினின்றும் உண்டான யஜுர்சாமம் என்னும் மூன்று வேதங்களும் மூன்று தாமரைகளாக தினம் விளங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றைத் தினமெடுத்து நம்மைப் பூசித்து வருவையேல் நினது குற்றம் விலகுமென்றனர். அங்ஙனமே அதற்கிசைந்து தந்தையிடம் விடைபெற்று நவாந்தர கைலாசமடைந்து, பிதா சொன்னபடி யாவுஞ் செய்துமுடித்துத் தாமரைப் புட்பங்களைக்கொண்டு சிவலிங்கப்பெருமானை அருச்சித்து வருகையில், மாசி மாதம் சுக்கிலபட்சம் அசுவனி நட்சத்திர பஞ்சமி சோமவாரமன்று சிவபெருமான் பிரத்தியட்சமாக முன்னே எழுந்தருளிப் புத்திரனையெடுத்து மார்போடணைத்து முத்தமிட்டு, குழந்தாய்! நின் பூசைக்கு நாம் மிக்க வியப்படைந்தோம். நீ பூசித்த லிங்கத்திற்கு ஸ்கந்த லிங்கமெனப் பெயர் வழங்கக்கடவது. இந்த தலத்தினை விஞ்ஞான க்ஷேத்திரமென யாவரும் அழைக்கக்கடவது என்று கூறிப் புத்திரனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டுபோய் ஒரு மலை மீதில் எழுந்தருளச்செய்து அம்மலைக்கு வித்தியாபீடப் பர்வதமெனப் பெயர்சூட்டி அவ்விடத்திலிருந்து உலக முழுவதிற்கும் அனுக்கிரகம் செய்யும்படி கருணைசெய்து கைலையை அடைந்தனர்.

வித்தியாபீடப் பருவதச் சருக்கம் முற்றிற்று.

---





# ஞானப்பூங்கோதை மகிமைச் சருக்கம்.


யாதவமகாராஜனே! அகில லோகங்கட்குத் தாயாக விளங்கும் அம்பாள் தனது நாயகனாகிய தற்பரனை நோக்கி, ஐயனே! எனக்கு வேதமூலமாய் சர்வ மந்திரங்கட்கு நாயகமாக விளங்கும் பஞ்சாட்சர மகா மந்திரத்தினை உபதேசித்தருள வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள சுவாமி பெண்ணே! அங்ஙனமே செய்வேன். அம்மகா மந்திரத்திலுண்மையை நாம் உமக்கு உபதேசிக்குமளவு மௌனம் பூண்டிருக்க வேண்டுமென அதற்கிசைய *ஆண்டவன் சொல்லிவந்தனர். இடையில் அம்பாள் தனது பாங்கியாகிய மாலினி என்பவளிடத்தில் ஒரு அவசரநிமித்தம் பேசிவிட்டனள். சுவாமி கண்டு கோபித்து பார்வதி! நீ எனது கட்டளையை மீறி நடந்தாயாகையால் உனது அழகிய வடிவம் நீங்கி நீ மானிடப்பெண் வடிவங்கொண்டு பூமியையடைந்து கங்காநதிக்கு நூற்றைம்பது யோசனைதூரத்தில் பிரமனால் அமைக்கப்பட்ட* சிவானந்த நிலயத்தினை யடைந்து நம்மைப் பூசித்து இங்கு வரக்கடவாய். உன்னை விட்டு நீங்கிய சுந்திர வடிவம் உனக்கு முந்திப்போய் அத்தலத்தில் வில்வவிருட்சமாக விருந்துகொண்டிருக்கும். அவ்வில்வ மலரைக்கொண்டு நம்மை யருச்சிப்பாயாக, நாம் அவ்விடத்தில் வாயுதேவனால் பூசிக்கப்பெற்ற சிவலிங்கத்தினின்றும் காட்சி கொடுப்போமென்றனர். அதற்கிசைந்து பார்வதி கைலையை நீங்கிவருகையில் கேதாரத்தினை யடைந்து அதுவே சுவாமி தனக்குக் குறித்த மலையெனத் தங்கினள். சங்கரனார் இதுதெரிந்து நாரதரை யழைத்து, முனிவரனே நமது பார்வதி நாம் சொன்ன குறிப்பதனைத் தெரிந்து கொள்ளாது



கேதாரமே திருக்காளத்தியெனவெண்ணி அங்கு தங்கிவிட்டனள். நீ சென்று காளத்திற்கு அழைத்துக்கொண்டு போகக்கடவாயென்று கட்டளையிட அதற்கிசைந்து நாரதர் கேதாரமடைந்து அம்பாளை வணங்கி, அம்மணி! நமது பெருமான் தெரிவித்தக்ஷேத்திரமீதன்று. இங்ஙனம் தேவரீர் மறந்ததற்குக் காரணம் தாங்கள் கைலையைவிட்டு நீங்குகையில், விநாயகர் பூசையை முடிக்காமையேயாகும் என்றனர். உடனே பரமேஸ்வரி தனது குமாரனை நினைக்க விநாயகக்கடவுள் வந்து தாயை வணங்க, அவரை அவ்விடத்தில் ஆடி மாதம் சுவாதிநட்சத்திரம் சுக்கிலபட்சம் தசமிதிதியன்று பூசித்து அவரை நோக்கி, மைந்தனே! நான் இக்கேதாரத்தில் பூசித்த நினக்குக் கிருதாயுகத்தில் பாவாராக்கினி விநாயகரென்றும், என் தவசுக்கு உதவிசெய்ததால் திரேதாயுகத்தில் விக்கினசாந்தி விநாயகரென்றும், ஸ்கந்த விநாயகமாய் பூசித்தமையால் துவாபரயுகத்தில் பார்வதி பூசிதனென்றும், என் காரியம் சித்திபொரச்செய்தாயதினால் கலியுகத்தில் புஷ்டித விநாயகரென்றும் பெயர் வழங்கக்கடவதாகவெனக் கூறி நாரதருடன் திருக்காளத்தியடைந்து பொன்முகரிபடிந்து தனது திருவுருவாகிய வில்வவிருட்சத்தின் பத்திரங்களைக் கொண்டு பூசித்து நிஷ்டையிலிருக்கையில் தன் பூசைக்கு இடையூறு வாராவண்ணம் கையிலிருந்த தனது வடிவாம்சமாகிய துர்க்கையை மாலினி முதலியவருடன் அழைப்பித்துத் தனக்குக் காவல்வைத்துத் தவநிலையிலிருந்தனள். சாம்பசிவம் ஈதறிந்து தனது மனைவியின் தவத்தினைச் சோதிக்கவெண்ணி மாயாசமுத்திரத்தினை உண்டாக்கியேவ அது பெரும் பிரவாகமாக வந்து காளத்தியைச் சூழ அதுகண்டு காளியானவள் அது அம்பாளுக்கு இடையூறு செய்யுமெனக்கருதி அதனைத் தனது உள்ளங்கையினில் அடக்கிக்கொண்டனள். உடனே சங்கரனார் வாயுலிங்கத்தினின்றும் வெளிவந்து துர்க்காதேவியின் சாமார்த்தியத்திற்கு வியந்து அம்பாளின் திடபக்திக்குச் சந்தோஷித்து, தானனுப்பிய மாயா சமுத்திரத்திற்கு அஸ்தார்த்தசாகரம் எனப் பெயரீந்து, தைமாதம் மாசிமாதம் பௌர்ணமி சதுர்த்தசி கிரகணகாலம் முதலிய நாட்களில் ஸ்நானஞ் செய்யின் சிவசாயுச்சியமுண்டாமென வரமீந்து அம்பாளுக்குப் பஞ்சாட்சர உபதேசத்தினைச்செய்து மேலும் என்னவரம் வேண்டுமெனக் கேட்க, சுவாமி! தேவரீரும் நானும் இத்தலத்தில் எந்நாளும் வீற்றிருந்து இத்தலத்திற்கு வரும் அடியார்கட்கெல்லாம் கிருபைபாலித்தருளவேண்டுமென விசைந்தனர். பின்னர் அம்பாள் சுவாமி போதித்த பஞ்சாட்சரத்தை ஐம்பதுலட்சம் செபித்து விஞ்ஞானம்பிகை ஞானப்பூங்கோதை என்னும் அருமைத் திருநாமங்களுடன் அத்தலத்தில் வீற்றிருநதருளினர்.

ஞானப்பூங்கோதை மகிமைச்சருக்கம் முற்றிற்று.

---





# கனகதுர்க்கைச் சருக்கம்.

யாதவமகாராஜனே! ஞானப்பூங்கோதையர் தவத்தினுக்குப் பின்னம் வாராதபடி காத்துக்கொண்டிருந்த துர்க்கையைப் பரமசிவம்நோக்கி காளியே! உன்னுடைய சாமார்த்தியத்திற்கு நாம் மிக வியந்தோம். உனக்கு ஏதாவது வரங்கள் வேண்டியிருந்தால் கேட்பாயாக வென்றனர். உடனே துர்க்கை எழுந்து சுவாமி! என்னுடைய கருமைநிறத்தினைக் கண்டு எல்லோரும் அஞ்சுகின்றனர். அந்நிறம் நீங்கி மிகுந்த அழகுடன் கூடிய ஒரு நிறத்தினைத் தந்தருளவேண்டுமென இறங்கிக் கேட்டுக்கொள்ள பெருமான் கருணைகூர்ந்து பெண்ணே! திருக்காளத்தியில் வாயுதிசையில் ஒருமலையிருந்துகொண்டிருக்கிறது. அம்மலைக்குச் சமீபத்தில் ஒரு தீர்த்தமுண்டாக்கி அதில் ஸ்நானஞ்செய்து நம்மைப் பூசிக்க ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டித்துப் பூசித்துவருவையேல் நீ இச்சித்த வரங்களைத் தருவோமென்றனர். துர்க்கை அங்ஙனமே அதற்கிசைந்து வந்து தனது முசலத்தால் தீர்த்தமுண்டாக்கி ஸ்நானஞ்செய்து வில்வமலர்கொண்டு அநேகநாள் பூசித்துவருகையில் சர்வேஸ்வரன் வாயுலிங்கத்தினின்றும் அம்பாள் சமேதராக வெளிவந்து துர்க்கையே நினது பூசையைப் பிரியமுடன் ஏற்றுக்கொண்டோம். இனி நீ உனது கருமையான நிறத்தினை யொழித்து அதிரூபசௌந்திரிய பசுமை நிறத்தினை யடைந்து கனக துர்க்கையெனப் பெயர்பெற்று உலகமெல்லாம் உன்னிடம் பயமின்றி வந்து உன்னை வணங்கி உன்னால் அனேகமான நல்ல வரங்களைப்பெற்று சுகமாக வாழக்கடவார். நீ தங்கிய இம்மலைக்குக் கனகாசலமெனவும், உன்னால் எடுக்கப்பட்ட தீர்த்தத்திற்கு முசலதீர்த்த மெனவும், நீ பூசித்த இலிங்கத்திற்குத்



துர்க்கேஸ்வர லிங்கமெனவும், ஆவணிமாதம் கிருஷ்ண சம் ரோகணி நட்சத்திரம் அஷ்டமிதிதியில் உன்னை தரிசித்தவர்க்கு அனேகமாகிய சம்பத்தை அளித்திடுவாயெனவும் வேண்டிய வரங்கள் பலவும் ஈந்து வாயுலிங்கத்தில் மறைந்தருளினர்.

---







# முனிவர் சம்வாதச் சருக்கம்.

யாதவமகாராஜனே! ஒருகாலத்தில் நான்முகக்கடவுளாகிய பிரமாவானவர் திருக்கைலாய மடைந்து சிவதரிசனம் செய்து அங்கிருந்த முனிவர் கூட்டங்களிற் சென்று அவர்களை நோக்கி முனிவீர்! மும்மூர்த்திகளுக்குள்ளே சிறந்தவர் யாவரெனக் கேட்டமாத்திரத்தில், அங்கிருந்த பிருகுமுனிவர் நாராயணனே பரப்பிரமம் அவனே எல்லாரினும் மிகச் சிறந்தவன் என்றனர். உடனே அகத்தியர் எழுந்து, பிருகு முனியே! நீ சிறிதும்பாராமல் யாது கூறினை. வேதத்தினுட்பொருளை அறிந்தாயில்லை. நீ கூறிய நாராயணனுஞ் சிறந்தவன், சிவபெருமானே அவனினும் மேற்பட்ட தெய்வம் கிடையாது என்றனர். இருவரும் நெடுநேரம் வாதஞ்செய்து பின்னர் எந்ததேவனை பூசித்தால் சர்வ பூச்சியத்துவம் அடையலாமோ அத்தகையமூர்த்தியே மிகப் பெரிய னெனத் தீர்மானிப்போமெனச் சபதம் செய்துக்கொண்டு இருவரும் தமதிருப்பிடம் விட்டேகினர். பிறகு உடனே சென்று விஷ்ணுமூர்த்தியை நோக்கித் தவம்செய்ய அந்நாராயணர் பிருகுவின் முன்னர் வந்து என்ன வேண்டுமெனக் கேட்க அச்சுதமூர்த்தியே! கைலையில் அகத்தியருடன் மாறுகொண்டு உன்னையே மும்மூர்த்திகளில்

சிறந்தவனெனக்கூறி உன்னால் சர்பூச்சியத்துவமடைய எண்ணி உன்னைத் தியானித்தேனென்ன, விஷ்ணு பிருகுமுனியே! நீ என்ன பேதையாயிருக்கின்றனை. தட்சயாகத்தில் சிவபாரதம் செய்ததால் வீரபத்திர மூர்த்திரமூர்த்தியால் உனது தாடியும் மீசையும் இழந்துவிட்டதனை மறந்தனையோ எனக்கூறி வைகுண்டம் சென்றனர். பிருகு இருப்பிடம் சென்றனர். அகத்தியர் திருக்காளத்தியடைந்து வாயுலிங்கேசனைப் பூசித்துச் சமீபத்திலுள்ள சித்திரபுரத்தில் சுயம்புலிங்கேசனைக் கண்டு சித்தசுத்தியுடன் பூசித்து அதற்கு மேற்குத் திசையில் ஒரு தீர்த்தமுண்டாக்கி ஸ்நானஞ் செய்து நூறு வருடந் தவஞ்செய்து கொண்டிருக்க தேவேந்திரனது ஏவலால் ஊர்வசி முதலிய அரம்பாஸ்திரீகள் அவ்விடம் வந்து தவத்தினுக்கு இடையூறு செய்ய, அகத்தியர் பைரவரைத் தியானித்து அழைப்பித்து அவரைப் பூசித்து அவருக்கு விக்கினகரன் எனவும், சம்போகன பைரவன் என்னும் பெயர்கள் மூட்டிக் காவல்வைத்து, பஞ்சாக்கினி மத்தியில் அநேகநாள் தவஞ் செய்யக் கருணாநிதியாகிய கண்ணுதல்மூர்த்தி சுயம்புலிங்கத்தினின்றும் வெளிவர, அகத்தியர் கண்டு தோத்திரம் புரிந்து,ஐயனே! எல்லா தேவரினும் மேம்பட்ட தன்மையினையும், பிரமாதி தேவர்கட்கும் உபதேசிக்கத்தகுந்த ஞானத்தினையும், பிருகு முனிவனுடன் வார்த்தையாடியதா லுண்டாகிய பாவத்தினைப் போக்கவும், வாக்குச் சித்தியும், நினது பாதாரவிந்த பக்தியும், நான் பிரதிஷ்டித்த பைரவர் எக்காலத்தும் இந்த ஞானப்பிரகாசத் தீர்த்தக் கரையிலிருக்கவும், இதில் ஸ்நானம் செய்வோர் சகல சித்திகளையடையவும், இத்தலத்திற்கு அகத்திய க்ஷேத்திரமென வழங்கவும், மாசி மாதம் சுக்கில பட்சம் சதுர்த்தசி யன்று இத் தீர்த்தத்தில் மூழ்குவோர் சர்வா பீஷ்ட சித்திகளை யடையவும், தேவரீர் சகலாகமமறை நாயகேஸ்வரரெனப் பெயர்பெற்று விளங்கிடவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள, அங்ஙனமே கிருபை பாலித்துச் சுவாமி அந்தர்த்தானமாயினர்.

முனிவர் சம்வாதச் சருக்கம் முற்றிற்று.

---









# பேதாபேதவாதச் சருக்கம்.

---

யாதவ மகாராஜனே! ஒருகாலத்தில் சனர்குமாரர், பராசரர், சுகர் மூவரும் காசிதலத்தை நாடி கங்கையில் முழுகி விசுவேசரைத் தரிசிக்க வேண்டுமென்று செல்லுகையில், சிவத்திற்கும் சத்திக்கும் பேதமுண்டோ இல்லையோவென வாதமுண்டாயிற்று. சனர்குமார முனிவர் பேதமில்லையென்றனர். சுகர் பேதமுண்டென்றனர். பராசரர் ஒன்றுந் தோன்றாது மௌனமா யிருந்தனர். பின்னர் மூவரும் காசித்தலமடைந்து அவ்விடமிருந்த முனிவர் பலரைக் கேட்க அவர்கள் ஒன்றும் கூறாது இருந்தனர். அச்சபையில் சனர்குமார முனிவரும் சுகரும் அநேகமாகச் சாஸ்திரவாதம் செய்ய ஆரம்பித்தனர். இங்ஙனம் செய்துக்கொண்டிருக்கையில் பிரமாவானவர்

விசுவநாதனைத் தரிசனம் செய்யும்பொருட்டுக் காசியினை யடைகையில் முனிவர்கள் அவரைக்கண்டு தங்கள் வாதத்தை வெளிப்படுத்தினர். நான்முகக்கடவுள் முனிவரர்களே! நீங்கள் என்னதீய காரியத்திற்பிரவேசித்தீர்கள். இது உங்கட்குச்சிறிதுந் தக்கதன்று. இத்தகைய பேத அபேத வாதம் பிரஸ்தாபிக்கத் தக்கதன்று. எவர்கள் பேதம் சாதிக்கின்றனரோ அவர்கள் எக்காலத்தும் பிறவிக்கடலை நீந்தி முத்தியங்கரையிற் சேரவே மாட்டார்கள். அபேதமுடையவரே எக்காலத்தும் அழியப்பெறாத நித்தியானந்த சுக வாழ்வை யடைதற்குப் பாத்திரராவரென வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இச்சுகமுதலானவர்கட்கு ஞானமில்லாததற்குக் காரணம் சொல்லுகிறேன் கேட்பீராகவெனச் சாண்டில் யோபாக்கியானத்தைச் சொல்ல ஆரம்பித்தனர். பூர்வத்தில் சூரியக்கிரகண புண்ணியகாலத்தும் வியாசர், சக்தி, பராசரர் முதலானவர்கள் குருக்ஷேத்திரத்தில் ஸ்நானஞ்செய்யச் சென்று தவம் முதலிய முடித்து வேதாந்த விசாரம் செய்துக்கொண்டிருக்கையில், அவ்விடத்தில் சர்வ சாஸ்திரங்களிலும் வல்ல மிகச் செருக்கடைந்த சாண்டில்யர் வந்தனர். அப்போது அவர் துவைதமதம் ஆரம்பித்துப் பேசச் சத்தியஞ்ஞர் பலப்பிரகாரம் தடுத்தும் அவர் விதண்டாவாதமாகப் பேசுவதனால் அது சகியாது சத்தியஞ்ஞர் சிவசிவென இரண்டு கரங்களையும் செவிகளிற் பொத்திக்கொண்டு அப்புறஞ் சென்றனர். இதுகண்டு மூவரும் இவர் வாதம் செய்வதற்கு முடியாது பதுங்கி விட்டனரெனப் பரிகாசம் செய்தனர். அதனால், அம்மூவரும் பாவவசத்தராகி, இக்காசிக்கு நூற்றுத் தொண்ணூற்றைந்து யோசனை தூரத்திலுள்ள சிவானந்த நிலயமென்னும் கைலையை யடைந்து காளத்திநாதனைப் பூசித்து வருகையில் சித்திரைமாதம் சுக்கிலபட்சம், தசமிதிதி, பானுவாரம், தென்முகத்தெய்வமாகிய தட்சணாமூர்த்தியானவர் ஒருகரத்திற் சிவஞானபோதமும், மற்றொருகரத்திற் சின்முத்திரையுங் கொண்டு பிரத்தியட்சமாகிய பேதாபேதத்தன்மையை நன்கு எடுத்துவிளக்கி,பேதபுத்தியாலுண்டாகும் தீமைகளையும் அபேதபுத்தியாலுண்டாகும் நன்மைகளையும் சாஸ்திரோக்தமாய்ப் போதித்தனர். அம்முனிவர்கள் உண்மை தேர்ந்து தட்சணாமூர்த்தியைப் பலதரம் வணங்கி எக்காலத்தும் இத்தலத்திலேயே யெழுந்தருளி,வணங்கினோர் யாவருக்கும் கிருபை பாலித்தருள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு தங்களிருப்பிடம் சென்றனர் என்று கூற பிரமாவின் வார்த்தைகளைக் கேட்ட சனற்குமாரரும் பராசரரும் சுகரும் சந்தேகம் தெளிந்து அபேதமாகப் பரமசிவனைத் தியானித்து வந்தனர்.

பேதாபேத வாதச் சருக்கம் முற்றிற்று.

---





## தாளவிருட்சச் சருக்கம்.

யாதவமகாராஜனே! மகா கைலாயத்திலே ஏகாந்தமாகப் பார்வதியும் பரமேஸ்வரனும் திருவோலக்கங்கொண் டெழுந்தருளியிருக்கையில் அம்பாள் சுவாமியை வணங்கி, நாயகரே! மோட்ச விதாயகமாக விளங்கும் மகாமந்திரத்தினை எனக்குப் போதிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ள, பெருமான் இசைந்து சைவாஷ்டாட்சர மந்திரத்தினைப் போதித்து இதனை யாவருக்குந் தெரிவிக்கவேண்டியதில்லை. அதி ரகசியமானது. ஒருவருக்குந் தெரியாதென்று திருவாய் மலர்ந்தருளினர். அப்போது அவர்கட்குச் சமீபத்தில் மறைவாயிருந்த அரிவக்த்ரகதாகேது என்னும் இரு பிரதமகணநாதர்கள் கேட்டிருந்து சென்று தங்கள் மனைவிமார்களாகிய மாலினி சித்திரிகை என்பவர்கட்குச் சொல்லினர். அப்பெண்கள் பார்வதியாரை அடுத்துத் தாங்கள் தெரிந்து கொண்ட மந்திரத்தைச் சொல்லினர். அம்பாள் கேட்டுச் சுவாமியை அடைந்து, சுவாமி! எனக்குபதேசித்த மந்திரம் யாருக்குந் தெரியாதெனச் சொல்லியிருந்தீரே. இப்பெண்கள் தெரிந்துகொண்டிருப்பதற்குக் காரணமென்னவென, பரமசிவன் உண்மையை அறிந்துகொண்டு அப் பிரதம கணநாயகர்களை அழைப்பித்து நாம் பார்வதியாருக்குப் போதித்த மந்திரத்தைக் களவாகக் கிரகித்தமையால் நீங்கள் அசுரர்களாகக் கடவீரெனச் சபிக்க, அவர்கள் மிகவும் வணங்கி

வேண்டிக்கொள்ள சுவாமி, கணங்களே இரண்டுதரம் அசுரர்களாகப் பிறந்து கடைசியாக பூதிமாஷன் முனிவனால் சாபமடைந்து பனை மரங்களாகிக் காளத்தியில் வாயுலிங்கத்திற்கு ஈசானதிசையில் சில காலமிருந்து பின் கைலையடைவீர்களாக வென்றனர். அப்படியே சூரபதுமன் என்னும் அசுரன் தங்கையாகிய அஜமுகிக்கும் துரு வாசருக்கும் பிள்ளைகளாய்ப் பிறந்து வில்லவன் வாதாபி என்றபெய ருடன் காட்டில் சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் அவர்கள்செய்த வஞ்சத்தால் அகத்தியர் கோபங்கொண்டு இவர்களைக் கொன்றுவிட, மறுபடியும் சமராட்சசி பஞ்சமேட்டிரன் என்னுமிருவருக்கும் பிறந்து இருவரும் ஒருவன் இரத்தத்தினையும் ஒருவன் கள்ளினையும் குடித்துக் கொண்டிருந்தமையின் இரத்தபன் மத்திபன் என்னும் பெயர்களைவாய்ந்து அங்கு மிங்கும் திரிந்து கொண்டிருக்கையில் மதுரையை யடைந்து அங்குத் தவஞ்செய்து கொண்டிருக்கிற பூதி மாஷ முனிவருக்குச் சமீபிக்க அவர் இவர்களை நோக்கி அன்பர் களே! எனக்குத் தாகமதிகரித்து இருக்கின்றது. சிறிது ஜலம் கொண்டு வாருங்கள் என, அதற்கவர்கள் இசைந்து வஞ்சகமாகக் கள்ளினைக்கொடுக்க அவரது தெரியாது உண்டுபின்பு தெளிந்து ஆ! பாவிகாள்! நீர் என்னகாரியஞ்செய்தீர்! என்தவத்தைக் கெடுக்க வந்த அசுரர்களானீர், நீங்கள் கள்ளினைக் கொடுத்தமையின், அக் கள்ளின இறக்கும் இரண்டு பனைமரங்களாக இத்தலத்தின் ஈசான திசையில் முப்பதுகாத தூரத்திலுள்ள திருக்காளத்தியில் வாயு லிங்கத்திற்கு ஈசான திசையில் முளைத்திருந்து, இக்கலியுகத்தில இரண்டாம்பாதத்தில் உங்களைவெட்டி என்றைக்குக் காளத்தி நாதன் சந்நிதானத்தில் கார்த்திகைத் தீபத்தன்று நட்டுக்கொளுத்து கின்றனரோ அன்றையதினம் மோட்சமடையக் கடவீர்களெனச் சபித்தனர். அவர்கள் இருவரும் இன்றும் ஆலயத்தில் தாளவிருட் சங்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றனர்.

தாளவிருட்சச் சருக்கம் முற்றிற்று.

---



பார்வதிபதயேநம:

# தீர்த்த சருக்கங்கள்.

## சஹஸ்த்ர தேவதா தீர்த்தம்.



யயாதி மகாராஜனே! சர்வலோக கர்த்தாவாகிய சாம்ப சிவ னும், சர்வலோக தாயாகிய சாம்பவியும் ஒரு காலத்தில் சர்வலோக சஞ்சாரஞ்செய்து வருகையில் மேருவினை யடைந்து பார்க்கையில் அவ்விடத்தில் தேவர்களும் அசுரர்களும் பெரும்போர் புரிய அசு ரர்களால் தேவர்கள்தோற்று ஓடுவதைக்கண்ட பாாவதியார் கண்டு சுவாமி! இங்ஙனம் இராட்சதர்களால் அடியுண்டு தேவர்கள் ஓடு வதற்குக் காரணமென்ன வென்றுகேட்க பரமேஸ்வரன் பெண்ணே தேவர்கள் அடிக்கடி ஜெயங்கொள்ளும்போதெல்லாம் நமது அனுக் கிரகத்தால் ஜெயிக்கிறோமென்று சிறிதும் நினையாமல்தங்கள் சாமர்த் தியத்தா லென்று அகங்காரங் கொண்டிருக்கின்றாராகையால் இங் ஙனம் செய்வித்தோமென, அம்பாள் மிகவணங்கி ஐயனே! துஷ்டர் களுக்கு அனுக்கிரகம்புரிதல் கூடாது, தேவர்கட்குக்கிருபைபாலிக்க வேண்டுமெனக்கூற கண்ணுதல் அங்ஙனமே கிருபாநோக்கம் வைக் கத்தேவர்கள் ஜெயங்கொண்டு இறுமாந்து தங்களுக்குள்ளே யாவர் ஜெயித்தவரெனக் கலகஞ்செய்ய ஆரம்பித்தனர். அப்போதுசுவாமி யின் இச்சாசக்தி ஒரு வடிவங்கொண்டு வெளிவந்து அவர்கள் முன்சென்றுதேவர்களே! நீங்கள் திருக்காளத்தி யடைந்து பொன் முகரியில் ஸ்நானம்செய்து, வாயுலிங்கேசனைப் பூசித்து, அதற்குத் தட்சணதிசையில் மூன்று கடிகை தூரத்தில் உள்ள மலையில் மயூரே சனுக்குச்சமீபத்தில் ஒரு சிவலிங்கத்தினைப் பிரதிஷ்டித்துப் பூசித்து வருவீரேல் உங்கள் கலகம் நீங்குவதற்குஏதுண்டாகு மென்று கூறி மறைந்தனர். அவர்கள் அதற்கிசைந்து அவ்விடம் செல்லுமுன் சுவாமி அவ்விடத்திலுள்ள ஒரு குகையில் மறைந்திருந்தனர். தேவர்கள் வந்து தங்கள் தங்கள் பெயரால் ஒவ்வொருலிங்கம் ஸ்தா பித்து, அக்குகைக்குச் சமீபத்தில் ஒரு தீர்த்தமுண்டாகிப் பத்து

லட்சம் வில்வங்கொண்டு ஆயிரம்வருடம் பூசித்துவந்தனர். அப்போ
துக்குகையிலிருந்த பெருமான் யட்சவடிவங்கொண்டு வெளிவந்து
அவர்கள் முன்னின்று நீங்கள் ஏன் தவஞ் செய்கின்றீ ரெனக்
கேட்க, தேவர்கள் யாட்சுவை நோக்கி இவன் நமது தவத்தைக்
கெடுக்கவந்த அசுரவேட மென்றெண்ணி இவ்விடம்விட்டு அசுர
வேட மென்றெண்ணி அப்புரம் உடனே போகக்கடவாய் என்று
சொல்ல, ஏ தேவர்களே ஒரு அதிதிவரின் தாங்கள் அவருக்கு மரி
யாதைசெய்து ஏற்றுக்கொள்ளாமல் இங்ஙனம் புறக்கணிப்பது அழ
காகுமோ! என்னைச் செயிக்கத்தான் உம்மால் முடியுமோ! உங்கட்
குச் சாமர்த்திய மிருந்தால் நீங்களெல்லோரும் அறைகடிகைத்
தூரத்திற்சென்று ஒவ்வொருவராக இவ்விடம் வாருங்கள் உங்
களுடைய சாமர்த்தியனைக் காண்கின்றேனென்ன, தேவர்கள் அதற்
கிசைந்து சென்று அக்கினியும் வாயுவும் முன்னே வந்தார்கள். அவர்
கட்கு முன்னே யட்சக ஒரு துரும்பினை நட்டு இதனை நீங்கள் இரு
வரும் கொளுத்தியாவது அசைத்தாவதுவிடும், பார்ப்போமென
உடனே அவர்கள் தங்கள் சாமர்த்திய மனைத்தையுங்காட்ட அவர்
களால் ஒன்றும் சேதப்படாமல் அத்துரும்பு இருக்க வெட்க
மடைந்து விஷ்னுவி னிடத்திற்போய்ச் சொல்ல, அவர் வந்து
தனது சக்கராயுதத்தை அதன்மேல் பிரயோகிக்க அச்சகரம்
இரண்டு துண்டாய்ப் பிளந்துவிட நாணமடைந்து தேவர்கள்
ஒருங்குகூடி யாலோசிக்கையில் யட்சசு மறைந்துவிட்டனர். தேவர்
கள் குகையிற் புகுந்து அம்பாளைத் தரிசித்துத் தாயே! இங்கு வந்து
எங்களை அவமானம் செய்த இரட்சசு யாவரென்று கேட்க பார்வதி
தேவரே அவர்தான் சர்வாண்ட பிண்டங்கட்கும் தலைவராக விளங்
கும் சிவபெருமான். அவர் அனுக்கிரகத்தால் நீங்கள் வெற்றி
யடைந்ததை மறந்து அகங்காரங் கொண்டீர்களாகலின் இங்ஙனம்
வந்து உங்கள் இறுமாப்பையடக்கினர். அவரைத்தொழுது நீவிர்
உங்கள் பாவத்தை யொழித்துக் கொள்ளுங்களென அத்தட்சணம்
பரமேஸ்வரனை நோக்கிப் பலவாறுதோத்திரம் செய்தனர். சாம்ப
சிவனார் மாசிமாதம் கிருஷ்ணபட்சம், சுக்கிரவாரம், திரயோதசித்
திதி, வெளிவந்து காட்சிக்கொடுக்க, தேவர்கள் பலதரம் பணிந்து
கைகுவித்து, எங்களை யாட்கொள்ளவந்த ஐயனே நாங்கள் கர்வித்
ததனால் உண்டாகிய பாவம் எங்களைவிட்டு ஒழியக்கடவது, இனி
எக்காலத்தும் இத்தகைய இறுமாப்பு எங்கட்கு உண்டாகாம லிருக்
கக்கடவது, நாங்கள் பூசித்த இந்த லிங்கத்திற்குச் சகஸ்த்திர தேவ
லிங்கேஸ்வரர் எனப் பெயர் வழங்கக்கடவது, நாங்கள் எடுத்த
தீர்த்தம் சகஸ்திர தேவதீர்த்தமென விளங்கவேண்டியது. இத்
தீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி யும்மைச் பூசிப்போர் சிவசாயுச்சிய
மடைய வேண்டும். அவர்கட்கு அபஜெய முண்டாகா திருக்கவேண்
டும். தேவரீர் மறைந்த குகை யட்சகுகை யெனவும், சதா சிவ



குகை யெனவும் பேரடைதல் வேண்டும். பிரதிவருடம் இந்நாளில்
வந்து உனைப் பூசிப்போர்கள் சகல சாம்பிராச்சியங்களைப் பெறக்
கடவது என்று கேட்டுக்கொள்ள அவ்வரங்களை எல்லாமளித்து
எழுந்தருளி விட்டனர்.

சகஸ்த்ரதேவதீர்த்தம்-முற்றிற்று.

# மார்க்கண்டேய தீர்த்தம்.

யயாதி மகாராஜனே! மார்க்கண்டேய முனிவரானவர் ஒரு நாள்
பிரதோஷ சமயத்தில் தரிசனஞ் செய்யும்பொருட்டுக் கேதார
மடைந்தபோது அவ்விடத்தில் கபந்தர், கௌதமர், கண்ணுவர்,
பரத்துவாசர், அசிதர், முதலியோரைக் கண்டு அவர்களுடன் தானு
மிருந்து எத்தேவர் மோட்சங்கொடுக்கத் தகுந்தவரெனத் தத்துவ
விசாரஞ் செய்கையில் ஒருவன் விஷ்ணுவென்றும், ஒருவர் பிர்மா
வென்றும், ஒருவர் உத்திரரென்றும், ஒருவர் இந்திரனென்றும், பல
வாறு கூறினர். மார்க்கண்டேயர் கேட்டுச் சந்தேகங்கொண்டு அகத்
தியரிடம் சென்று கேட்க அவர், மார்க்கண்டேயரே நீர் தெற்கே
சென்று திருக்காளத்தி யடைந்து, அதற்குத் தென்திசையில் மங்
களாயன தீர்த்தக் கரையில் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டித்துப் பூசிப்
பையேல் உண்மை வெளிப்படு மெனக்கூறக் கேட்டு அங்ஙனமே
சென்று பூசித்து வருகையில் தனுர் மாதம் சோமவாரம் மகாசுத்த
பாட்டியமியன்று அம்பாசமேதராய்ச் சிவபெருமான் காட்சி தந்
தருளுதலும், மார்க்கண்டேயர் எழுந்து வணங்கி ஐயனே கேதாரத்
தில் முனிவர்கட்குத் தாங்கள் தாங்கள் ஒரு தேவனைச்சொல்லி
அவனாலேயே முத்தி யுண்டாமென்று சாதித்தனர். அதனுண்மை
யைத் தேவரீர் கட்டளையிட்டருள வேண்டுமென்ன சுவாமி முனி
வனே தன்னைப் பெற்றவன் உபநயனம் செய்தவன் வித்தைசொல்லி
வைத்தவன் அன்னம் படைத்தவன் ஆபத்தை நீங்கினவன் இவ்
வைந்து பேர்களும் குருவெனப் படுவர் இவருள் அன்னம் படைத்
தவன் சாமான்ய தேவருக்குச் சமானமானவன் தன்னைப் பெற்
றவன் விஷ்ணுவுக்குச் சமானமானவன் வித்தை கற்பித்தவன்
பிர்மாவிற்குச் சமானமானவனாவான். ஆபத்து நின்று நீக்கினவன்
எனக்குச் சமானமானவனாவான். உலகில் பந்தப்பட்டுச் சமுசார
சாகரத்தில் தவிக்கின்ற ஆபத்தினின்றும் நீங்குவதே மேலான தரு
மம் இங்ஙனம் நீங்கப்பெற்றவவர்களே மோட்ச சாம்பிராச்சியத்தினை
யடைவர் என்னும் உண்மையைத் தேருவாயாக. இந்தச் சத்திய
வார்த்தையைச் சாந்தோக்கிய உபநிடதத்திற் காண்க என்றனர்.
மார்க்கண்டேயர் உண்மை தெரிந்துகொண்டு, அப்பனே! சந்தேகம்

நீங்கியது, நான் இவ்விடத்தில் பூசித்த சிவலிங்கத்திற்கு மார்க்கண்டேஸ்வர லிங்கமெனவும், நான் ஸ்நானம்செய்த தீர்த்தத்திற்கு மார்க்கண்டேய தீர்த்த மெனவும் அதில் பிரதி மாதம் கிருஷ்ணபட்சம் திரயோதசியில் ஸ்நானம் செய்தோர் மோட்ச மடைய வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர். அங்ஙனமே வரமருளி வாயுலிங்கத்தில் மறை தெழுந்தருளினர்.

மார்க்கண்டேயர் தீர்த்தம் முற்றிற்று.

---

# வேத தீர்த்தம்.

---

யாதவமகாராஜனே! சுமேதகன் என்னு முனிவரானவர் அப்பிராகிருத கைலாயதரிசனஞ் செய்ய வெண்ணி, தட்சண கைலாசமடைந்து அதற்கு நிருதி திக்கில் ஒன்றரை காதத்தில் ஒரு தீர்த்த முண்டாக்கிப் பூசித்து வந்தனர். சாம்பசிவப் பெருமான் ஒரு நாள் பிரத்தியட்சமாகி அப்பிராகிருத கைலாய தரிசனம் அம்முனிவருக்குத் தந்து அத்தீர்த்தத்தில் பிரணவத்தினையே ஒரு தாமரையாக உண்டாக்கி அதினின்றும் அகார உகார மகாரங்கள் மூன்று தாமரைகளாக உண்டாக்க அவைகளைக்கொண்டு பரமேஸ்வரனை யருச்சித்து வித்யாபீடத்திலிருக்கும் குமாரசுவாமியிடத்து உபதேசம் பெற்று வேறு லிங்கமொன்று தன்பெயராற் பிரதிட்டித்துத் தவஞ் செய்து வருகையில், சித்திரசேனனென்னும் இராக்கதனுடைய வேலையாள் ஒருவன்வந்து அந்தத் தாமரையை யெடுக்க அத்தாமரை சலத்தில் மூழ்கிவிட்டது. அது தெரிந்த நாரதர் பரசுராமரிடம் சென்று தெரிவித்து அழைத்து வந்து அசுரர்களைக் கொல்லுவித்துச் சென்றனர். பரசுராமர் காளத்திப் பருவதத்திற்குப் பச்சிம திசையில் ஒருசிவாலயம் கட்டி அதில் இலிங்கந் தாபித்துப் பூசித்து வருகையில், சிவபெருமான் பிரசன்னமாகப் பரசுராமன் எழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் புரிந்து ஐயனே! நான் பூசித்த லிங்கத்திற்குப் பரசுராமேஸ்வரனெனவும், தாமரைபூத்த தடாகத்திற்கு வேத தீர்த்தமெனவும், வழங்கவேண்டுமென வேண்டிக்கொள்ள அதற்கிசைந்து அந்தர்த்தானமாயினர். (மலையடிவாரத்தில் உள்ள அந்தயிடத்திற்கு இப்போது குடிபல்லவென வழங்குகிறது.)

தேவதீர்த்தம் முற்றிற்று.

---

# இராம தீர்த்தம்

---

யயாதிமகாராஜனே! தசரதபுத்திரனாகிய இராமன் சீதையைப் பிரிந்து வனசஞ்சாரஞ் செய்து கொண்டிருக்கையில் அகத்திய முனிவரைக் கண்டு தனது பரிதாப நிலைமை விஞ்ஞாபனஞ் செய்ய, அகத்தியர் இராமனே! ஐம்பதுலட்சம் ஆயுளைப்பெற்ற இராவணனை எங்ஙனம் செயிக்கப்போகின்றனை. ஆயினும் இவ்விலிங்கத்தினை நீ கொண்டு போய் தட்சண கைலாசத்தில் தாபித்துப் பூசிப்பையேல் சிவானுக்கிரகத்தால் அவ்வசுரனைச் செயிப்பாயென்று பஞ்சாட்சர உபதேசம் செய்து அனுப்பிவைத்தனர். இராமன் அங்ஙனமே திருக்காளத்தி யடைந்து சிவலிங்கத்தினைப் பிரதிஷ்டித்து மூன்று மாதம் பஞ்சாட்சர மந்திரத்தினைச் செபித்து வருகையில் காளத்தி நாதர் வாயுலிங்கத்தினின்றும் வெளிவந்து இராமனைநோக்கி யன்பனே! உன்பூசைக்கு மகிழ்ந்தோமென்று இரௌத்திராஸ்தர மந்திரத்தினைப் போதித்து இராவணனைச் செயித்துவரும்படி ஆசீர்வாதம் செய்து அனுப்பிவைத்தனர். அங்ஙனமே சென்று அனுமன், சுக்கிரீவன் முதலிய வானர வீர சேனைகளை உதவியாகக் கொண்டு இராவணனைச் செயித்துச் சீதையை மீட்டுக்கொண்டு அசுரனைக் கொன்றதனால் நேர்ந்த பிரமஹத்தியை யொழிக்க இராம லிங்கம் சேதுவில் தாபித்துப் பூசித்துப் புஷ்பவிமான மேறிவந்து திரும்பித் திருக்காளத்தி யடைந்து வாயுலிங்கத்தினைப் பூசித்து, வித்தியாபருவதத்திற்குப் பச்சிமதிசையில் இலட்சுமி தீர்த்தத்திற்கு உத்தரத்தில் பொன்முகரிக் கரையில் இராமதீர்த்த முண்டாக்கிக் குமாரக் கடவுளை வணங்கி, ஐந்துவருடம் அவ்விடம் வசித்து வருகையில், கார்த்திகைமாதம், சுக்கிலபட்சம், ஆதிவாரம் கிருத்திகை துவாதசி யன்று சண்முகக்கடவுள் பிரத்தியட்சமாகி இராமனே! நாலைந்து நாளைக்குள் உனக்கு இராஜ்ய பட்டாபிஷேக நடக்குமெனக் கூற இராமர் ஐயனே நான் இராச்சியத்தில் விரக்தி யடைந் துள்ளேன் எனக்குத் தத்துவோபதேசம் செய்தருள வேண்டுமென சுவாமி சிவ தத்துவ உபதேசமும், ஜெகோற்பத்தி யுபதேசமும் செய்ய, அது உணர்ந்து அந்தத்தலத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யவேண்டு மெனக் கேட்க, முருகக்கடவுள் இம் மலைக்கு நிருதி திசையில் ஐந்து கடிகைத் தூரத்தில் வன்மீகக்ஷேத்திரத்தில் செய்யக் கட்டளையிட, அங்ஙனமே செய்து திரும்பிச் சுப்பிரமணியரை வணங்கிப் பெருமானே நான் பிரதிஷ்டித்த இராம தீர்த்தத்தில் மார்கழிமாதம் துவாதசியில் ஸ்நாநம் பண்ணி நான்

பூசைசெய்த கோதண்டராமேஸ்வரரை வணங்கின் அஞ்ஞானம் விலகி ஞானம்பெற வேண்டுமென உத்தரவு பெற்று அயோத்திக்குச் சென்றனர். (இந்நாட்டிற்கு இப்போது தொண்டமாநாடு என வழங்குகிறது.)

இராம தீர்த்தம் முற்றிற்று

---

# சக்கர தீர்த்தம்.

---

யயாதிமகாராஜனே! தேவர்கட்கெல்லாம் பெருந் துன்பத்தினை விளைத்து வந்த சலந்தராசுரனைக் கொல்லும்படி சிவபெருமானை நோக்கி விஷ்ணுவானவர் தவஞ் செய்ய, சாம்பசிவன் தனது காற்பெரு விரலினால் ஒரு சக்கரத்தினை யுண்டாக்கித் தர அதனைப் பெற்று அவ்வசுரனைச் சங்கரித்து வைகுண்டத்தினை யடைந்து தனது பராக்கிரமத்தினை இலட்சுமிக்குச் சொல்லிக் கொண்டிருக்கையில், சுதரிசனமென்னுஞ் சக்கரம் கலீரெனச் சிரித்து, ஐயா சலந்தரானசுரனை தான்சங்கரித்திருக்க நீர் செயித்தாய்ப் பெண்பிள்ளையினிடத்தில் சொல்லிமகிழ்வது தகுதியாமோவென, விஷ்ணுவானவர் வெட்கிக் கைலையடைந்து கண்ணுதற்கடவுளிடத்துக் கூறலும் அவர்சக்கரத்தின்மீது கோபிக்க அது தனது தேஜசினையிழந்து பயந்து சுவாமியினை வணங்கப் பெருமான் திருக்காளத்தியினை யடைந்து நம்மைப் பூசித்துப் பழையதேஜசினைப் பெறுவாயென, அங்ஙனமே சுதரிசனம் தென்கைலாய மடைந்து கனகதுர்க்கை மலைக்குக்கிழக்கில் ஒரு தீர்த்த மெடுத்துச் சிவலிங்கமொன்றுபிரதிஷ்டித்து நூறு வருடம் பூசித்து வருகையில் சித்திரை மாதம், சுக்கிலபட்சம், கிருத்திகை நட்சத்திரம் சோமவாரம் பஞ்சமி திதியன்று பிரசன்னராகி, சுதரிசனமே! நீ யகங்கரித்த பாவமொழியப் பெற்றனை, பழயபடி தேஜசுடன் விளங்கக் கடவாய்! நீபூசித்த சிவலிங்கத்திற்கு திரிகண்டேஸ்வரரென வழங்கவேண்டும், நீ எடுத்த தீர்த்தத்திற்குச் சக்கரதீர்த்தப் பெயர் உண்டாகவென்று பல வரங்களையீந்து பரமன் வாயுலிங்கத்தில் மறைந்தருளினர்.

சக்கரதீர்த்தம் முற்றிற்று.

---

# சக்தி தீர்த்தம்.

---

யயாதிமகாராஜனே! கற்க கோத்திரத்திலே, பிராமண குலத்திலே, இலிங்கதாசன முடையவனாய் நந்தியென்னும் பெயருடைய ஒருவனிருந்தான். இவன் வீரசைவரை யன்றி, மற்றச் சமயத்தாருடன் பேசாதவனாய், வீரசைவருக்கே வேண்டிய திரவியம் உபகரிப்பவனாய் வாழ்ந்து வந்தான். இவனொருநாள் தனது மனைவி ஜெபமாலை யென்பவளுடனும் பந்துக்களுடனும் திருக்காளத்தி யடைந்து அதற்குப் பச்சிம திசையில் ஏழுகாத தூரத்திலுள்ள வொரு மலையினை யடைந்து, அவ்விடமே வாழ்ந்து, தனது கண்டத்திலுள்ள சிவலிங்கத்தினை யாராதினை செய்துகொண்டு வந்து கொண்டிருக்கையில் தனக்குச் சுரம்கண்டு தனது உயிர் விடும் சமயத்தில் மனைவியைக் கூப்பிட்டுப் பெண்ணே! நீ எனது லிங்கத்தையும் நீயே தரித்துக்கொண்டு சிவபத்தியும் சிவபூசையும் வீரசைவ மகேசுர பூசையும் தவறாது செய்துவந்து மோட்ச மடையக் கடவா யென்று கூறி சிவலோகம் சேர்ந்தனன். ஜெபமாலையும் தனது கணவன் கட்டளைப்படியே நடந்து தன் வீட்டிற்குச் சமீபத்தில் கமலங்கணிறைந்த வொரு கூர்மதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து அத்தீர்த்தத்தால் அபிஷேகம் செய்து, கார்த்திகைமாதம் கிருத்திகை நட்சத்திர மன்று குமாரக் கடவுளைப் பூசித்து வீரசைவர் அனேகருக்கு அன்னம் படைக்கையில், குமாரக்கடவுள் ஒரு யௌவன வீரசைவ கோலங்கொண்டு தன்முன் வந்த அவரைப்பார்த்து, இவர் நம்மை மயக்க வந்தவர்போலிருக்கின்றது ஆயினுமிவர் வீர சைவராயிருத்தலின் இருவருக்கும் அன்னம் படைப்போமென வழைத்து வந்து வெகு உபசாரம் செய்து போஜன மளிக்க அவர் சந்தோஷித்துப் பிரசன்னமாகித் தனது வேலாயுதத்தால் அவ்வம்மையார் வீட்டிற்குச் சமீபத்தில் மலையின்மீது நோக்கிக்குத்த, அதிலிருந்து ஆகாயகங்கை வெளிவர அதற்குச்சக்திதீர்த்தமெனவும் இது உத்தராயணத்தில் விருத்தியாயும், தட்சணாயனத்தில் குறைந்து மிருக்கு மெனவும் அம்மலைக்கு நந்திமலை யெனவும் பெயரளித்தும் மறைந்தனர். மற்றொருநாள் பரமேஸ்வரன் வீரசைவர் வேடங்கொண்டு பிட்சை யெடுப்பவர்போல், அவ்வம்மையார் முன்னேவர ஜெபமாலை அதிக சுடுகையுடன் கூடிய பாயசத்தைக் கரண்டியாலள்ளி அவர்கையில் விட அவர் சூடு பொறுக்கமாட்டாமல் அரிகரியென சொல்லிக் கொண்டே பூமியில் விட்டுவிட ஓகோ! இவர் யாரோ

வேறு சமயத்தவன் நம்மை மோசம் பண்ணவீர சைவ வேடங்கொண்டு வந்தனென் றெண்ணித் தனது கரத்திலிருந்த கரண்டியில் அவர் தலையின்மீது மோதியடித்தனள். அத்தலை ஐந்தாகப்பிளந்து வீழ்ந்து 5 லிங்கமாய் முளைத்தது. ஜெபமாலை கண்டு பயந்து வணங்கி சுவாமி! யான் அறியாது செய்த பிழையை மன்னித்தருள வேண்டுமெனப் பலதரம் வணங்கிக் கேட்டுக்கொண்டனள். சுவாமி! சித்திரை மாதம், இரேவதி நட்சத்திரம், வியாழக்கிழமை, சதுர்த்தசியன்று பிரசன்னமாகி, மாதே! உனது திடபத்திக்கு மிக மகிழ்ந்தோம். உனக்குச் சிவ பத்தி மென்மேலு முண்டாகக் கடவதாக. இந்த லிங்கத்திற்கு உத்தாரகேஸ்வர ரென்று வழங்கக்கடவது. இதனைத் தரிசித்து சக்தி தீர்த்தம் அல்லது ஜெபமாலைதீர்த்தமென்னும் பெயரையுடைய தடாகத்தில் மூழ்குவோருக்குச் சமுசார பந்தம் நீங்கி மோட்சமடையக் கடவாராகவெனப் பலவரமருளி ஒரு விமானத்தின்மீது அவ்வம்மையாரையேற்றித் தன்னுடன் கைலைக்கு அழைத்துக்கொண்டு போயினர்.

சக்தி தீர்த்தம் முற்றிற்று.

---

## மிருதியஞ்சய தீர்த்தம்.

யயாதிமகாராஜனே! இமய பர்வதத்திற்குச் சமீபத்தில் தர்ம விராஜை என்னுமொரு பட்டணமிருந்தது, அதில் மிருத்தியஞ்சயன் என்னுமொரு அரசன் நீதிமானும், தருமவானும், சிவபக்தியுடையவனும் ஆண்டுவந்தான். ஒருநாள் அவன் மத்தியானம் போஜனம் செய்து நித்திரை செய்துகொண்டிருந்தான். அச்சமயம் இரயிக்குவர் என்னும் முனிவர் அவ்வரசன் மாளிகையடைந்து அங்கிருந்த துவார பாலகரைக் கண்டு ஐயன்மீர்! யான் மிகுந்த பசியுடன் வந்திருக்கின்றேன். உங்கள் இராஜனுக்குத் தெரிவித்து எனக்கு அன்னம் படைக்கும்படி சொல்லுங்கள் என்றனர். அவர்கள் கேட்டு அந்தோ! என் செய்வது! அரசனை நித்திரையினின்றும் எழுப்பினால் அவர் கோபித்துக்கொள்வார், அங்ஙனம் செய்யாவிட்டால் முனிவர் சபிப்பார். என் செய்வோமென்று ஏங்குகையில், அரசன் சிறிது நித்திரை தெளிய உள்ளேபோய் சங்கதி தெரிவித்தனர். அரசன் அதிகமாகக் கோபித்து அடா பயல்களே! உங்கள் வேலையைவிட்டு இவ்விடம் வந்தால் உங்களைச் சிரச்சேதம் செய்து



விடுவேன். ஆனாலும் மன்னித்தேன் பழையபடி போயிருப்பீர் பிச்சைக்கு வந்தவனை அனுப்பி விடுங்க ளென்றனர். துவாரபாலகர் பயந்து வெளியோடி வந்து சங்கதியை முனிவருக்குத் தெரிவித்தனர். முனிவர்! அவர்களை நோக்கி உங்கள் இராஜன் தருமானென்று பெயர் வகிக்கினும் மத்தியானத்தில் நித்திரை செய்யுந்தகாத காரியத்தினைச் செய்ததுமன்றி, அதிதியாகிய என்னையும் அலட்சியம்செய்தனன். ஆகையால் அவன் பகைவரால் இராச்சியபார மிழந்து புத்திகெட்டுப் பேயாயாகிப் பன்னிரண்டு வருடம் காட்டில் சஞ்சரித்துப் பின் சிவானுக் கிரகத்தால் பழையபடி தேசமாளுவன் என்று சாபங்கொடுத்துப் போயினன். அரசன் இவற்றையெல்லாம் தெரிந்து தனது புரோகிதரை யழைப்பித்து இத்தகைய சாபம் வந்ததற்குக் காரணமென்ன வென வினவ இராஜசூய யாகம்செய்தவர்கட்குப் பனிரண்டு வருடம்காட்டிற் சஞ்சரிக்கும்படி நேரிடுமெனச் சொல்லிக்கொண் டிருக்கையில், தூதுவர்கள் ஓடோடி வந்து அரசனே! மிலேச்சர்கள் சதுரங்க சேனையுடன் வந்து நமது நகரத்தினை வளைத்துக் கொண்டாரெனவே! பயந்து தனது மனைவி முதலியோரைச் சிறிது திரவியத்துடனே புரோகிதரிடம் ஒப்புவித்து, மறைந்து பேயுருவங்கொண்டு காட்டில் திரிந்துகொண்டிருக்கையில் ஒருநாள் சோழநாட்டிலே காவேரி தீரமடைய அக்காற்றுத் தன்மீது பட்டவுடன் சிறிது அறிவு தெளிந்து ஆச்சரியமுற்று இதென்ன இத்தீர்த்தத்தில் வந்தவுடனே நமக்குத் தெளிவு விளங்குகின்றதேயென்று ஆலோசித்துக் கொண்டிருக்கையில், காவேரியில் ஸ்நானம் செய்யவந்த மார்க்கண்டேய முனிவரைக் கண்டு அவர் திருவடியில் விழுந்து நமஸ்கரித்து வணங்க, அவர் ஞானதிஷ்டியா லுணர்ந்து எமத்துவஜன் பிள்ளையாகிய மிருத்தியுஞ்சய ராஜனே! பானுமதியின் நாயகனே! நீ இராஜசுயயாகம் செய்தவனே! தருமத்திலும், சிவபத்தியிலுஞ் சிறந்தவனே! இரைக்குவமுனி சாபத்தால் இங்ஙனம் சாபமடைந்தனை என்று கூறி, அவ்வரசனுக்குச் சிவகத நாமமாலிகையினைப் போதித்து, இதனைப் பாராயணஞ் செய்துகொண்டு திருக்காளத்தியடைந்து சிவலிங்கந் தாபித்து, விபூதி ருத்திராட்சம் பூண்டு வில்வார்ச்சனைசெய்து வரக்கடவாய். உனக்குப் பழையபடி சகல பாக்கியமுங் கிடைக்குமென்று கூறிப் போயினர். அரசன் அங்ஙனமே தென்கைலை யடைந்து, சுவர் முகியிற் படிந்து, வாயுலிங்கத்திற்குச் சமீபம் தட்சண திசையில் மேற்கு முகமாகச் சிவலிங்கந் தாபித்து, சந்திர தீர்த்தத்திற்கு மேற்கேயொரு தீர்த்த முண்டாக்கி அதனாலபிஷேகித்தும் பூசித்தும் வருகையில், கார்த்திகைமாதம், சுக்கில பட்சம், ஆதிவாரம், கிருத்திகை யன்று பரமேஸ்வரன் அம்பாளுடன் பிரதம கணங்கள் சூழப் பிரத்தியட்சமாகி, அரசனே உனக்கு என்னவரம் வேண்டுமென்ன இராஜன், பலதரம் விழுந்து எழுந்து

ப்ரடி ஐயனே! எனக்குண்டாகி யிருக்கும் சாபம் விமோசனமாக் வேண்டும், நான்பூசித்த லிங்கம் மிருத்தியஞ்சய லிங்கமெனவும், நான் எடுத்த தீர்த்தம் மிருத்தி யஞ்சய தீர்த்தமெனவும், இதில் ஸ்நானஞ்செய்து இவ்விலிங்கப் பெருமானை வணங்கிச் சிவசத நாமமாலிகையினைத் தோத்திரம் செய்வோர் சகல பாபங்களினின்று நீங்கி மோட்சமடைய வேண்டும் என்றனர். அங்ஙனமே தந்தருளி, அரசனே! ஆயிரம் யானை பலம் தந்தனன். நீயுன் சத்ருக்களைச் செயித்து, இராச்சிய மடைந்து ஆண்டு சிவசத நாமமாலிகையைச் செபித்துக் கொண்டிருந்து பின்பு மோட்சமடையக் கடவா யென்று கூறி மறைந்தருளினர். (எத்தகைய பஞ்சகாலத்திலும் இச் சிவிலிங்கப் பெருமானை இத்தீர்த்தத்தைக்கொண்டு சிரசு முழுகும் படி செய்து அபிஷேகம் செய்யின் இக்காலத்திலும் மழைபெய்யு மாம்.)

மிருத்தியஞ்சய தீர்த்தம் முற்றிற்று.

---

# பாசவிச்சேதக தீர்த்தம்

---

யாதவமகாராஜனே! அவந்திமா நகரத்திலே புஷ்கரன் என்னும் பிராமணனுக்கு விஜயன் என்னும் புத்திரனென்பவ னொருவனிருந் தனன். அவன் தனது தந்தையிடத்து உபநயம் செய்துகொண்டு வேதபுராண விசாரங்களை நன்குதேர்ந்து, புஷ்டிகன் என்னும் பிரா மணன் புத்திரியாகிய சுபகா என்பவளை விவாகஞ்செய்துகொண்டு வாழ்ந்து வருகையில், ஒருநாள் மார்க்கண்டேய முனிவரைக்கண்டு வணங்கித் தனக்குச் சிவதத்துவோப தேசஞ் செய்தருள வேண்டு மெனக் கேட்டுக் கொள்ள முனிவர் அவன் விரக்தியனைத் தெரிந்து கொண்டு பிராமணனே! நீ திருக்காளத்தினை யடைந்து பொன்முக ரியில் ஸ்நானஞ் செய்து வாயுலிங்கேசுரனைப்பூசித்து வருவையேல் அப்பரமேஸ்வரன் உனக்குச் சிவதத்துவோபதேசஞ் செய்தருளுவ ரெனக்கூற அதுகேட்டு அவர்பால் விடைபெற்று மூன்றுமாதம் வழி நடந்து திருக்காளத்தியினை யடைந்து சுவாமிக்கு ருத்திராபிஷேகம் செய்து தனது மனைவிக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம்



வீட்டில் அமைத்து வைத்து இரவு தோறும்வந்து உணவு உண்டு மற்றைய போதெல்லாம் சிவாலயத்தில் தவஞ்செய்து கொண் டிருந்தனன். ஒருநாள் இரவு வீட்டிற்கு வருகையில் மனைவியான வள் கிருதகுள பாயசத்துடன் அன்னம் படைத்துப் பின்பு நாய கனைச் சமீபத்து அவனைத் தன்னுடன் சம்போகம் செய்யும்படி அவ னது இரண்டு கரங்களையும் பிடித்துத் தனது இரண்டு ஸ்தனங் களின்மேல் வைக்க, அந்த இரண்டு ஸ்தனங்களும் அவன் கண் களுக்கு இரண்டு சிவலிங்கமாகத் தோன்றிய மாத்திரத்தில் விஜயன் தனது மனைவியைப் பிரதட்சணம் செய்து வணங்கிக் கொண்டு கோயிலுக்குச் சென்று வாயுலிங்கத்திற்கு இரண்டு கடிகைத் தூரத் தில் சொர்ணமுகியின் தீரத்தில் ஒரு தீர்த்த முண்டாக்கி யதன் கரையில் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்து வருகையில் சுபகா கண்டு தனது நாயகனுடைய சமுசாரவிரக்தியையு மறிந்து தானும் தவஞ்செய்யக் கருதிச் சைவவேதிய மொருவரைச் சந் தித்து வணங்கியவரால் சிவாராதனை விதிதெரிந்து பூசைசெய்து வருகையில் பரமேஸ்வரன் இவளைச் சோதிக்கக்கருதி ஒரு யௌ வர்ண பிராமண வடிவங்கொண்டு வந்துமயக்க அவள் சிறிதும் சலியாதிருப்பதை யறிந்து தைமாசம் சுக்கிலபட்சம் சிரவண நட்சத்திரம் துவிதிய திதியில் பிரசன்னமாகி என்னவரம் வேண்டு மெனக்கேட்க அப்பெண் சுவாமி எனக்குச் சிவசாயுச்சிய பதவி தந் தருள வேண்டுமென அப்படியே யீந்து விஜயன் முன்னிலையில் சிராவணமாதம் சுக்கிலபட்சம் தனிஷ்டா நட்சத்திரம் சோம வாரம் பௌர்ணமியன்று பிரசன்னமாகி விஜயனே! நினக்குயாது வேண்டுமென அவன் ஐயனே! அடியேனுக்குச் சமுசார பந்தமொ ழிந்து சிவசாயுச்சிய மடைய சிவதத்துவோபதேசம் செய்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள சுவாமி அன்பனே! இவ்வித் தியாபீட மலையி லெழுந்தருளியுள்ள குமாரக் கடவுளிடத்தில் தெரிந்து கொள்ளுவாயெனக் கூறி மறைய, அங்ஙனமேசென்று சுப் பிரமணியக் கடவுளை வழிபட அவர் வெளிவந்து சிவதத்துவோப தேசஞ்செய்து விஜயனே நீ பிரதிஷ்டித்த சிவலிங்கம் விஜயலிங்கம் மெனவும், நீ யெடுத்த தீர்த்தம் பாசவிச்சேதக தீர்த்தமெனவும் வழங்கக்கடவதாகவென வரமருளி மறைந்தனர். (இந்த இடத் திற்கு இக்காலத்தில் விசாலபுரம் என வழங்குகின்றது.)

பாசவிச்சேதக தீர்த்தம் முற்றிற்று.

---

# நீலகண்ட - தீர்த்தம்

யாதவமகாராஜனே! ஸ்ரீநகரத்தில் வேதாக மேதிகாச புராணங்களில் வல்லவனாகிய சோமகன் என்னும் பிராமணன் புத்திரனாகிய நீலகண்டன் என்பவன் தீர்த்தயாத்திரை செய்து காசியினை யடைந்து அங்கிருந்த நாரதனைக் கண்டு வணங்கி முனிவரனே! நான் சிவபெருமானது திருநடன தரிசனம். செய்ய உத்தேசித்திருக்கின்றேன் அது கைகூடி வரும் விதம் எங்ஙனமோ. முனிவர், நீலகண்டனே! நீர் திருக்காளத்தியினை யடைந்து வாயுலிங்கேசனுக்கு மேற்கே இரண்டு கடிகை தூரத்திலுள்ள வீரக்ஷேத்திரத்தில் ஒரு தீர்த்த முண்டாக்கிச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்து வருவையேல் நடன தரிசனம் காண்பாயென, சந்தோஷித்துத் தென்கைலை யடைந்து நாரதர் சொன்னபடி பூசித்துவருகையில், பரமேஸ்வரன் விசுவகர்மாவைக் கொண்டு ஒரு நடனசாலையுண்டாக்கி வைகாசிமாதம் சுக்கிலபட்சம் திருவாதிரை சோமவாரம் பஞ்சமியன்று ஆனந்த நிருத்தனம் செய்தருளினர். பிரமன் தாளமும், நந்தி மத்தளமும், விஷ்ணுபேரியும், சரஸ்வதி வீணையும் தேவேந்திரன் புல்லாங்குழலும் வாசித்தனர் நீலகண்டரென்னும் பிராமணன் தரிசித்து வணங்கி அப்பனே! இத்தாண்டவம் இத்தலத்தில் வருடந்தோறும் திருவாதிரையில் செய்தருள வேண்டும், நான் பூசித்த சிவலிங்கப் பெருமானுக்கு நீலகண்டேஸ்வரரெனவும் நான் எடுத்த தீர்த்தம் நீலகண்ட தீர்த்தமெனவும் வழங்குதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள அங்ஙனமே யாகுகவெனக் கட்டளையிட்டு அந்தர்த்தியான மாயினர். (இக்காலத்தும், வருடத்திற்கொருதரம் திருவாதிரையில் காளத்தி நாதர் அவ்விடம் சென்று நடன தரிசனம் கொடுக்கின்றனர்.)

நீலகண்ட தீர்த்தம் முற்றிற்று.

## தத்துவப் பிரகாச தீர்த்தம்

யாதவமகாராஜனே! ஒருகாலத்தில் விஷ்ணு பிரமா இந்திரன் முதலிய தேவர்களும் அகஸ்தியர், நாரதர் முதலிய முனிவர்களும் திருக்கைலாய மடைந்து நந்தியம் பெருமானை வணங்கி விடைபெற்று சந்நிதானத்தை யடைந்து ஸ்ரீகண்ட பரமேஸ்வரரை வணங்கி விடைபெற்றுப் போயினர். நாரதமுனிவர் சத்தியலோக மடைந்து பிரம்மாவைக் கண்டு ஐயனே! கண்ணுதற் பெருமான் தனக்கு அனேகமான இரதங்களிருக்க அதனை நீக்கி இடபத்தின் மீது ஆரோகணிப்பானேன்? சந்தன முதலிய பரிமள திரவியங்களிருக்க விபூதியினைப் பூசிக் கொள்வானேன் ? இரத்தின முதலிய ஆபரணங்கள் அணியாது எலும்பினை தரிப்பானேன்? மேரு முதலிய புண்ணிய ஸ்தலங்களிருக்க மயானத்தி லிருப்பானேன்? தனது திருவுரு நீங்கி வைரவ கோலங் கொள்ளுவானேன்; ஆமையோடு, பன்றி கொம்பு, டமரகம், மான், சர்ப்பம், புலித்தோல் தரிப்பானேன்? இரத்தின பீடத்தை விட்டு மூர்ச்சை ரோகம் வாய்ந்த முயலகன் மீது நடிப்பானேன்? தேவர் சூழ்ந்திருக்கப் பேய்பூத முதலியவற்றுடன் வாழ்வானேன்? இச்சந்தேகங்களை நிவர்த்தி செய்தருள வேண்டுமென வேண்டிக்கொள்ள, பிரமாவானவர் நாரதரே திருக்காளத்தியினை யடைந்து ஒரு தீர்த்த முண்டாக்கி அதில் ஸ்நானம் செய்து அவ்விடத்தில் வித்தியாகுரு பீடமலையி லெழுந்தருளியிருக்கும் சண்முருகக்கடவுளைப் பூசிப்பையேல், அவர் பிரத்தியட்சமாகி இவை யனைத்திற்கும் சமாதானம் சொல்லுவர் என்றனர். அது கேட்டு நாரதர் திருக்காளத்தியினை யடைந்து பிரமன் கட்டளைப்படி நிறைவேற்றிக் குமாரக் கடவுளை வணங்கச் சண்முகக் கடவுள் வெளிவந்து நாரதனே! நீ எண்ணிய சந்தேகங்கட்கு விடையளிப்போம் கேட்கக் கடவா யென்று சொல்ல ஆரம்பித்தனர்.

உலக சம்மார காலத்தில் எல்லா மழிவுற்றபோது தருமம் என்பது தானழிந்து போகாதபடி சிவபெருமானை யடுத்து விடையுருவாய் நின்று எம்பெருமானே! இவ்வுலகத்தினுக்கு ஆதாரமாயிருந்து புண்ணியத்தினை விருத்தி செய்யும் நான் அழியாதபடி என்மீது தேவரீர் எழுந்தருளி யிருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள எம்பெருமா னிசைந்து அத்தருமத்தினை இடபமாகக் கொண்டனர். சர்வ சங்கார காலத்தில் நமது சங்கர மூர்த்தி இரட்சிக்கும்படி தனது நேத்திர விழியால் சுட்டெரித்த பஸ்பமாகிய விபூதியினையே யவர் அணிவது. ஆகவே அவ்விபூதிக்கு இரட்சையெனப் பெயருண்டாயிற்று. அச்சங்கார காலத்தில் மாண்ட பிரமா விஷ்ணுக்கள் எலும்புகளைத் தாங்கள் புனிதர்களாக அவர்கள் வேண்டுகோளின்படி தரித்துள்ளார். பிரபஞ்ச முடிவு காலத்தில் பிரமாதி தேவர்கள் பிணங்களாகி உலகம் மயானமாகவிருக்கும் சமயத்தில் பெருமான் தரித்து அம்பாள் காணத் திருநடனம் செய்தருளிய அம்மயானம் அக்காலத்தில் அவருக்கு இடமாகவிருந்தது. திருபாற்கடலைத் தேவர்கள் கடைந்த காலத்தில் மந்திரமலை ஆழ்ந்து விட அது அங்ஙனமாகாதபடி விஷ்ணு ஆமை வடிவங் தாங்கி அம்மலையைச் சுமந்து பாற்கடல கடைந்த பின்பு இக்காரியம் நம்மா லல்லவோ முடிந்ததெனக் கருவித்தபோது, அவ்வாமை

வுரு நீங்காதிருக்கையில் விஷ்ணு சிவபெருமானைச் சிந்திக்க அவர் வந்து அவர் ஆமை வுருவினை நீக்கிவிட நாராயணன் சந்தோஷித்துத் தனது கர்வத்தினை யொழித்ததற்கு அடையாளமாகத் தான் வடிவங்கொண்ட ஆமையோட்டினைத் தரித்துக்கொள்ள வேண்டுமென வேண்டிக்கொள்ள, ஆமையோட்டினைப் பூண்டனர். அரசனொருவன் ஒரு காலத்தில் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு பாதாளம்புக அதுகண்டு விஷ்ணு பன்றியுருவெடுத்துப் பாதாளம் புகுந்து அவனைக்கொன்று பழையபடியே பூமியை விரித்து நாமல்லவோ இங்ஙனம் செய்தோமெனச் செருக்குற்றபோது வராக வுருவம் நீங்காமையால் சிவபெருமானைத் தியானிக்க அவர் வந்து அவ்வுருவை மாற்ற விஷ்ணு வணங்கி எம்பெருமானே எனது செருக்கினை யொழித்ததற்கு அடையாளமாக எனது கொம்பினைத்தந்தருள வேண்டுமென அங்ஙனமே யிசைந்தனர்.

தாருகா வனத்து முனிவர்கள் தெய்வமென்பதை மறந்து யாகாதி காரியங்களால் மோட்ச மடையலாமெனக் கருதிக் கர்மபிரம வாதிகளாய் இருந்து கொண்டிருக்கையில் அவர்கட்கு உண்மையை வெளிப்படுத்த தான் பிட்சாடனராய் வைர கோலங்கொண்டு அவர்கள் பத்தினிமார்கள் முன்னிலையில் சென்று அவர்களை மயக்கியும், விஷ்ணுவை மோகினி யுருவ மெடுப்பிக்கச் செய்து முனிவர் முன்னிலையி லனுப்பியும் அவரை மயக்கியபோது அவர்கள் கோபங்கொண்டு விஷயாகம் வளர்த்தி யதிலுண்டாகிய முயலகன், டமரகம், மான், பாம்பு, புலி, பூதம் முதலியவற்றை யனுப்பிச் சிவபெருமானைக் கொல்லும்படி யனுப்பச் சுவாமியானவர் முயலகனை மிதித்துக்கொண்டு, புலியை யுரித்துத் தோலைப் பார்த்து மற்றை யவற்றைத் தனதுதிருக்கரங்களில் தாங்கிக்கொண்டனர், பூதமுதலிய யவற்றைச் சேனையாகக் கொண்டனர் என்று ஆறுமுகப் பெருமான் சொல்லிய மாத்திரத்தில் நாரதர் கேட்டு ஆனந்தங் கொண்டு எம்பெருமானே! எனது சந்தேகங்கள் ஒழிந்தன. இத்தலத்தில் நானெடுத்த தீர்த்தத்திற்குத் தத்துவப் பிரகாச தீர்த்தமென வழங்கக் கடவது எனக் கேட்டுக்கொள்ள அங்ஙனமே யாகுக வெனக் கூறி மறைந்தருளினர்.

தத்துவப்பிரகாச தீர்த்தம் முற்றிற்று.

# சந்திர தீர்த்தம்.

யாதவமகாராஜனே! பூர்வகாலத்தில் சந்திரனாவன் தட்சப்பிரஜாபதியின் புத்திரிகளாகிய அசுவினி முதலாகிய இருபத்தேழு பெண்களை விவாகஞ்செய்து கொண்டு வாழ்ந்து வருகையில், அவர்களுள் அதிக சௌந்தரியம் வாய்ந்த உரோகணி என்பவளை மாத்திரம் அதிகப் பிரியத்துடன் சினேகித்து மற்றைய பெண்களை வெறுத்திருந்தனன். இதுகண்ட மற்றையவர்கள் தமது பிதாவாகிய தட்சனிடம் சென்று தமது குறைகளைச் சொல்லி வருத்தமுற்று அவனிடமே யிருந்து விட்டார்கள். இதுசங்கதி சந்திரனறிந்து ஒருநாள் தனது மாமனாராகிய தட்சனிடம் சென்று சமாதானம் கூறி இனித் தான் எல்லாப் பெண்களிடத்தும் சமமாக விருந்து வாழ்வதாகச் சத்தியஞ் செய்து கொடுத்துத் தனது மனைவியர்களை யழைத்துக் கொண்டு வந்து விட்டனன். பின்னரும் பழையபடியே சந்திரன் உரோகணியினிடமே மிக அன்புபாராட்டி வந்தனன். இது விஷயம் தட்சன் கேள்வியுற்று அதிக கோபங்கொண்டு சந்திரனிடம் வந்து அவனை நோக்கிச் சந்திரனே! நீ முன்னமே குருபத்தினியை விழைந்த மகாபாவியாக விருக்கின்றனை. இப்போது நீ என்னிடம் செய்து கொடுத்த சத்தியத்தினை மறந்தனை. ஆகையால் அன்று முதல் நீ க்ஷயரோகியாய் வருந்திக் கொண்டிருக்கக் கடவை என சபித்து விட்டுப் போயினன்.

சந்திரன் இதுகேட்டு மிக வருத்த மடைந்து தனது ஒளியனைத்தும் குறைந்து மிகுந்த க்ஷய நோயுடையனாய்த் தன்னுலகை விட்டு நீங்கி வடதிசை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் அகஸ்திய மகா முனிவரைக் கண்டு வணங்கித் தனது குறைகளனைத்தையும் சொல்ல அவர்கேட்டு மனமிரங்கி, சந்திரனே! உன் துன்பமனைத்துமொழிய உனக்குச் சூழ்ச்சி சொல்லுகின்றேன் கேட்பாயாகவென்று சொல்லுவாராயினார். சந்திரனே! இந்த மேருமலைக்குத் தெற்கே எழுபத்திரண்டு யோசனை தூரத்தில் பூர்வத்தில் பிரமதேவற் பூசிக்கப் பெற்றுப் பலவரங்களை யடைந்த கைலாச சிகரமாகிய சிவானந்த நிலயமென்னும் தென்கைலாயமென்கிற திருக்காளத்தியை யடைந்து இதற்கு வாயுதிசையில் வாயுபகவானால்

பூசிக்கப் பெற்ற வாயுலிங்கத்தினைத் தரிசித்து அதற்கு மேற்றிசையிலுள்ள சுவர்ணமுகி நதியின் நிருதிதிக்கில் கால்கடிகை தூரத்திலுள்ள பிரபாச க்ஷேத்திரமென்னுந் தலமுண்டு. அவ்விடத்திலுள்ள பிரபாச தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து தும்பை, வில்வம் கொண்டு சிவலிங்கப் பெருமானைப் பூசித்து வருவையேயாகில் உன்னுடைய நோய் நீங்கிப் பழையபடியே பிரகாசமுற்று வாழ்வாயென்று சொல்லிவிட்டுப் போயினர். சந்திரன் அதுகேட்டு ஆனந்தமடைந்து அங்ஙனமே அத்தலம் சென்று தீர்த்தமாடிப் பூசையெய்து வருகையில் பரமேஸ்வரன் பார்வதிசமேதராய் இடபவாகனரூடராய்ச் சித்திரைமாதம் சுக்கிலபட்சம் சோமவாரம் பரணிநட்சத்திரம் அமாவாசைக்கு மூன்றாம்நாள் பிரத்தியட்சமாகிச் சந்திரனே! உனக்கு என்னவரம் வேண்டுமென்று கேட்கச் சந்திரன் கீழே விழுந்து நமஸ்காரம்செய்து பலவாறு தோத்தரித்து ஐயனே! எளியோனை ஆட்கொள்ளவந்த தெய்வமே! தட்சன் எனக்குக் கொடுத்த சாபமொழிந்து க்ஷயரோகம் நீங்கிப்பழையபடியே எனது பிரகாசத்தினைப் பெற்று வாழ்தல்வேண்டும். அடியேன் ஸ்நானம்செய்த தீர்த்தம் சந்திரதீர்த்தமெனப் பெயர் வழங்கவேண்டும். எனக்குப் பிரத்தியட்சமான இந்த தினத்தில் உன்னை வணங்குவோர் யாவருக்கும் நோயனைத்து மொழிந்து சுகமாக வாழ்தல்வேண்டும் என்று வேண்டிக்கொண்டனன். அங்ஙனமே யாகுகவென்று வரமளித்துச் சுவாமி மறைந்தருளினர்.

சந்திரதீர்த்தம் முற்றிற்று

---

# சூரிய புஷ்கரணி தீர்த்தம்

---

யாதவமகாராஜனே! வெள்ளியங்கிரியாகிய மகா கைலாசத்திலே ஒருநாள் பார்வதி சமேதராகப் பரமேஸ்வரன் திருவோலக்கங் கொண்டெழுந்தருளி யிருக்கையில், பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களனைவரும் வந்து பெருமானை நமஸ்காரஞ்செய்து ஒரு புறமிருந்து கொண்டிருந்தனர். அச்சமயத்தில் அவ்விடம் தட்சப்பிரஜாபதி வந்தனன். இவனைக்கண்ட மாத்திரத்தில் இவன் சிவ பெருமானுக்கு மாமனார் என்ற முறைமையால் தேவர்களெல்லாம் எழுந்து




வணங்கி உட்கார்ந்தனர். பரமசிவம் தனக்குத் தட்சப்பிரஜாபதி மாமனென்னும் முறையால் இவனை வணங்கில் அவனுக்கு ஆயுள் குறைந்துவிடுமென்றெண்ணிச் சும்மாவிருந்தனர். இந்த உண்மையினைத் தட்சகன் தெரிந்து கொள்ளாமல் கோபங்கொண்டு திரும்பித் தனதிருப்பிடம்வந்து சிவபெருமானைநீக்கியாகமொன்றுநடத்தக்கருதி எல்லா தேவர்களையும் அழைப்பித்து ஒரு பெரியவேள்வி ஆரம்பித்தனன். இதுசங்கதி பார்வதி தெரிந்து அந்த யாகத்திற்குப் போகச் சுவாமியை நோக்கி விடை கேட்க அவர் மறுத்தும் கேட்காமையால் மௌனமாயிருந்து விட்டனர். அம்பாள் உடனே சுவாமியை வணங்கிக்கொண்டு தனது பிதா நடத்தும் யாகசாலைக்கு வந்தனள். அங்கிருந்த தேவரனைவரும் தட்சன் உத்திரவின்படி அம்பாளை வணங்காமலிருந்தார்கள். அச்சமயத்தில் யாகத்தில் உருத்திரமூர்த்திக்குக் கொடுக்கவேண்டிய அவிர்ப்பாகத்தை அவருக்குக் கொடாமல் வேறு தேவருக்குக் கொடுக்க ஆரம்பித்தனர். அம்பாள் தடுத்தும் தட்சன் கேட்கவில்லை. சூரியனும் பிருகுமுனியும் தட்சன் செய்த காரியமே தகுதியென்றார்கள்.

இவற்றையெல்லாங் கண்டு அம்பாள் கோபங்கொண்டு இந்த பாவியாகிய தட்சனுக்கு ஏன் நாம் புத்திரியாகப் பிறந்தோம். அவனுக்குப் பெண்ணாக வந்த இத்தேகத்தை வைத்திருப்பது தகாதென்று சிவாக்கினி வளர்த்து அதில் மூழ்கி மறைந்தருளினள். இவ்வுண்மையனைத்தும் சிவபெருமான் தெரிந்து சிறிது கோபமுடையர்போலத் தமது சடையினைக் கீழே மோத அதிலிருந்து வீரபத்திரக்கடவுள் பிறந்தனர். அவ்வீரனைச் சுவாமி நோக்கி, புத்திரனே! நீ உடனே தட்சன் நடத்தும் யாகசாலைக்குச் சென்று அதனை அழித்துவருவாயென்று கட்டளையிட்டனுப்பினர். அவ்வீரனும் உடனே வேள்விசாலையடைந்து அச்சாலையினையழித்து அவ்விடமிருந்த தேவர்களையெல்லாம் பிடித்து தண்டித்துச் சூரியன் தாடையில் ஒரு அறை கொடுத்தனர். அவன் பல்லனைத்தும் உதிர்ந்து விட்டன. அதனால் அதந்தனன் என்னும் பெயர்பெற்றுச் சூரியன் மிகமெலிவடைந்து வருத்தமுற்றுப் பிரமாவினிடம் சென்று முறையிட அப்பிரமன் சூரியனை நோக்கி, அன்பனே! நீ தட்சணதிசையில் உள்ள சுவர்னமுகிநதி தீரத்திலுள்ள கைலாச

சிகர சிவானந்த நிலயத்தின் வாயுதிசையில் பிரபாச தீர்த்தத்தில் சென்று அத்தல தீர்த்தமாடி வில்வங்கொண்டு பூசிப்பையேல் நீ பழையபடியாகுவை யென்றனர். அதுகேட்ட சூரியன் அங்ஙனமே தென்திசைநோக்கிக் கங்கை முதலிய தீர்த்தமாடி அவ்விடம் வந்து அத்தலத்தின் தென்திசையில் ஒரு பர்ணசாலை யேற்படுத்தி மூன்று வேளையும் வெள்ளருக்கு மலர்கொண்டு பூசித்து வருகையில் வைகாசிமாதம், சுக்கிலபட்சம், சுவாதிநட்சத்திரம், சுக்கிரவாரம் சதுர்த்தசியன்று சிவபெருமான் அம்பாள் சமேதராய் வாயுலிங்கத்தினின்றும் வெளிவந்து காட்சிகொடுக்க சூரியன் கண்டு யலதரம் வீழ்ந்து எழுந்து நமஸ்காரஞ்செய்து தோத்திரம்செய்து அடியேனை ஆட்கொள்ளவந்த அப்பனே! நான் தட்சன் யாகத்தில் செய்த அபராதத்தினை மன்னித்தருள வேண்டும். நான் பழைய படியே பற்களை வாய்ந்து வாழவேண்டும். நான் தவம்செய்த இட் சேத்திரமும் ஸ்நானம்செய்த பிரபாச தீர்த்தமும் எனது பேரால் பிரசித்தி பெறவேண்டுமெனவும், நான் பூசித்த புஷ்பங்கள் அர்க்க புஷ்பங்களெனவும், இத் தீர்த்தத்திற்கு சூரிய புஷ்கரணியெனவும் பெயரிட்டு, சுவாமிக்கு இந்த தீர்த்தமே தினந்தோறும் அபிஷேகத் திற்கு உபயோகமாகும் படியாகவும் அருள்புரியவேண்டும். அன்றியும் தேவரீரைத் தரிசிக்கின்றவர்கள் யாவரும் சகல சாம்பிராச் சியங்களுடன் வாழவேண்டுமென வரங்கோறினன். அங்ஙனமே ஆகுகவெனத் திருவாய்மலர்ந்தருளிச் சுவாமி மறைந்தருளினர்.

சூரியபுஷ்கரணி தீர்த்தம் முற்றிற்று.





## தலவிசிட்டச் சருக்கம்.

யாதவமகாராஜனே! இதுகாறும் கூறிய தென் கைலாயமாகிய திருக்காளத்தி என்னும் திவ்விய தலத்திலே தைப்பொங்கல் மகோற் சவத்திற்கு மறுநாளிலும் மாசிமாதம் நடக்கும் பிரம்மோற்சவத் தின் கடைசிநாளிலும் சிவபெருமானைத் தரிசிப்பது அதிக விசே ஷம். இத்தலத்தில் அங்கப்பிரதக்ஷணம் செய்பவர் சிவசாயுச் சியமே யடைவர். அடிமேலடிவைத்துப் பிரதட்சணஞ் செய்பவர் பிரமகற்பம் வரையில் கைலாசத்தில் வாழ்வர். அடிக்கடி சாஷ் டாங்க நமஸ்காரஞ் செய்பவர் பத்துலட்சம் அசுவமேதயாகபலனை யடைவர். சிவத்தியானத்துடன் மெல்ல நடப்பவர் சாலோக்கிய மடைவர். வலம் இடமாகப் பிரதட்சணஞ் செய்பவர் சாரூபமடை வர். வாயுலிங்கத்தினைப் பச்சைக்கற்பூரத்தால் அபிஷேகித்து வில்

வத்தால் அருச்சனைசெய்பவர் சகல சாம்பிராச்சியத்துடன் நன்மனைவி புத்திர பௌத்திரருடன் வாழ்வர். நித்தியோற்சவம், பட்சோற்சவம், மாதோற்சவம், வருடோற்சவம், பிரமோற்சவம், கிருஷ்ணபட்சம், தசமிமுதல் சதுர்த்தசிவரையில் நடப்பதில் இடபவாகன உற்சவம், அமாவாசையுற்சவம், இரதோற்சவம் தரிசிப்பதுடன் வித்தியாபீடத்தில் எழுந்தருளியிருக்கும் சண்முகப் பெருமானுக்கு நடத்தும் பிரமோற்சவம் முதலியன தரிசிக்கின் அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அனுபவிக்கும் செல்வத்திற்கு அளவே கிடையாது. ஆதலின் இவ்வுலகில் இக்காளத்தி தலத்திற்குச் சமானமானது கிடையவே கிடையாதென்று யாதவ மகாராஜனுக்குச் சங்கமவேடந் தாங்கிவந்த பரமேஸ்வரர் சொன்னதாக நைமிசாரணிய முனிவரர்களுக்குச் சூதமகா முனிவர் திருக்காளத்திச் சரித்திர மகிமையினைக் கூறி முடித்தனர். சுபம்.

தலவிசிட்டச் சருக்கம் முற்றிற்று.

---

சிவப்பிரகாச சுவாமிகள்,

பூவை-கலியாணசுந்தரர் இயற்றிய

ஸ்ரீகாளத்தி புராணம் முற்றிற்று.

85746

---

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.

மடு றுளும் சொல்லலாகும்
அப்பனே பெண்மலடு யாருமில்லை
வந்மலடாய்ப் போவதென்று கேட்பாயாகில்
மசூ இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
வேண்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங்கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கை செய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.



ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதனுலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதை வளர்ந்து சோறீ பற்றீ இரத்தங்கட்டி யிருந்தாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச் சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனுலும் கருதரிக்காது.

இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருதரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கி யிருந்து திடீரென்று உடைந்து போவதுண்டு. இவ்வகைத்தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கருதரிக்கும்.

இதன் விலை ரூபா 2.

இந்திர கவசமென்னும்

# சர்வ தேவதா வசியம்

(பீஜாக்ஷர யந்திரங்களடங்கியது.)

மனிதர், பேய் பிசாசுகளால் வருந்துன்பங்களினின்று நீங்கி, பகைவர் செய்யும் பில்லி சூனியம் மாரணம் முதலியவை தங்களிடம் ஏறாதபடி செய்தும் நோய் நொடிகள் அணுகாமல் தடுத்தும், தேவதைகளையும் மனிதர்களையும் வசப்படுத்தியும் எவ்விடத்தும் எக்காரியத்திலும் ஜெயம் பெற்றும் மிகுந்த ஐசுவரியத்தையும் செல்வாக்கையும் அடைந்தும் வாழ்வதற்கே பிரியப்படுவார்கள், இவற்றை எல்லாம் எளிதில் அடையக்கூடிய மந்திர யந்திரங்களும், அவற்றை அனுஷ்டித்துச் சித்திபெறக்கூடிய மார்க்கங்களும் இதில்விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இதில் ஒவ்வொரு தேவதைக்கு மூல மந்திரங்களும், யந்திரங்களும், பூஜைகளும், தண்ணீர்மந்திரித்தல், வேப்பிலை மந்திரித்தால், விபூதிபிடித்தல், பிசாசு விலக்கல், கழிப்புக் கழித்தல் மந்திரங்கட்டல் முதலியவைகளும் நக்ஷத்திர பலாபலன்களும், அவற்றிற்குச் சாந்திகளும் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

முதல் பாகமும் இரண்டாம் பாகமும் சேர்ந்து விலை ரூபா 1.

விலாசம்:—N. A. துரை அண்டு கம்பெனி,
நெ. 63, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்து தெரு,
சவுகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.